1107

T. N. L. A. Debates

V. 38 No. 3. 199

C

D
V211,31'N50
N90.33.3

7-3-1991 Issued 7-3-1991

தமிழ்நாடு
-மன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# EGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

ாழக்கிழமை, மே 10, 1990 - தொகுதி 33 - எண் 3
sday, the 10th May, 1990-Volume 33-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

ரூ. 3.00] [Price: Rs. 3-00

143984
சென்னை-600 008.
D
Y 211,31'N90
N90.33.3

## உள்ளடக்கம்

10–5–1990


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். .. .. | 297—328 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) தாம்பரத்தில் ஒரு பள்ளியில் ஆர். எஸ்.எஸ். பயிற்சி அளிக்கப்படுவதாக வந்துள்ள செய்தி குறித்து .. .. | 328 |
| (ஆ) வேளாண்மைத் துறை அமைச்சர் எதிர்க் கட்சித் தலைவர் மீது கூறிய குற்றச்சாட்டு மற்றும் சமுதாய நலப் பணியாளர்கள் நியமனத்தில் முறைகேடுகள் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச் சாட்டு குறித்து .. .. .. | 329—363 |
| (இ) புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திர மாநிலத்திற்கு உதவியளித்தல், ... .. | 401—402 |
| 3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்— | |
| (அ) தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளி லிருந்து சென்ற மீனவர்கள் திரும்பாதது பற்றியும் புயல் விளைவித்த பாதிப்பு களை யொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் முதலமைச்சரின் அறிக்கை .. .. .. .. | 333—336 |
| (ஆ) டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர்கள் மாநாட்டின் நடவடிக்கைகள் குறித்தும் மூடப்பட்ட மில்களைத் திறக்க எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் தொழிலாளர்கள் நலத்துறை அமைச்சரின் அறிக்கைகள் .. .. .. | 337—342 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) 1990–91 ஆம் ஆண்டிற்கான பேரவைக் குழுக்கள். .. .. .. .. | 342—344 |
| (ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு 1990 (ஆ.ஓ.) | 390 |
| (இ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ) .. | 421 |

5. கவன ஈர்ப்பு—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வெள்ளயம் காவியம் கிராமத்தில் வனத்துறை அலுவலர் ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்ததால் ஏற்பட்டுள்ள நிலை .. .. .. .. 345—352

(ஆ) வாணியாற்று அணையிலிருந்து பாசனத்திற்கு நீர் விடப்பெறாதது. .. .. 352—354

6. தனியார் அலுவல்—
நிலச்சீர்த்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு, 1990 (அறிமுகம் செய்தல்) .. .. 355

7. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)—
மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. .. .. 355

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 .. .. 356—375

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. .. 376—384

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990 .. .. 384—389

(ஈ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1990 .. 390—401

(உ) பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை நிவாரண சட்ட முன்வடிவு, 1990 402—420

(ஊ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த)சட்ட முன்வடிவு, 1990 .. 421—437

௯. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். . 437

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 27, பிரமோதூத–திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, மே 10, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்;

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு,"

அறிவுடையவரின் நட்பு, பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது. அறிவில்லாதவரின் நட்பு, முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையது.

### 1. வினாக்கள்–விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

சட்டக்கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் உதவிப் பேராசிரியர்கள்.

*2172 திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள சட்டக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

(இ) அவர்களை காலியிருக்கும் நிரந்தரப் பணியிடங்களில் நிரந்தரமாக நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்புக் கல்வி ஆண்டில் 1989–90 ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மொத்தம்:—

| விரிவுரையாளர் மேல்நிலை சட்டம் | விரிவுரையாளர் மேல்நிலை சட்டமல்லபாடம் | பகுதிநேர விரிவுரையாளர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 23 | 8 | 18 |

(இ) ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட நபர்கள்–ஆசிரியர்கள் தேர்வாணையத்தினால் தேர்வு செய்யப்பட்டால் நிரந்தரப்படுத்த இயலும்.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டால், அவர்களுக்கு நிரந்தரமாகப் பணி வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், இந்த சட்டக் கல்லூரியில் பணிபுரியக்கூடிய சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், நான்கைந்து ஆண்டு காலமாக தொடர்ந்து அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள், அரசினால்தான் நியமனம் செய்யப்பட்டார்கள். எனவே நீண்ட காலமாக, அரசினால் நியமனம் செய்யப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றக் கூடிய அவர்களை, தேர்வு வாரியம் மூலமாகத்தான் அவர்கள் நிரந்தரப் பணியிலே அமர்த்தப்படுவார்கள் என்பதற்கு பதிலாக, நிரந்தர காலியிடங்களில் அவர்களைப் பணியில் அமர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் அந்தவகையில் இல்லை. இப்போது, அப்படிப் பணியாற்றக் கூடியவர்களின் மொத்த எண்ணிக்கையே 50 பேருக்குள் தான். அந்த 50 பேரும் கூட, தற்காலிகமாக மட்டும்தான் நியமிக்கப்பட அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களுடைய தகுதிகளைப் பார்த்து, அரசாங்கம் நியமித்தாலும் கூட, தேர்வாணைக்குழு, அதன் மூலமாக இன்னும் தேவைப்படக் கூடியவர்களின் பட்டியலையும் சேர்த்து நடத்தும் தேர்வில் அவர்கள் அந்தத் தகுதியினாலே தேர்வு செய்யப்படுவார்களேயானால், தேர்வாணையம்தான் அவர்களைப் பணியில் அமர்த்த முடியும், அப்படிப்பட்ட தேர்வாணையத்தின் மூலமாக நிரந்தரமானப் பணி வழங்கப்படலாம் என்பதுதான் அரசாங்கத்தினுடைய விதிகள் நமக்குக் கூறுகின்றன.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, தேர்வு வாரியத்தின் மூலமாகத்தான் அவர்களை நிரந்தரப் பணியிலே அமர்த்த முடியும்; அதுதான் விதி என்று சொன்னார்கள், நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்கள் இத்தனை ஆண்டுகாலமாகப் பணிசெய்ததன் காரணமாக அவர்கள் அனுபவம் மிக்கவர்களாக, கல்வி போதிப்பதிலே திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே, அனுபவம் இல்லாதவர்களும், இவர்களும் ஒரேயடியாகத் தேர்வாணையத்தால் பரிசீலனை செய்யப்பட்டு, அனுபவம் இல்லாதவர்களை எடுப்பதற்குப் பதிலாக, இப்படி அனுபவம் பெற்ற, கல்வி போதிப்பதிலே திறமை பெற்ற இவர்களை, முன்னுரிமை கொடுத்து, எடுக்க



வேண்டுமென்றாவது, தேர்வாணையத்திற்கு அரசாங்கம் பரிந்துரை செய்ய இயலுமா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை என்ற அந்த வார்த்தை, நேரடியாக இடம் பெறாவிட்டாலும் கூட, அவர்கள் ஆசிரியர்களாக இருந்து பணி செய்த காலத்திற்கு, அதற்கான ஒரு தகுதி மதிப்பெண் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்தவகையில் அவர்கள் தேர்வு பெறலாம். மற்றொன்று, இப்படிப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கப்படுகிறபோது, "கம்யூனல் ரொட்டேஷன்" பார்க்கப்படுவது இல்லை. வகுப்பு விகிதாச்சார அடிப்படையில் நிரந்தரப் பணிகள் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை, தேர்வாணையத்தின் மூலமாகத்தான் நாம் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கிறோம்.

**திரு. வீ. பெ. துரைச்சாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் எத்தனை தனியார் சட்டக்கல்லூரிகள் இருக்கின்றன? அங்கே படிக்கிற மாணவர்கள், நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றபின் தான் சேர்க்கப்படுகிறார்களா? அல்லது வேறு எந்த முறையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்கான விடை இப்போது என் இடத்திலே இல்லை. தனியார் கல்லூரி ஒன்று இருப்பதாக நான் அறிவேன். அது பற்றிய விவரம் இப்போது கூற வாய்ப்பில்லை.

**திரு. அ. வெ. சுப்புரமணியன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் சென்னையிலே மட்டும்தான் சட்டக்கல்லூரி இருந்தது. நான் எல்லாம் அங்கே படித்த மாணவன். அதற்கு ஒரு தகுதி அல்லது பல்கலைக் கழகத்தைப் போன்ற ஒரு பெருமதிப்பு இருந்தது. இப்போது பல சட்டக் கல்லூரிகள் தோன்றி அவை உயர்நிலைப்பள்ளியைப்போல் ஆகிவிட்டன. மேலும், ஆசிரியர்கள் அடிக்கடி ஒப்பந்த அடிப்படையில் மாற்றப்படுவதால், கல்வியினுடைய தரமும், போதிக்கப்படுகின்ற அந்தத் தரமும் குறைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, நிரந்தரமாக இப்படிப்பட்ட சட்டக்கல்லூரிகளிலே நிரந்தர ஆசிரியர்களை, நல்ல ஆசிரியர்களை நியமிக்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இரண்டு விதமான கருத்தும் கண்ணோட்டமும் தொடர்ந்து, அதுவும் வேறு எங்கே ஏற்படாவிட்டாலும், சட்டமன்றத்திலே ஏற்படும்.

சென்னையிலே மட்டும் கல்லூரி இருந்தபோது சிறந்த வழக்கறிஞர்கள் வந்தார்கள் என்று ஏ.எல்.எஸ். அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் திருநெல்வேலியிலே ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று இன்னொரு நேரத்திலே அவர்கள் கேட்பார்கள், கேட்டும் இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அதைப்போல, ஒப்பந்த அடிப்படை ஆசிரியர்கள் எல்லாம் சிறந்த பயிற்சி, தேர்ச்சியுடைவர்களாக இருக்கிறார்கள் என்று திரு. நூர்முகமது அவர்கள் சொல்கிறபோது, தேர்வாணையம் மூலம் சிறந்த தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுக்க, நிலையாக நியமிக்க வழி செய்யப்படுமா என்ற கேள்வி எழுகிறது. எனவே, இவைகள் எல்லாம் எழுகின்ற கேள்விகள். அவைகளுக்கான சரியான பதிலைச் சொல்ல எனக்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல்கலைக்கழகங்கள் கூட இப்படி விரிந்து கொண்டு போனால் ரொம்ப சிரமமாக இருக்கும். எனவே, திருநெல்வேலி பல்கலைக்கழகத்தை முடிந்தால் நிறுத்தி வைக்கலாமா என்று கேட்டுக்கொள்ளலாம். (சிரிப்பு)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** சபாநாயகர் அவர்களே, தனியார் சட்டக்கல்லூரிகளிலே ஆசிரியர் நியமனம், புரொபசர்ஸ் மற்றும் லெக்ச்சரர்களுக்கு, கான்ட்ராக்ட் பேசிஸுக்கு ஏதாவது, சர்க்காரினாலே சட்டத்திலே ரெகுலேட் பண்ணப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி விவரங்கள் தெரிவிக்க முடியும்.

**தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம்.**

*6624 **திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்க புதிய வழிமுறைகளை அரசு செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு இப்போது நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் மானியம் எல்லாம் வழங்குகிறோம். ஆனால் பல தனியார் பள்ளிகள் அல்லது கல்லூரிகள், அரசாங்கத்தினுடைய விதியைப் பின்பற்றாமலே இன்றையதினம் ஆசிரியர்களை நியமிக்கிற ஒருநிலை இருக்கிறது. அதை மாற்றி, ஆசிரியர்கள் நியமனத்திலே அரசாங்கத்தின் கண்காணிப்பு இருக்கின்ற வகையில் சட்டம் திருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நியமிக்கப்படும் ஆசிரியர்கள் இன்ன முறைப்படி நியமிக்கப்படவேண்டும் என்று பொதுவான விதி இருக்கிறது: அந்த விதியின்படி நியமிக்கப்பட்டார்களா என்பதைக் கண்காணிக்கக்கூடிய அந்த வாய்ப்பு அரசிற்கு இருக்கிறது. என்றாலும் அரசு கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவரும் அந்தக் குழுவிலே இடம் பெற்று, ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படவேண்டும் என்று ஏற்கெனவே பள்ளிக்கூட நிருவாகங்களுக்கு அரசு தெரிவித்த ஆலோசனைக்கு பல மறுப்புகள் எழுந்தன. அந்த அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்கொன்று இருக்கிறது. எனவே, தற்போது இது சம்பந்தமான வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் வழக்கின் முடிவுதெரியும் வரை, எந்த நடவடிக்கையும் அதன் மேல் எடுக்கமுடியாத நிலையில் அரசு இருக்கிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். சரி, புதிய முறை கொண்டு வருவதற்கு வழக்கு இருந்தாலும், ஏற்கெனவே அரசாங்கம் கடைப்பிடிப்பதை போல தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் போன்ற அந்த சாதி விழுக்காடாவது தனியார் பள்ளிகளிலே கடைப்பிடிக்கப்படுகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நினைவிலே இருந்துதான் நான் இதற்கு விடை கூறுகிறேன். ஏற்கனவே உள்ள அரசாணையில் அரசு உதவி பெறுகிற கல்வி நிறுவனங்கள் எவையாக இருந்தாலும், அவைகளில் பணிகளில் சேர்க்கப்படுகிறபோது, அரசாங்கத்தினுடைய வகுப்பு வாரி உரிமை அடிப்படையை ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும் என்ற கருத்து இருக்கிறது. ஒருவேளை இல்லையானால், அதைப் பரிசீலிக்க நான் தயாராக இருக்கிறேன்.

9—10 மணி

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தனியார் பள்ளி நிறுவனங்களில் சுழற்சி முறையில் வேலைவாய்ப்பு பெறுகின்ற நேரத்தில், 'ஓ.சி." பி.சி.', எல்லாம் போட்டுவிட்டு, கடைசியாக 'எஸ்.டி.

வருகிற நேரத்தில், நிலையான பதவி வந்துவிடக் கூடாது என்பதற்காக அந்த நேரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவரை தற்காலிகமாகப் பணியில் அமர்த்திக்கொண்டு, அதைப் பட்டியலிலேயும் இருக்கிறார் என்று காட்டி, நிரந்தரமானப் பணியை வேறு இனத்தவருக்குத் தந்துவிட்டு, தாழ்த்தப்பட்டவரை வேண்டுமென்றே ஒதுக்கிக் கொண்டிருக்கிற தனியார் பள்ளி நிறுவனங்களின் இச்செயலை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பது பற்றி அவ்வப்போது வருகிற புகார்கள் விசாரிக்கப்படுகின்றன. தற்காலிகமான பணிக்கு ஒரு தனி 'ரொட்டேஷன்' சுழற்சி முறையும் நிரந்தரப் பணிகளுக்கு இன்னொரு 'ரொட்டேஷன்' முறையும் வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இரண்டு விதமான சுழற்சி முறையையும் ஒரே முறையாக ஆக்க முடியுமா என்பது இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் புதிதாக ஆசிரியர்களை நியமிப்பதற்கான புதிய வழிமுறைகள், தற்போது இயற்ற இயலாது என்று தெரிவித்தார். ஏற்கெனவே ஆசிரியர்களை நியமித்து இருக்கக்கூடிய தனியார்பள்ளிகள், பாலிடெக்னிக்குகள் போன்றவைகளிலெல்லாம், விடுமுறை நேரங்களில் அவர்களை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, விடுமுறை முடிந்த பின்னர், புதிய ஆசிரியர்களாக அவர்களை வேலைக்கு எடுக்கக்கூடிய கொடுமையான நிகழ்ச்சிகள், இன்றைக்கு பள்ளிகளிலேயும், குறிப்பாக, பாலிடெக்னிக்குகளிலும் மிக அதிகமாக நிலவுகிறது. ஆகவே, அவர்களுக்கு தொடர்ச்சியாக ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிற விதிமுறைகளின்படி, அவர்கள் ஆசிரியர் பணியிலே ஈடுபடுவதற்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகப் பணி, நிரந்தரப் பணி என்ற இரண்டு வகையிலும் ஆசிரியர்களை, எந்த பாலிடெக்னிக்காக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக இருந்தாலும், தனியார் நிர்வாகம் எடுக்க வாய்ப்பு இருக்கிறது. தற்காலிக பணிக்கு எடுக்கிறபோது, சில விதி முறைகள் பின்பற்றப் படுவதில்லை. நிரந்தரப் பணிக்கு எடுக்க வேண்டுமானால், அந்தத் தற்காலிகப் பணிக்கு இல்லாத விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, உடனடி தேவைக்காக எடுப்பவர்களை நிரந்தரப் பணியிலே நீடிக்க வேண்டுமென்று வலியுறுத்துவது, அரசாங்கத்தினுடைய விதிமுறைகளுக்கு மாறுபட்டதாகும்.

**திரு. செங்கைசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் பதில் சொல்கிறபோது, தனியார் பள்ளிகளில் ஆசிரியர் நியமனம் குறித்து வழக்கு மன்றம் சென்றிருப்பதாக சொன்னார்கள் கடந்த காலங்களில் அதிகமாக கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் இப்படிப்பட்டவர்கள் வழக்குமன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள், இந்த நியமனம் குறித்து. ஆகவே, வருங்காலத்தில் பெருகிவரும் மாணவர்களின் எண்ணிக்கையும், அந்த நேரத்தில் வளர்ந்துவரும் பள்ளிகளினுடைய எண்ணிக்கையையும், அரசினுடைய நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு, இனி வருங்காலத்திலாவது இதைத் திருத்தி அமைக்கின்ற அல்லது அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணுகின்ற ஒரு எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிற எந்தத் திட்டமாக இருந்தாலும், அல்லது கொள்கையாக இருந்தாலும் அவ்வப்போது ஏற்படுகிற பிரச்சினைகளை சிக்கல்களை வைத்து, மறு ஆய்வு செய்வது அரசாங்கத்தினுடைய மரபு. அந்த முறையிலே தொடர்ந்து, இதுவும் ஆய்விலே வரும்.

**திரு. ப. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் இதுபோல விதிமுறைகள் சரியாக பின்பற்ற முடியாமல் இருக்கிற நிலைமை போல, பல குறைபாடுகள் இருப்பதால், இது சம்பந்தமாக மாவட்ட அளவில் இருக்கக் கூடிய கல்வி அலுவலர் அந்த நியமனக் குழுவிலே இடம் பெறுகின்ற வகையில், விதிமுறைகளை மாற்றி, வழக்கு மன்றத்திலே இருக்கிற வழக்குகளை 'அட்வான்ஸ்' செய்து, அவற்றை விரைவிலே தீர்த்து, ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளை சரியாக பின்பற்றக் கூடிய அளவுக்கு, தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியார் பள்ளி என்று சொன்னால், அதை நிர்வகிக்கிற குழுவுக்கு அவர்கள் முறைப்படி நடப்பார்களேயானால் அவர்களுக்கு உரிய மரியாதை, உரிய உரிமை வழங்கப்பட வேண்டும். இல்லையென்றால், தனியார் பள்ளிகளை வியாபாரமாக கருதுகிறவர்கள் தான் எந்தவகையிலும் அரசாங்கம் சொல்கிற எதையும் ஏற்றுக்கொண்டு, வியாபாரத்தை நடத்துவார்கள். எனவே, நிர்வாகம் நடத்துகிறவர்களுக்கும் உரிய பொறுப்பு அந்த நிறுவனத்திலே இருக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய நடைமுறைக் கொள்கைகள், அறிவிப்புகள் அந்தக் குழுவால் ஏற்று செயல்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செயல்படுத்துகிற போது, அரசாங்கமே எந்த அளவுக்கு பங்கு கொள்வது என்பது, இப்போது நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கு காரணமாக, தீர்ப்பினுடைய கருத்துகளை அறிந்ததற்குப் பின்னர்தான் அரசாங்கம் தகுந்த முடிவு காணலாகும்.

[1990 மே 10

பத்திர நகல் எடுத்தல்

*3704 திரு எஸ். ஆர். முனிரத்தினம்:

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :*

*(அ) பத்திரங்கள் பதிவு செய்யும்போது பத்திர நகல் எடுப்பதற்கு தேர்வு வைத்து லைசென்ஸ் வழங்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?*

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: *பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.*

9-15 மணி

திரு. அ. இராசேந்திரன்: *பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகள் நிறைய பேர் வேலையின்றி இருக்கிறார்கள். ஆகையால், பத்திரம் எழுத, நகல் எடுக்க, வேலையில்லாப் பட்டதாரிகள், வழக்கறிஞர்கள்தான் எழுதவேண்டும் என்ற உத்தரவு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: *பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையில் ஆவண எழுத்தர் மற்றும் நகல் எடுப்போர் ஆகியோர்களைத் தேர்வு செய்வதற்கு தற்போது உள்ள விதிகளின்படி அவர்களது வயது, சொத்து "as such" அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு பணி புரிகிறார்கள். இம்முறையினை மாற்றியமைத்து கல்வித் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு வைத்து தேர்ந்தெடுக்கும்போது, படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புக் தர ஏதுவாகும் என்ற வகையில் சட்டப்பேரவையில் நான் ஒரு முறை உறுதியளித்தது உங்களுக்கு நினைவிலே இருக்கும். அந்த அடிப்படையில் அந்த விதிகளுக்கு உரிய திருத்தம் செய்ய செயற்குறிப்பு பெறப்பட்டு சுற்றோட்டத்தில் ஆணையும் பெறப்பட்டுள்ளது. தகவலுக்காக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பத்திர நகல் எடுப்பவர்களுக்கு எட்டாம் வகுப்பு வரையில் படித்தவர்களுக்கு துறையில் முதன்முதலில் 1974-ஆம் ஆண்டு தேர்வு நடத்தி 8,358 நபர்களுக்கு பத்திர நகல் எழுத லைசென்சு வழங்கப்பட்டது. தற்போது அதனைப் பள்ளி இறுதித் தகுதி நிலைக்கு உயர்த்தி மீண்டும் தேர்வு நடத்த அரசிற்குக் கோப்பு எண். 14781-ஐ 3/88-இல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது என்ற தகவலை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆக, படித்தவர்களுக்கு, படித்தும் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு*



1990 மே 10]

*வாய்ப்பளிக்கிறவகையில் உரிய முறையில் நிலைமைகள் மாற்றியமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை நான் இந்த அவையில் கேள்வி கேட்ட உறுப்பினருக்கும், அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி, அதைக்கேட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதன் மூலம் வேறு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பில்லாமல் போகும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.*

தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள திருத்தலத்தை சுற்றுலா மையமாக்குதல்.

*3498 திரு. வ. முல்லைவேந்தன் :

*மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளதிருத்தலத்தை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன,*

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : *தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள தீர்த்தகிரிமலையை மாவட்ட உலாத் தலமாக தேர்தெடுத்து அதன் மேம்பாட்டு பணிகளுக்காக ரூ. 4·00 இலட்சம் இதுகாறும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

திரு. வ. முல்லைவேந்தன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் என்பது தருமபுரி மாவட்டத்தில் மிகப் புகழ்பெற்ற ஒரு ஆலயம். அந்த தீர்த்தகிரி சுவாமியைப் பார்க்க நம்முடைய மாண்புமிகு கந்தசாமி சுவாமி அவர்கள் இரவு 7 மணிக்கு நடக்க ஆரம்பித்து .... (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *கிட்டத்தட்ட கந்தசாமி சுவாமி என்றே முடிவு செய்து விட்டீர்களா? (சிரிப்பு)*

திரு. வ. முல்லைவேந்தன் : *நடக்க ஆரம்பித்து 11 மணிக்குத் தான் கீழே இறங்கினார். அவ்வளவு கரடுமுரடான பாதைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த சுவாமி கோயிலுக்கு ஒரு மலைப்பாதை அமைக்கவேண்டுவதோடு, அங்கே ஒரு சுற்றுலா விடுதியும் கட்டித் தர அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : *தலைவர் அவர்களே, நான் தருமபுரி மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றபோது இரவு 8 மணிக்குத் தொடங்கி ஏறத்தாழ 10 மணி வரை அந்த மலையிலே*

ஏறி, இறங்கினோம். அந்தப் பாதைகள், அங்கே கோயிலுக்கு மலை உச்சிக்குப் போகின்ற பாதை, மிகவும் கரடுமுரடாக இருந்தது. ஆகவே அதை செப்பனிடுவதற்கு அறநிலையத் துறை மூலமாக 'எஸ்டிமேட்' போடப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கின்றது என்று நான் அறிகின்றேன். மிக முக்கியமான திருக்கோயில் அந்தப் பகுதியை அங்கே பல்வேறு பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் —சுற்றுலா தலமாகவும் ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒரு தங்கும் விடுதி அங்கே மலை அடிவாரத்திலே கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முடிக்கின்ற தருவாயிலே இருக்கிறது.

9—20 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை இப்படி கோவில்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், கல்விக் கண் திறப்பதற்காக அரூர் பகுதியிலே அறநிலையத் துறை மூலமாக ஒரு மகளிர் கல்லூரி உருவாக்கித்தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அந்தப் பகுதிக்கு பயணம் சென்றபோது இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய கல்வி அமைச்சர், அறநிலையத் துறை மூலமாக புதியதாகத் தொடங்கப்படுகின்ற கல்லூரிகளுக்கு மானியம் தருவதிலே போதிய சலுகைகள் தருவதாக இருந்தால் அறநிலையத் துறை மூலமாக தர்மபுரி மாவட்டத்திலே ஒரு கல்லூரி தொடங்க ஏற்பாடு செய்யப்படும்.

திருவண்ணாமலை நகரில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுதல்.

* 5105 திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை நகரில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்கும் விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா துறையின் பரிசீலனையில் உள்ளது.





திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, திருவண்ணாமலை நகரம் தற்போது மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மிக உலக புகழ் பெற்ற பழம்பெரும் திருத்தலமான அருணாசலேஸ்வரர்கோவிலும் உலக புகழ் பெற்ற ரமணர் மகரிஷி ஆசிரமும், மகான் ஷேஷாத்திரி ஆசிரமும் அருகிலே சாத்தனூர் அணையும் உள்ளதால் அதிக அளவு வெளி நாட்டு பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்குவதற்கு சரியான உணவு விடுதி இல்லாமல் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே உடனடியாக சுற்றுலாத் துறை மூலம் அங்கே ஒரு விடுதி கட்ட ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே சுற்றுலாத்துறை மூலமாக அங்கே ஒரு தங்கும் விடுதி கட்டுவதற்கு கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. இடம் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே இரண்டு இடங்களை அங்கே நம்முடைய சுற்றுலாத் துறையினுடைய இயக்குநர் பார்த்து இருக்கின்ற ஒரு இடம் ஆலயத்திலிருந்து, திருக்கோவிலிருந்து 4 கி.மீ. தொலைவிலேயும், அதேபோல ரமண மகரிஷி ஆசிரமத்திலேயிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும் இரண்டு ஏக்கர் நிலம், நல்ல இடமாக இருக்கின்றது. அதை தேர்வு செய்திருக்கின்றோம். ஆகவே அந்த இடம் சுற்றுலாத் துறைக்கு மாற்றம் செய்து கொடுத்தப்பிறகு அங்கே தங்கும் விடுதி கட்டப்படும்.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியின் மூலம் 1½ ஏக்கர் நிலம் வாங்குவதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுற்றுலாத் துறைக்கு அனுப்பப்பட்டது. அந்த சுற்றுலா விடுதி கட்டுவதற்குரிய திட்ட மதிப்பீடு எவ்வளவு? இந்த ஆண்டிலேயே அந்த விடுதி கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நகராட்சி மூலமாக, நகராட்சியும் அப்படிப்பட்ட ஒரு இடத்தை தருவதற்கு முன்வருமானால் நாங்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறோம். அந்த இடம் ஏற்கெனவே பார்க்கின்ற இடத்தை தவிட அருகில் இருக்கக்கூடிய இடமாக இருந்தால் அதை தேர்வு செய்யலாம். அங்கே 40,50 இலட்சம் அளவிலும் தங்கும் விடுதி கட்ட முடியும். 2½ கோடி அளவிலும் தங்கும் விடுதி கட்டுகிற திட்டமிருக்கிறது. இதில் எது அந்த நகரத்திற்கு தேவை என்று முடிவு செய்து அதற்கேற்ப அங்கே தங்கும் விடுதி கட்டப்படும்.

[1990 மே 10

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஹோட்டல்களை கட்ட முன்வருகிற இந்த அரசு ஏற்கெனவே 3,4 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப் பட்டு முழுமை பெறாமல் இருக்கின்ற திருத்தணி மற்றும் திருக் கழுக்குன்றத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற அந்த ஹோட்டல் கள் முழுமை பெறுவதற்கு உடனடியாக நிதியை ஒதுக்கி அதை நிறைவேற்றித்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, திருத்தணியிலும், திருக்கழுக்குன்றத்திலும் கட்ட இருப்பது 'வே—சைடு ஃபெசிலிட்டீஸ்' என்ற அளவிலே இரண்டு அறைகள் மட்டும் கொண்ட ரெஸ்டாரன்ட். அந்த விடுதிகளின் வேலை தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூரில் புகழ்பெற்ற ஜலகண்டேஸ்வரர் கோட்டைக்கு கீழே..... (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக மாவட்டத் தலைநகரங்களில், இல்லாத இடங்களில் இதுபோன்ற ஹோட்டல்களைக் கட்டி பயணிகள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா? அதேநேரத்தில் தந்தைப் பெரியார் மாவட்டமாக இருக்கின்ற ஈரோடு தலை நகரத்தில் ஹோட்டல்கள் கட்டி பயணிகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன் பகுதிக்கு மட்டும் அமைச்சர் விடை சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே சுற்றுலாத் துறை மூலமாக தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்ற அந்தக் கொள்கை இருக்கின்றது. ஆனால் எங்கெங்கே கோரிக்கை இருக்கின்றதோ, எங்கெங்கே தேவை இருக்கின்றதோ அங்கே கட்டுகின்றோம். ஈரோட்டிலே அது தேவை என்று செங்கோட்டையன் அவர்கள் கூறினால், அதற்கான இடத்தையும் அங்கே தேர்வு செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யமுடியு மானால் அங்கே தங்கும் விடுதி கட்டுவதற்கு சுற்றுலாத் துறை முன்வரும்.



1990 மே 10]

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இருவண்ணாமலை நகரத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார் பில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுவதற்கான பரிசீலனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இந்த ஆண்டு அப்படி எத்தனை இடங்களில் தங்கும் விடுதிகள கட்டப் போகிறார்கள்? அதற்கான திட்டம் உள்ளதா? அது போல கடந்த ஆண்டு நீங்களே, உங்கள் தலைமையிலே பார்வை யிட்டீர்கள் (மணியடிக்கப்பெற்றது).....

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டத் தலை நகரங்களில்—புதுகோட்டையிலும், தூத்துக்குடியிலும், நெல்லை யிலும், சேலத்திலும் கட்டுவதற்கான திட்டம் இருக்கிறது. பழனியில் 'வே—சைடு ஃபெசிலிட்டீஸ்' என்று சொல்கிற அளவிலே ஒரு ரெஸ்டாரன்ட் கட்ட இருக்கிறோம். அதற்கான இடத்தையும் தேர்வு செய்து விட்டோம். தங்கும் விடுதி கட்டு வதற்கு ஒரு இடம் தரப்பட்டு இருக்கின்றது. அது தாழ்வான இடம். அதை மண் போட்டு நிரப்ப வேண்டும். அடுத்த கட்டமாக ஓராண்டு கழித்து அங்கு தங்கும் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் ஏற்கெனவே கோவில் மூலமாக பல்வேறு விடுதிகள் இருக்கின்றன. அவைகளையும் நன்றாகப் பராமரித்து பயணிகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய, பழனி ஆண்டவர் கோவில் மூலமாக அந்த வசதிகளைச் செய்து தருவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்தி மார்க்க நிகழ்ச்சிகளில் அதிகாரிகள் பங்கெடுத்தல்.

*8501 திரு. கே. ரமணி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்து மதக் கோவில்களில் பக்தர்கள் அல்லது பெரிய மனிதர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகிற பலதரப்பட்ட பக்தி மார்க்க நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் பங்கெடுத்துக் கொள்ள அரசு அனுமதியளித்துள்ளதா?

(ஆ) இல்லையெனில், அதிகாரிகள் தாங்களாக அப்படி பங்கேற்பதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதியில் இந்துசமய திருக்கோயில் நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்வதைத் தடைசெய்யும் விதி எதுவும் இல்லை,

இம்மாதிரி நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்வது அவர்களுடைய மத நம்பிக்கையையும் விருப்பத்தையும் பொருத்த தாகும்.

திரு. யூ.கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையில் மத நம்பிக்கையின் அடிப்படையில் செல்லலாம் என்று சொன்னார்கள். இந்தக் கேள்வியின் மூலமாக அரசு அதிகாரிகள், அரசு நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளலாம். ஆனால் தனியார்கள் நடத்தக் கூடிய தினசரி நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளில் எல்லாம் அதிகாரிகள் கலந்துக்கொள்வதன் மூலமாக அரசு பணி பாதிக் கப்படும் ஒரு சூழ்நிலை தான் இருக்கிறது. எனவே இனிமேலாவது அது தடைசெய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைப் பொருத்தமட்டிலும் தான் நான் பதில் சொல்ல முடியும். அறநிலையத் துறை அதிகாரிகள் கோவில் நிகழ்ச்சிகளிலே—அதைத் துறை நடத்தினாலும் சரி, தனியார் நடத்தினாலும் சரி, அதில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. உ.ரா. வரதராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத நம்பிக்கை உள்ளவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அவர்கள் பக்தி மார்க்கங்களில் ஈடுபடுவது, விழாக்களிலே கலந்துகொள் வதிலே யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது. ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்துகிற விழாக்களிலே அரசு சார்பிலே, இந்து சமய அறநிலையத் துறையில் மட்டுமல்ல மற்ற துறையில் உள்ள சில அதிகாரிகளும் அதிகாரப்பூர்வமாகப் பங்கேற்றுக்கொள்வதும், அங்கே அவர்களுக்கு பூர்ண கும்ப மரியாதை, பட்டுப் பீதாம்பரம் எல்லாம் கொடுக்கப்படுவதும்—இவை எல்லாம் ஒரு மத சார்பற்ற அரசினுடைய அதிகாரிகள் செய்யக்கூடிய காரியமாக இல்லை. ஆகவே, இதுபோன்று மதச் சார்பற்ற அரசினுடைய கொள்கைகளை அமல் படுத்த வேண்டிய முறையிலே அரசு ஊழியர்களுடைய விதிகளிலேயே ஒரு திருத்தம் கொண்டு வந்து அந்த அதிகாரிகள் இப்படி அதிகாரபூர்வமாகக் கலந்து கொள்வதைத் தடுப்பதற்கு வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது முதலமைச்சர் என்று நான் கருதுகின்றேன்.





திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதச் சார்புள்ள விழாக்களுக்கு அறநிலையத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சென்று கலந்துகொள்வதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும்; அமைச்சரும் கலந்து கொள்ள வேண்டும். ஆனால், சாதாரணமாக ஒரு ஊரிலே கோயிலுக்கு அந்தக் தேரை இழுக் கிறார்கள் என்றால் மாவட்டக் கலெக்டர் போய் அந்தக் கயிறு வடம் பிடித்து இழுக்கிறார், டி.ஐ.ஜி., எஸ்.பி., இப்படிப்பட்ட ரேஞ்சிலே இருக்கக்கூடிய பெரிய அதிகாரிகள் போய் அந்தக் கயிற்றை இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இதனாலே ஒரு மதத்தினுடைய ஓர் நிகழ்ச்சியிலே கலந்து கொள்வது மற்ற மதத் துக்காரர்கள் அழைத்தால் கலந்து கொள்ளப் போகிறார்களா என்ற பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, பெரிய பொறுப் பிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே அவர்கள் தனிப்பட்ட மத எண்ணங்கள் இருந்தால், அவர்கள் தனியாகக் கோயிலுக்குப் போவதிலே பிரச்சினை கிடையாது. ஆனால் ஒரு பொதுவாகப் போய் அந்த வடம் பிடித்து இழுப்பது. இந்தக் கயிறு இழுப்பது போன்ற நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளக் கூடாது என்ற ஒரு பொதுவான சட்டத்தை நம்முடைய தமிழக அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, சில இடங்களிலே—குறிப்பாகச் சொல்லப்போனால், திருவாரூரிலே தேர் ஓட்டம் நடைபெற்றபொழுது அங்கே ஒரு குழு அமைக்கப்பட்டது. கலெக்டருடைய தலைமையிலே—அங்கே தனிப்பட்டவர்களுடைய மட்டத்திலே இல்லாமல், அதிகாரிகள் மட்டத்திலே—கலெக்டர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழுவிலே எஸ்.பி.யும் இருந்தார். ஆகவே, பணி காரணமாக அந்த இடத்திற்கு அவர்கள் வந்தார்கள் என்று நான் கருதுகின்றேன்.

திரு. ஜ. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவனுக்கு முன் அனைவரும் சமம் என்று பெரி யோர்கள் சொல்கிறார்கள். ஆனால், கோயிலிலே நடைபெறுகின்ற சில திருவிழாக்களில் சிலபேர்களுக்கு மட்டும் கோயில்களில் பரிவட்டம் கட்டுவதைப் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இருக் கின்ற காரணத்தால் பல்வேறு தகராறுகள் பல்வேறு இடங்களிலே வருகின்றன. இதை நிறுத்துவதற்கு அரசு முயற்சியெடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, கோயில் களிலே அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்ற ஒரு கொள்கைக் குறிப்பு ஏற்கனவே நம்முடைய அரசு மட்டத்திலே இருக்கின்றது.

[1990 மே 10

பேரூராட்சிகளுக்கு நிதி உதவி.

* 397 திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போதுமான வருமானமற்ற பேரூராட்சிகளுக்கு டிச், கழிப் பீடம் போன்ற சுகாதாரப் பணிகளுக்கு இலவச நிதி உதவி புரியும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் பொதுவாகவே சுகாதாரக் கேடு நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வந்துள்ளது. இதில் பிரதானம் டிச்-கள், கழிப்பிடங்கள் போன்றவை போதுமானவையாக இல்லாதது என்பதாகப் பிரதான காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பொறுப்பை அந்தப் பேரூராட்சி நிர்வாகத்தினிடத்தில் ஒப்படைக்காமல் — அதாவது அதனுடைய நடைமுறை வேலை அதனுடைய பொறுப்பு என்றாலும், இது மக்களுடைய அடிப்படைப் பிரச்சினை, என்பதால் அதற்கான நிதியும், பொறுப்பும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதையும், மேலும், இன்றைய நகரத்தினுடைய வளர்ச்சிக்கேற்ப அந்தப் பணியாளர்களை நியமிக்க அரசு முயற்சிக்குமா என்பதை இங்கே நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாகப் பேரூராட்சிகள் அனைத்திலும் தற்போது அந்த கழிவறைகள் வறண்ட—கிடப்பதை, அதை எடுத்துத் தலையில் சுமந்து துப்புரவுத் தொழிலாளர்கள் போகிற நிலையை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும் என்ற முறையை அரசாங்கம் கையாண்டு, படிப்படியாக அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக அதை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மைய ஊரகத் துப்புரவுத் திட்டம்; குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்; மனித உரிமைப் பாதுகாப்புத் திட்டம, குறைந்த செலவினக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் என்ற முறையில் இவைகளை ஏற்படுத்திக் கொண்டு, மைய அரசு 50 சதமும், மாநில அரசு 50 சதவீதமும் இந்த 1989-90 ஆம் ஆண்டில் ஆறு பேரூராட்சிகளில் 97 இலட்சத்து 58 ஆயிரம் மதிப்பீட்டில் 5,979 எண்ணிக்கை கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. படிப்படியாக இந்தத் திட்டத்தை இந்த ஆண்டும் மேற்



1990 மே 10]

கொள்ளப்பட இருக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய எண்ணத்தை ஈடேற்றலாம் என்று நான் கருதுகிறேன்.

9–35 மணி

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு பேரூராட்சிகளும் எனனுடைய தொகுதியில் வருகின்றன. அந்தப் பகுதிகள் மிகுந்த வறுமைக்கு உட்பட்ட மக்களைக் கொண்ட பகுதிகளாகும். ஆகவே, அரசு மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை அந்தப் பகுதியில் முதல் நடவடிக்கையாக அமலுக்குக் கொண்டு வந்து இந்தக் குறையைத் தீர்க்க முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அடுத்த முறை தேர்வு செய்கிறபோது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகள்.

* 3086 திரு. என். பழனிவேல்

திரு. வி. இராமசாமி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகளை அரசு ஊழியர்களாக ஏற்று மற்ற ஊழியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகளை அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் தற்பொது சுமார் ஆயிரம் அல்லது 1,200 பேர்கள் தையல் ஆசியர்களாகப் பணிபுரிவதாகத் தெரிகிறது. இவர்களை அரசு ஊழியர்களாக ஏற்று, அவர்களுக்கு பதவி உயர்வு மற்ற சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று நீண்டகாலமாக, 10 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை வைத்து ஒவ்வொரு அரசையும் கேட்டு வருகிறார்கள். அவர்கள் எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், 10,15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள் ஆகவே, இவைகளை ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக நியமிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இவர்களை தேர்வு செய்ததன் நோக்கம் மகளிர்களுக்கு தையல் மற்றும் எம்ப் ராய்டரி பயிற்சி அளிக்க ஏற்கனவே நியமிக்கப்பட்டார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னர் மகளிர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் திருப்பிக் கொடுக்கப்படாத நிலையில், அந்தத் திட்டம் ஏற்கனவே அரசால் கைவிடப்பட்டதால், அவர் கள் அந்த வேலைகளைப் பார்க்க இயலாமல் வேறு பணிகளில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். சிறு சேமிப்புத் திட்டம், குடும்ப நலத்திட்டம், சத்துணவுத் திட்டம், கண்சிகிச்சை முகாம் மற்றும் இவைகளுக்கான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடு படுத்தப்பட்டு வருகிறார்கள். 26-6-1988 ஆம் தேதியிட்ட ஊரக வளர்ச்சித் துறை நிலையாணை 497-ல் தையல் ஆசிரியர்சன் பதவியை ஊரக மகளிர் நல அமைப்பாளர் என்று மாற்றப்பட்டு, அவர்களுடைய சம்பள விகிதம் ரூ. 505-10-555-15-615-20-795-25-845 என்று இருந்து சம்பளம் பெற்று வந்தனர். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.800-15-1,110-20-1,150 என்ற சம்பள விகிதத்தில் அவர்கள் இப்போது பணிபுரிந்து வரு கிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஏறத்தாழ 908 தையல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், அத்தனைபேரும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் அல்ல. 190 பேர்கள் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்றவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஊதியம் மற்றும் மாற்று வேலைகள் கொடுக்கப்பட்டதாக அமைச் சர் பெருமகனார் அறிவித்து இருந்தாலும், அதை நிரந்தரமாக உத்தரவாதப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, அனைத்து துறைகளிலும் இருப்பவர்களை அரசு ஊழியர்களாக்குவது என் றால் நாம் தான் அவர்களை சுமக்க வேண்டும். ஊராட்சி ஒன்றி யங்கள் நலிவுற்ற நிலையில் இருக்கும் நிலையில் மற்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, இது ஒன்றும் குறைந்த சம்பள மாக நான் கருதவில்லை. எனவே, இந்தப் பணியில், இந்த சம் பளத்தில் அவர்கள் நிச்சயம் தொடர்ந்து நீடிப்பார்கள்.

பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

*3090 திரு. சோ. பால்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ): மதுரை மத்திய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள கிருத்துவ புதைகுழி இடத்தை பேச்சு வார்த்தை யின் அடிப்படையில் பெற்று, பெரியார் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த மதுரை மாநகராட்சி மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. மதுரை ஆர்.சி. டயோசிஸ் கடைக்கு மாற்று இடம் வழங்கியவுடன் மதுரை மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும்.

திரு. சோ. பால்ராஜ்: தலைவர் அவர்களே, மதுரையில் இருக் கும் மத்திய பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையத் தில் நீண்ட காலமாக சிறிது மழை பெய்தாலும் தண்ணீர் தேங்கி போக்குவரத்து தடைபடுகிற நிலை இருப்பதை நாம் அனை வரும் அறிவோம் அப்படிப்பட்ட நிலைக்கு ஒரு முடிவு காண கிருது மால் நதித் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பதுடன், கல்லறை திடலைச் சேர்ந்தவர்களிடம் உடனடியாகப் பேசி பேருந்து நிலையத்தை சீர் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, மத்திய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துகிற திட்டம் நம்முடைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதன் அருகில் உள்ள கிறித் துவ புதைகுழி இடத்தில் 37,378 சதுர அடி இடம் தேவைப்படு கிறது. இதை மதுரை மாநகராட்சி அரசின் மூலம் அவர்களிடத் தில் தற்போது பேசி வருகிறது. சென்னை நில நிர்வாக ஆணை யர் அவர்களுடைய ஒப்புதலுக்கும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபார்சு செய்துள்ளார்கள். ஒப்புதல் பெற்ற வுடன், இதை விரிவுபடுத்துகிற திட்டம் அமல் நடத்தப்படும்.

9-40 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர் களே, பெரியார் பேருந்து நிலையத்தின் கீழ்புறம் மேலப்பெரும் வெளிவீதியின் குறுக்காக ஒரு மேல்பாலம் அமைக்கும் திட்டம் உள்ளதாக அறிகிறேன். அப்படிப்பட்ட திட்டம் மூலமாக மேல் பாலம் கட்டுவதால், பொதுமக்கள் அதை உபயோகப்படுத்து வதற்கு மிகவும் சிரமமாக இருப்பதால், மழைக்காலங்களில் மதுரையில் தண்ணீர் தேங்கி தாழ்வான பகுதியில் மிகவும் கஷ்டப் படுவதால், இதற்கு தீர்வு காணும் முகத்தான் இதற்கு நிரந்தர மான தீர்வு காணும் வகையில், பொதுப்பணித்துறை, உள்ளாட்சி துறை, மற்றும் குடிநீர் வடிகால் வாரியப் பொறுப்பிலுள்ள அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் கூடிப் பேசி, உடனடி யாக மதுரைக்கு ஒரு நல்ல முடிவு காண அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத்தலைவர் அவர்களே தொடர்பில்லா வினா, தனிக் கேள்வி எழுப்பவும்.

திரு எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இப்போது நான்கு இடங்களில் பேருந்து நிலையங்கள் இருப்பதாகத் தெரிகிறது. திருவள்ளுவர் போக்கு வரத்து பேருந்து நிலையம், நகரப் பேருந்து நிலையம் ,பெரியார் பேருந்து நிலையம், அண்ணா பேருந்து நிலையம் என்று இப்படிப் பல்வேறு இடங்களில் பேருந்து நிலையங்கள் இருக்கின்ற காரணத்தால் பயணிகள் பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே அனைத்தையும் ஒன்றாக இணைத்து எல்லா வசதிகளோடு சேர்த்து, பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கான அந்தத் திட்டக் குறிப்பு இருக்கிறதா? அல்லது திருவள்ளுவர் பேருந்து நிலையம் போன்ற பேருந்து நிலையங்கள் தனியாகத் தான் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் கவனத்தில் இல்லை.

அனுமதியின்றி விசை இறவை மூலம் தண்ணீர் எடுத்தல்.

*2088 திரு ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி அணைக்கு வந்துசேரும் தண்ணீரும், அணையிலிருந்து வெளியேறும் நீரும் அரசு அனுமதியின்றி விசை இறவை மூலம் எடுக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன்; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விசை இறைவைகளை அனுமதியின்றி வைத்திருப்பது பற்றிய பிரச்சினை அரசின் பரிசீலனையில் உள்ளது. பொதுவாகவே இப்படி அன்—ஆதரைஸ்டு பம்ப்செட்டுகள் கீழ்பவானியைச் சேர்ந்த பகுதிலேயும், அதுமட்டுமல்லாமல் இன்னும் சேலம் மாவட்டத்திலே ராஜக்கால்வாய், மோகனூர் சேனல், போன்ற பகுதிகளிலேயும் மூலவகை போன்ற பகுதிகளிலேயும் வைத்திருக்கிறார்கள். இதற்கு ஒட்டுமொத்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும். எனவே இதுகுறித்து ஆய்ந்து ஒரு அறிக்கையை அரசுக்கு அனுப்பவேண்டும் என்று தலைமைப் பொறி



யாளருக்கு அரசு கட்டளை பிறப்பித்து இருக்கிறது. அவர்களுடைய அறிக்கை கிடைத்தவுடன், இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த கீழ் பவானி அணைக்கு வந்து சேரும் தண்ணீரிலிருந்து அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுப்பவர்கள் ஒரு பெரிய நிதி நிலையை உருவாக்கி, லட்சக்கணக்கிலே அதிலே முதலீடு செய்து, தண்ணீரை எடுக்கிறார்கள். அதற்கு அரசு நிதி நிறுவனங்களும், அதேபோல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் நிதி உதவி செய்கின்றன. இதைத்தடுப்பதற்கு அல்லது நிதி உதவி செய்யாமல் இருப்பதற்கு அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, வங்கிகள் பணம் கொடுப்பதை நாம் தடுக்க முடியாது. பொதுவாகவே, கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கக்கூடாது என்பது அரசினுடைய கொள்கை. ஆனால் வருகிற தண்ணீரிலே இப்படி திருட்டுத்தனமாக தண்ணீரை எடுத்துவிடுகிறார்கள். ஏற்கனவே ஒருமுறை 1469 அன்-ஆதரைஸ்டு பம்ப்செட்டுகளுக்கு கீழ் பவானி பகுதியிலே ஒரு அனுமதியை அரசே வழங்கி இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஒரு எண்ணம், நாமும் வைத்துக் கொண்டு இருப்போம், கொஞ்சநாட்கள் போனவுடன், அரசு, விவசாயப் பிரச்சினை, எப்படி விரட்ட முடியும், நம்மையும் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள்,அனுமதி அளிப்பார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் பம்ப்செட்டை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. நீண்டகாலமாக ராஜாகால்வாய், மோகனூர் கால்வாய் போன்ற பகுதிகளிலே இந்த பிரச்சினை இருக்கிறது. நானே பல இடங்களுக்குச் சென்று இந்த அன்-ஆதரைஸ்டு பம்ப்செட்டுகளை எப்படி அவர்கள் இயக்குகிறார்கள் என்பதைப்பார்த்துவிட்டு வந்தேன். எனவே தான் அரசு இது குறித்து ஒட்டுமொத்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும். இது விவசாயிகள் பிரச்சினை என்கிற காரணத்தால், இந்த அரசு சிறிது நீக்குபோக்குகளைக் கடைப்பிடிக்கவேண்டிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கணேசமூர்த்தி: பேரவைத்தலைவர் அவர்களே, அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுப்பதன் மூலமாக கீழ் பவானி பாசன ஆயக்கட்டுகளும், அதே போன்று காளிங்கராயன் பாசன ஆயக்கட்டு விவசாயிகளும் பெரிதுமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு நிவாரணம் அளித்து அந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1990 மே 10

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மேழு இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுகிறது என்பதை நான் மறுக்கவில்லை. இந்த முறையற்ற பாசனத்தின் மூலம் அன்-ஆதரைஸ்டு பம்புசெட்டுக்காரர்கள் தண்ணீரை அவர்கள் வயலுக்கு பாய்ச்சினால்கூட பரவாயில்லை. அடுத்து இருக்கிற வயலுக்கு தண்ணீரை விற்கிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியும். நான் மாண்புமிகு உறுப்பினர் கணேசமூர்த்தி அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். நாளைக்கு மறுதினம்கூட அரசு 24 மணிநேரத்தில் அதை கட்டுப்படுத்த முடியும். ஆனால் அவர்களே, நாளைக்கே படை எடுத்து, வந்து கணேசமூர்த்தியை பார்த்து. இந்த முறை எப்படியும் எங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் பயிர்கள் காய்கின்றன என்று அவர்கள் வருவார்கள், அதற்கு அரசாங்கத்திற்கு வந்து விண்ணப்பிப்பதற்கு நிறைய பேர்கள் இருக்கிறார்கள். எனவேதான் இதுகுறித்து அவர்களுக்குத் தெரிவித்து யாருக்கும் பாதகம் ஏற்படாத வண்ணம், விவசாயிகள் பாதிக்காத வண்ணம் ஒரு முடிவினை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

மின் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசின் உதவி.

* 3905 திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழ்நாட்டில் நிலவும் மின் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசின் உதவி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 630 மெ.வா. திறன் கொண்ட கடலூர் அனல் மின் நிலையம், 420 மெ.வா. திறன் கொண்ட சென்னை அனல் மின்நிலையம் இரண்டாவது கட்டம் மற்றும் 196 மெ.வா. திறன் கொண்ட கடலூர் வாயு சுழலி மின் திட்டம் ஆகியவற்றிற்கு உடனடியாக அனுமதியளிக்குமாறு மைய் அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காவிரிப் படுகையில் கிடைக்கும் இயற்கை வாயு முழுவதையும் மின் உற்பத்திக்கு அளிக்க வேண்டுமென மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



1990 மே 10]

9-45 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மின் உற்பத்தித் தேவையை யொட்டி மின்சார வினியோக நிலையங்களில் ஏற்படும்படியான இழப்பை 'லைன் லாசை' கண்டுபிடித்துத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : என்னென்ன திட்டங்களுக்கு மத்திய அரசினுடைய உதவியை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. அதற்கு விடையளித்திருக்கிறேன் பாதையிலே ஏற்படுகின்ற மின் இழப்பைப் பற்றி கேட்டிருக்கிறீர்கள். நாளைக்கும், நாளை மறு தினமும் அதுபற்றிப் பேசுவோம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏராளமான அளவில் இந்த இழப்பு ஏற்படுவது என்பது யதார்த்தமான உண்மை. மின்சாரம் வழிகளில் திருடப்படுகின்றது. தவறான வழிகளில் உபயோகப்படுத்தப்படுகிறது. இவைகளைத் தடுத்தால் ஐந்தில் ஒரு பகுதி மின்சாரம் அரசுக்கு கிடைக்கும் என்று கூறுகிறார்களே, அதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஏதேனியாவது மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினருடைய அந்த யோசனையை அரசு பரிசீலிக்கும் நாளையும், நாளை மறுதினமும் நடக்கும் விவாதத்தில் அதுபற்றி நாம் பேசலாம்.

காடம்பாறை மின் உற்பத்தி திட்டம்.

* 4529 திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காடம்பாறை மின் உற்பத்தித் திட்டம் உற்பத்தியை தொடங்கிவிட்டதா?

(ஆ) இதன் மொத்த உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 4x100 மெ.வா.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது 73, 74–ஆம் ஆண்டுகளில், 16 ஆண்டுகளுக்கு முன்பு காடம்பாறை மின் உற்பத்தித் திட்டம் ஆசிய கண்டத்திலேயே விஞ்ஞான நுட்பம் வாய்ந்த ஒரு புதுமையான திட்டமாகவும், குறைந்த செலவில் அதிக மின் உற்பத்தி செய்யும் நூதனமான திட்டமாகவும் இது தொடங்கப்பட்ட திட்டம். ஆகவே, இது முழுமையாக உற்பத்தித் திறனைத் தருவதற்கு எவ்வளவு காலம் இன்னும் ஆகும் என்பதையும், இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதையும் அமைச்சரிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவுற்று மின்சாரத்தை இப்போது உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 89 முடிய 123.356 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்திருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காடம்பாறை மின் உற்பத்தி திட்டத்தின் ஆரம்ப கால மதிப்பு எவ்வளவு என்பதையும், காலந் தாழ்வின் காரணமாக ஏற்பட்ட கூடுதல் செலவு எவ்வளவு என்பதையும், பல முறை பணி நின்று போன கரரணத்தால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும் பொருட்கள் களவு போன காரணத்தால் மின் வாரியத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பாரா? அந்த விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாளைக்கு இதுபற்றிப் பேசுவாரா? நான் அப்போது நான் நிறைய விஷயங்களைச் சேகரித்து அவருக்குச் சொல்ல இயலும். இருந்தாலும் ரூ. 163 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் விநியோகம் முறைப்படுத்துதல்.

*8222 திரு. வி. தம்புசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூரில் உள்ள மின் நிலைய எல்லைக்குட்பட்ட மின் மாற்றிகள் பழமையானவையாகவும், தேவைக்கு குறைவாகவும் இருப்பதால், மின் விநியோகம் முறைப்படுத்த இயலாமல் மின் விளக்குகள் பாதிக்கப்படுவதை சீர் செய்யும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர். அவர்களே,

(அ) ஆம். திருவாரூர் 66/11 கி.வோ.ஆ. துணை மின் நிலையத்தில் உள்ள குறைந்த திறன் கொண்ட மின் மாற்றிகளை அதிக திறன் கொண்ட மின் மாற்றிகளாக மாற்றியமைக்கும் திட்டம் இருக்கிறது.

(ஆ) தற்போது திருவாரூரில் உள்ள 3X2.5 மெ.வோ.ஆ. (7.5 மெ.வோ.ஆ) மின் மாற்றிகள் (12.5 மெ.வோ.) திறன் கொண்டவைகளாக மாற்றப்பட உள்ளது. இதற்குத் தேவையான ஒதுக்கீடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் விரைவில் செய்து முடிக்கப்பட உள்ளன.

9–50 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள், திருவாரூரில் இருக்கக் கூடிய துணை மின் நிலையத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு அதை விஸ்தரிப்பதற்கான முறையில் புதிய மின் மாற்றிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 3.25 இருப்பதை 12.5 ஆக மாற்றுவதற்கான முயற்சிகள் நடப்பதாகச் சொன்னார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். விரைவில் திட்டம் முடிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் தெரிந்துக்கொள்ள விரும்புவது இந்தத் திட்டம் எப்போது துவக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே விரைவில் திட்டம் முடிக்கப்படும்.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்.

*9797 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதை தொகுதி, கிண்டி திரு. வி. க. தொழிற்பேட்டையில் அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், கட்டுமானப் பணி எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இன்னும் இரண்டு திங்களில் முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1990 மே 10

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டில் தமிழகமானது தொழில் துறையில் முதலிடம் பெற வேண்டும் என்கின்ற உணர்வோடு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அயராது பாடுபடுகிறார்கள். தொழில் துறைக்கு மிகவும் அவசியமான இந்த அலுவலகங்கள் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் விரிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில் கடந்த 20 அல்லது 25 ஆண்டுகளாக முக்கியமாக இந்த அலுவலகங்கள் விரிவுபடுத்தப்படாமல் இவற்றின் வேலைத்திறன் பாதிக்கப்பட்டு உள்ளது. தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணம் ஈடேறத்தக்கவகையில் மிக அவசியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இந்த அலுவலகங்களை விரிவுபடுத்த இந்த அரசு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் 2 மாதத்தில் செய்கிறோம் என்று சொல்கிறார். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, டிபார்ட்மெண்ட் எக்ஸ்பேன்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள். அது தானே கேட்கிறீர்கள்? உறுப்பினருடைய யோசனை நல்ல கருத்து. அதை இலாக்கா பரிசீலிக்கும்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : தலைவர் அவர்களே, அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பது போல் சப்டிவிஷன் அலுவலகங்கள் அமைக்கப்பட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அதையும் அரசு பரிசீலிக்கும்.

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

* 1898 திருமதி ரமணி நல்லதம்பி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாங்குனேரியைச் சேர்ந்த இட்டமொழி விஜய அச்சம்பாடு ஊராட்சியைச் சேர்ந்த இட்டமொழியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1990 மே 10]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விஜய அச்சம்பாடு ஊராட்சி ஒன்றியத்தைச்சார்ந்த இட்டமொழி கிராமத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது,

### அவசர தீவிர சிகிச்சைப் பகுதி.

* 6200 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட வட்ட மருத்துவமனைகளில் அவசர தீவிர சிகிச்சைப் பகுதி (Intensive Medical Care Unit) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இந்த தீவிர சிகிச்சை குறைந்தபட்சம் மாவட்ட தலைநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் கூட இல்லை என்று சொன்னால் அங்கு ஏராளமான மக்கள் சென்னையை நோக்கி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது அல்லது வேறு எங்கேயோ பெரிய மருத்துவமனையை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்வேறு திட்டங்களை மக்களுடைய நல்வாழ்வுக்காக கொண்டு வரக்கூடிய நிலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசு இந்த மாவட்ட மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட தீவிர சிகிச்சைப் பகுதியைத் துவக்குவதற்கு அதற்கான மருத்துவர்களைப் போட்டு பயிற்சியும் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தீவிர மருத்துவ சிகிச்சைப் பிரிவு மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் உருவாக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கான நிதி ஆதாரம் இப்போது அரசிடம் இல்லை. மேலும் மாவட்டங்களில் இப்போது தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு துவக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு 15 மாவட்ட மருத்துவமனைகளில் இப்போது அது துவக்கப்படுகின்ற

பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் உள்ள 5 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் துவக்கப்படுவதற்கான திட்டம் செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறது. ஆகவே இன்டென்சிவ் கேர் யூனிட் என்று சொல்லப்படுகிற இவைகளைத் துவக்கி விட்டாலே பெரும்பாலான பகுதிகளில் இதுபோன்ற தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் பணியில் அமர்த்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினருடைய கருத்து அரசினுடைய நிதி நிலைக்கேற்ப அவ்வப்போது படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இது இருதய சிகிச்சைப் பிரிவு என்பது ஒன்று. இன்டென்சிவ் கரானரிகேர். இன்னொன்று இன்டென்சிவ் மெடிக்கல் கேர். உதாரணமாக கிராமப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் பாலிடால் போன்ற விஷத்தை அருந்திவிட்டு அல்லது பாம்புக் கடியினால் விஷத்தினால் பாதிக்கப்பட்டு வருபவர்களுக்கு அவசரச் சிகிச்சை அவசியமாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அப்படிப்பட்ட கிராமப் புறத்தில் நடக்கக்கூடிய நிலைமை இருப்பதால் இதற்காக தனிப் பிரிவு ஒன்று அமைப்பதற்கு அரசு முன்வருமா? இன்டென்சிவ் மெடிக்கல் கேர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொன்னேன். இன்டென்சிவ் மெடிக்கல் கேர் யூனிட் என்று இருப்பதற்குப் பதிலாகத்தான் இப்போது ஐ.சி.சி இன்டென்சிவ் கார்டியாலஜிலே அதை உருவாக்குவதற்கு மாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுமதி வழங்கி இருக்கிறார் என்று குறிப்பிட்டேன். அவசர சிகிச்சைப் பிரிவு என்ற எமர்ஜென்சி என்று சொல்லப்படுகின்ற பிரிவுகள் பல்வேறு மருத்துவமனைகளிலே இருக்கின்றன. அவைகளிலேயே நீங்கள் குறிப்பிட்ட வியாதிகளுக்கான சிகிச்சைகள் எல்லாம் அளிக்கப்படுகின்ற காரணத்தினால் இன்டென்சிவ் மெடிக்கல் கேர் யூனிட் என்பது இப்போது நிதிநிலைக்கேற்ப அமைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் அரசு இருக்கிறது.

9-55 மணி

பெரியகுளம் அரசு மருத்துவமனை.

* 6256 திரு. எல். மூக்கையா:
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்; கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா;

(அ) பெரியகுளம் அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டும், மாவட்ட மருத்துவ மனைக்குரிய வசதிகள் அங்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வசதிகள் செய்து தரப்படும்



மாண்புமிகு டாக்டர் க, பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே'

(அ) மற்றும் (ஆ) தேவைகளின் அடிப்படையில், படிப்படியாக அரசின் நிதி நிலைகளுக்கேற்ப மேம்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன,

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தாலுக்கா மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டு 3 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் அந்த மாவட்ட மருத்துவமனைக்குரிய வசதிகள். இன்னும் செய்து தரப்படவில்லை. 2,500க்கு மேற்பட்ட நோயாளிகள் தினம் வெளி நோயாளிகளாக வந்து போகிறார்கள். இவர்களுக்கு தனித் தனி வெளி நோயாளிகள் சிகிச்சை பிரிவு இல்லை. உள் நோயாளிகள் படுக்கை போதுமானதாக இல்லை. சிறப்பு பிரிவுகள், அறுவை சிகிச்சை ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் கூட இல்லை, தனித் தனி சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் இல்லை. சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் இல்லை, பெண் டாக்டர்கள் கூட மாவட்ட மருத்துவமனையாக இருந்தும் 2 பேர் மட்டுமே இருக்கிறார்கள். ஒருவர் பிரசவத்திற்கும் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மருத்துவமனை இருக்கிறதா? (சிரிப்பு)

திரு. எல். மூக்கையா: ஆகவே, இந்த வசதிகளை எல்லாம் அரசு எப்போது செய்து தரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலை நகரத்திலே படிப்படியாக இது போன்ற வசதிகளை செய்து தர முடியும். இப்போது புதிய நிர்வாக அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு 2.10.89 முதல் அது செயல்பட்டுக்கொண்டு வருகிறது. 60 படுக்கைகளாக இயங்கிக்கொண்டு இருந்த அந்த மருத்துவமனையில் 48 படுக்கைகள் புதிதாக கட்டப்பட்டு இயங்கி வருகிறது இதைத் தவிர குடும்ப நலத் திட்டத்தின் கீழ் பேறு காலத்திற்கு பின் கவனிக்க வேண்டிய சிகிச்சைக்காக 6 படுக்கைகள் கூடிய பிரிவு கட்டப்பட்டு உடயோகத்தில் இருக்கிறது. 1990-91 ஆம் ஆண்டு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 75 கிலோ வாட் மின்னாட்சி, ஜெனரேட்டர் ஒன்று கொடுக்க உத்தரவிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, படிப்படியாக அதை மாவட்ட மருத்துவ மனையாக முழுமையாக உருவாக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். ஆகவே, மேலும் மருத்துவ அலுவலர்களுக்கு குடியிருப்பு, நவீன சமையல் அறை கட்டிடம், 12 படுக்கைகள் கொண்ட காச நோய் கட்டுதல், முன்னாள் ராணுவத்திற்கு 12 படுக்கைகள்

கட்டுதல், சலவைக் கூடம், மருந்துகள் பாதுகாப்பாக, மருத்துவ கருவிகள் பாதுகாப்பாக இருக்க தனி அறை. 6 லண்டிகள் நிறுத்த கொட்டில் கட்டுவது போன்ற பல்வேறு குறிப்புகள் அங்கே இருந்து பெறப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் அரசினுடைய நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இவைகள் எல்லாம் உடனடியாக செய்ய முடியாது. அரசு அவ்வப்போது நிதிநிலைக்கு ஏற்ப படிப்படியாக இவைகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்துப் பழுதுபார்க்கும் பணிமனை.

*6474 திருமதி பாப்பா உமாநாத்:
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளை கருவிகளை பராமரித்து பழுதுபார்க்கும் பணிமனை, தொழிற்கூட தகராறு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தும் அச்சட்டம் அமலாக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அச்சட்டத்தை அமலாக்கி, பணி நிரந்தரம், வருடாந்திர ஊதிய உயர்வு, இ. எஸ். ஐ. சலுகை அனுமதித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்து பழுதுபார்க்கும் பணிமனை, தொழிற்கூடத் தகராறுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை சட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன்.

* 5274 திரு. பொன். விஜயராகவன்:
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன் 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டத்திற்கு முரணாக நடப்பதாக புகார் அரசுக்கு வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பான விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

சென்னை. சதர்ன் இரயில்வே மஸ்தூர் யூனியன், சங்க விதிகளுக்கு மாறாக செயல்படுவதாக புகார் வந்ததை அடுத்து சங்கத்தின் பதிவு 23–5-89 அன்று சென்னை, முதல் தொழிலாளர் துணை ஆணையரால் ரத்து செய்யப்பட்டு, அதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. இந்த உத்திரவை எதிர்த்து மேற்கண்ட சங்கம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டினை அடுத்து, தொழிலாளர் துறை துணை ஆணையரின் 23–5–89-ம் நாளைய உத்தரவு மறு உத்தரவு வரை உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது. இதற்கிடையில் அச்சங்கம், துணை ஆணையருக்கு, ரத்து செய்யப்பட்ட சங்கத்தின் பதிவினை மீண்டும் பெறுவதற்கு முறையீடு செய்தது. இதனை பரிசீலித்த பிறகு, துணை ஆணையர் தனது 20–6–89ம் நாளைய உத்தரவில் 23–5–89 அன்று பிறப்பித்த தனது முதல் உத்திரவை தள்ளுபடி செய்து அதே பதிவு எண்ணைக் கொண்டு சங்கம் மீண்டும் செயல்பட உத்தரவு வழங்கினார். ஆனால், கடைசியாக துணை ஆணையர் 20–6–89-ல் வழங்கிய உத்தரவிற்கு எதிராக திரு. டி. முனிரத்தினம் என்பவர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து 7-9–89 அன்று துணை ஆணையரின் 20–6-89 நாளைய உத்தரவிற்கும், இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளார். எனவே, தற்போதுள்ள நிலைப்படி, உயர்நீதிமன்றத்தின் இறுதி உத்திரவு பெறப்பட்ட பின்பு தான் சங்கத்தின் சட்டப்படியான நிலை பற்றி உறுதியாகக் கூற இயலும்.

### திருவள்ளுவர் சிலை

* 6838 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை தொட்டுள்ள கடலில் உள்ள பாறையில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்பட உள்ளது?

[1990 மே 10

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதா? எப்போது துவங்கப்பட்டு எப்போது முடிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விரைவாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க் கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்

(அ) தாம்பரத்தில் ஒரு பள்ளியில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி அளிக்கப்படுவதாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு.பி.என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இந்து மேல்நிலைப் பள்ளியில் ஆர். எஸ் எஸ். இயக்கத்தினர் சில நாட்களாக முகாம் இட்டு இருப் பதும், அங்கே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்கு பயிற்சி அளிக் கப்பட்டு வருவதும் அரசுக்குத் தெரியுமா? இதன் மீது அரசின் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த செய்தியை நான் பத்திரிகையில் பார்த்தேன். அது போன்ற பயிற்சிகள் பள்ளிகளில் நடத்து வதற்கும், அரசுக்குரிய இடங்களில் நடத்துவதற்கும் அனுமதி இல்லையென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதைப்பற்றி அரசின் சார்பில் உடனடியாக விசாரிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளின் காரணமாக அமைதிக்குப் பங்கம் வருவதை இந்த அரசு எந்த நேரத்திலும் தடுத்து நிறுத்தும்.



1990 மே 10]

10–00 மணி

(ஆ) வேளாண்மைத் துறை அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் மீது கூறிய குற்றச்சாட்டு மற்றும் சமுதாய நலப் பணியாளர்கள் நியமனத்தில் முறைகேடுகள் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து.

திரு.எஸ்.ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16–4–90 அன்று இந்தப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் என்னைப் பொறுத்து ஒரு குற்றச்சாட்டை இங்கே எழுப்பி இருக்கிறார்கள். என் மீது சொல்லப்பட்ட அந்தக் குற்றச்சாட்டுக்கான பொறுப்பினை ஏற்றுக் கொண்டு நிரூபிப்பதாகவும் அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கி றார்கள். இதுகுறித்து, முதலில் நான் 15 நாட்களுக்கு முன்னாலே கேட்டேன். நீங்கள் அறிவிப்பதாகச் சொன்னீர்கள். ஏனென்றால், இன்னும் இரண்டே நாட்கள்தான் சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் இருக்கின்றன. எனவே, நீங்கள் அந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்தைக் கேட்டு, அவர் கூறிய அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கப் போகிறாரா அல்லது என்ன தீர்ப்பை நீங்கள் அளிக்கப் போகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே ஏதேனும் சொல்ல விரும்புகிறாரா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16–ஆம் தேதி கூட்டுறவு மானியக் கோரிக்கை சம்பந்தமாக விவாதம் நடைபெற்ற பொழுது என்னை களங்கப்படுத்தக்கூடிய, உள்நோக்கம் கொண்ட வார்த்தைகள் இங்கே பேசப்பட்ட பொழுது, அதற்கான விளக் கத்தை நான் தந்து, மறுத்தேன். அதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். இராதா அவர்கள் என்னை களங்கப்படுத்த சொல்லப்பட்ட அந்தக் கருத்துக்கு உடன்பட்டவரைப்போல இங்கு விளக்கங்களைத் தர முயன்ற பொழுது, என்னிடம் அன்றைக்கு இருந்த ஆதாரத்தைக் கொண்டு அவர் மீது நானும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னேன். அந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச் சராக இருந்தாலும் பேரவை உறுப்பினர்களாக இருந்தாலும், ஒருவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறபொழுது, பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே அதற்கான ஆதாரத்தைக் காண் பித்து, அவருடைய அனுமதியின் பேரிலேதான் அப்படிப்பட்ட குற்றக்சாட்டுகளைச் சொல்லவேண்டுமென்று எடுத்துரைத் தார்கள். மீண்டும் மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் அதை வலியுறுத்தும்பொழுது நான் பொறுப்பு ஏற்ப தாகவும்கூட சொன்னேன். மீண்டும், முதலமைச்சர் அவர்கள், இடையிலே ஏற்பட்ட அந்த வாக்குவாதங்களையெல்லாம்

அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிட்டார்கள். இப்போது அவை குறிப்பிலே இல்லாத குற்றச்சாட்டுகளைப் பற்றி நான் விளக்கம் சொல்ல வேண்டுமென்று மீண்டும் இந்த அவையிலே அவர் பிரச்சினையை எழுப்பியபோது தாங்கள் என்னைக் கேட்டுப் பதில் அளிப்பதாக அன்றைக்கு அவையிலே தெரிவித்தீர்கள். ஆகவே அவைக்குறிப்பில் இடம்பெறாத குற்றச்சாட்டை அவர் மீண்டும் வலியுறுத்துவதாக இருந்தால் அதற்கான ஆதாரத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தொடர் கூட்டத்தில், மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம் பற்றி ஏராளமான ஊழல் நடக்கிறது, லஞ்சலாவண்யம் நடக்கிறது என்று சொன்னார்கள். ஆதாரத்தோடு நீங்கள் நிரூபித்தால் தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று அவையிலே சொல்லப்பட்டது. அதற்கான ஆதாரம் ஏதாவது வைத்து இருக்கிறாரா? அதைப்பற்றி ஏதாவது சொல்ல இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு விளக்கம். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினையும் அதற்கு நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கமும், நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்ட இடையிலே இதுபோன்ற ஒரு அமைப்புடைய கேள்வியையும் அவையின் மதிப்பில் கொண்டு ஒரு செய்திக்கு மட்டும் நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். பொதுவாகவே, அவையில் சில நேரங்களில் குற்றச்சாட்டுகள் சாட்டப்படுகிறபோது, அந்தக் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் குற்றம் சாட்டவேண்டுமென்ற ஒரு பொது மரபின் அடிப்படையில், ஆளுங்கட்சித் தரப்பில் இருந்தும் சில குற்றச்சாட்டுகள் சாட்டப்படுகின்றன, எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் சில குற்றச்சாட்டுகள் சாட்டப்படுகின்றன. ஆனால் உடனேயே நம்முடைய முதல்வர் அவர்களோ, பேரவை முன்னவரோ அல்லது பேரவைத் தலைவரோ குறுக்கிட்டு ஆதாரங்கள் இல்லாமல் இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சாட்டக்கூடாது என்று சொல்கிறபோது அந்த அளவோடு அந்தப் பிரச்சினைகள் முடிந்து விடுகின்றன. என்றாலும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன விளக்கம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், அன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இது தொடர்பான அனைத்து வாதங்களையுமே அவைக்குறிப்பிலிருந்து நீக்கலாமே, இதிலே மேலும் பிரச்சினைகள் வேண்டாமே என்று சொன்னதை ஏற்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமைதி கொள்ள



லாம் என்று நான் கருதுகிறேன். இல்லை அப்படி வேண்டாம் நான் மீண்டும் வற்புறுத்துகிறேன் என்று சொன்னால் அதற்குப் பிறகு என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கிற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றை வற்புறுத்திச் சொன்னார்கள். என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது, என்னால் நிரூபிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால், எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் என்மீது சாட்டப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். அதுதான் என்னுடைய நிலை. அன்றைக்கு அவைக் குறிப்பிலே இடம் பெறவில்லை என்ற காரணத்திற்காக இன்றைக்கு எழுப்பப்படக்கூடாது என்றால் அன்றைக்கு அவைக் குறிப்பிலே இடம் பெறக்கூடாது என்று சொன்னதற்கே காரணம் அன்றைக்கு ஆதாரம் கையிலே இல்லை, ஆதாரத்தை என்றைக்குக் கொண்டுவருகிறாரோ அன்றைக்குத்தான் அவைக் குறிப்பிலே அது இடம் பெற வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

அதேபோல் அன்றைக்கு எங்களுடைய உறுப்பினர் திரு. அர்ஜுனன் தவறாகச் சொன்னார் என்று சொல்லி, அவரை வாபஸ் வாங்கச் சொன்னீர்கள். அவரும் வாபஸ் வாங்கினார். அந்த நிலையை இந்த அவையிலே பின்பற்றுகிற நேரத்தில் திரு. அர்ஜுனனுக்கு ஒரு நியாயம், திரு. ஆறுமுகத்திற்கு ஒரு நியாயம் என்று வரக்கூடாது. எனவே நியாயம் என்று வருகிற நேரத்தில் அனைவருக்கும் ஒன்று என்ற நிலை வரவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அவர் குற்றச்சாட்டு என்று சொன்னார்-அதுவும் ஒரு பெரிய ஊழல் குற்றச்சாட்டு, தவறு செய்து விட்டதாக வெளியிலே சொல்லியிருக்கிறார். இந்த அவையிலே அன்றைக்கு இருந்தவர்கள் மற்றும் ஒலி பெருக்கியிலே கேட்டவர்கள் 200 பேர், 300 பேர், 400 பேர் இருப்பார்கள். இவ்வளவு பேர்களுடைய செவிகளில் அது விழுந்து இருக்கிறது. ஏதோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையில் வரவேண்டாம் என்று தடுத்தார்கள் என்று சொன்னால் அதனால் தமிழ்நாடு முழுவதும் தெரியாமல் போனது. அவ்வளவுதான் அது. ஆனால் விவகாரத்தைப் பொறுத்தவரையில் அத்தனை பேருக்கும் தெரிந்துவிட்ட ஒன்றாகிவிட்டது. எனவேதான் நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஆதாரம் இருக்குமேயானால், என் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால், நான் தவறு செய்திருப்பேன் என்று சொன்னால் எந்த தண்டனை தந்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் அவர் சொன்ன குற்றச்சாட்டை அவர் நிரூபிக்க

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 மே 10

வேண்டும் என்பதுதான். அப்படி குற்றச்சாட்டு இல்லை என்று சொன்னால், நான் கோபத்தில் சொன்னேன், அல்லது ஆத்திரத்தில் சொன்னேன், குற்றச்சாட்டு என்ற அளவுக்கு இல்லை என்று சொன்னால் அது வேறு பிரச்சினை. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் ஆதாரம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அப்படி ஆதாரம் இருக்கிறது என்றால் அந்தக் குற்றச்சாட்டை நிருபித்து என்மீது களங்கம் இருக்கிறது என்று கருதுவீர்களேயானால் நீங்கள் தருகிற எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

அடுத்து ஒன்று, மாண்புமிகு அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்கள் இன்றைக்கு ஒன்றைச் சொன்னார்கள். நான் இங்கே ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் பொறுப்பை ஏற்றுக்கொண்டது உண்மை. நான் நிருபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறேன். அதற்கான ஆதாரங்களைத் திரட்டிக்கொண்டிருக்கிறேன். பணியாளர்கள் நியமனங்கள் பற்றிய அந்தக் குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில் ஆதாரங்களை எடுத்துக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அதைத் தர இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு செய்திகள், ஒன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதனைத் தொடர்ந்து வற்புறுத்துவதால் நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரோடு தொடர்பு கொண்டு, ஆதாரங்களைப் பெற்று வைத்திருக்கிறேன். முறைப்படி அவற்றின் படிகள் உங்களுக்குத் தரப்பட்டு அதன்பேரில் இந்த விவாதம் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, மக்கள் நலப் பணியாளர்கள் பற்றிக் குறிப்பிட்டது தொடர்பாக. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த இரண்டு நாட்களுக்குள் ஆதாரங்களைத் தந்தால்—ஏனென்றால் இந்த அவைக் கூட்டம் முடியப்போகிறது, எனவே அதையும் தந்துவிட்டால்—இரண்டையும் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறி அவர்கள் அதைத் தரவேண்டும் என்று வற்புறுத்தி, இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கும், நான் சொன்ன ஒரு குற்றச்சாட்டுக்கும், அதாவது இரண்டையும் சேர்த்து ஒன்றாக ஒரே நேரத்தையும் காலத்தையும் நிர்ணயிப்பது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்தக் கூட்டத்திற்குள் முடிக்கவேண்டும் என்று கருதியதால்தான், நானும் இதற்குள் முடிக்கவேண்டும் என்று சொன்னேன்; இரண்டையுமே முடித்துவிட்டால் நல்லதுதானே.



1990 மே 10]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் குற்றச்சாட்டுகள் சொல்லி நீண்ட நாட்கள் ஆகிவிட்டன, அடிக்கடி சொன்ன காரணத்தால், வலியுறுத்திய காரணத்தால் தான் இப்போது சொல்கிறார். நான் பொறுத்திருந்து பார்த்தேன். இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை. இந்த மன்றத்தில் அறிவித்ததை இந்தக் கூட்டத் தொடருக்குள் முடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவர் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 3. விதி 110-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்

**(அ) தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளிலிருந்து சென்ற மீனவர்கள் திரும்பாதது பற்றியும் புயல் விளைவித்த பாதிப்புகளையொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் முதலமைச்சரின் அறிக்கை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் 110-வது விதியின் கீழ் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

*10–10 மணி*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5–5–90 அன்று மாலை வங்காள விரிகுடாவில் தென் மேற்கு திசையில் 650 கிலோ மீட்டர் தூரத்தில் கடலூருக்குத் தென் கிழக்கே, குறைந்த காற்றழுத்த மண்டலம் ஏற்பட்டதன் விளைவாக சென்னை, செங்கை அண்ணா, தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது. உடனடியாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கூறப்பட்டார்கள். 7–5–90 அன்று காலை 11 மணி அளவில் வருவாய்த் துறைச் செயலாளர் தலைமையில் இயற்கை இடர்ப்பாடுகள் பற்றிய உயர்நிலைக் குழு கூட்டப்பட்டது. வருவாய் நிர்வாக ஆணையாளர், பொதுத்துறைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையாளர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர், மீனளத் துறை இயக்குநர், உள்ளூர் பாதுகாப்பு இயக்குநர், விமானப்படை, கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தீயணைப்புத் துறை இயக்குநரும், மீனளத்துறை இயக்குநரும் தேவையான தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டார்கள். தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களைப் பத்திரமான இடங்களுக்குக் கொண்டு சேர்ப்பது, உணவு அளிப்பது.

வெள்ள மீட்பு, சாலைத் தடைகளை அகற்றுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

விமானப் படை ஹெலிக்காப்டர்களும், ராணுவப் படகுகளும், தயார் நிலையில் வைக்கப்பட்டன. மேற்கொள்ப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைளைப் பற்றி, அவ்வப்போது பொது மக்களுக்கு அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன. சென்னை நகரில் இப்புயலால் ஏற்பட்ட பலத்த மழையால் பாதிக்கப்பட்ட சுமார் 2000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். சுமார் ஒரு லட்சம் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. கடும் மழையால் சாலைப் போக்குவரத்து சில இடங்களில் பாதிக்கப்பட்டன. சில இடங்களில் மரங்கள் சாய்ந்தன. அவற்றையெல்லாம் அப்புறப்படுத்த அவ்வப்போது உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மின்சாரம் தாக்கியதால் சென்னையில் இருவரும், செங்கை அண்ணா மாவட்டத்தில் ஒருவரும் உயிர் இழந்தார்கள், அது தவிர, மேலும் 3 பேர் இந்தக் கடும் மழையின் காரணமாக உயிர் இழந்திருக்கிறார்கள். அவர்களின் குடும்பத்திற்குத் தலா 2,000 ரூபாய் வீதம் நிவாரண நிதி நாளை மாலைக்குள் வழங்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பழவேற்காடு பகுதியில் வெள்ளத்தால் சூழப்பட்ட மக்களுக்கு படகுகள் மூலம் உணவு வழங்கப்பட்டது. எண்ணூர் நெடுஞ்சாலையில் கடல் அரிப்பால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சாலைகளைப் டழுது பார்க்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. நானும், பொதுப்பணித் துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் அதிகாரிகளோடு சென்று, கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும், பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களையும் பார்த்து, நிலைமைகளைக் கேட்டறிந்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நிவாரணப் பணிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மழை அதிகம் இல்லை என்ற போதிலும், சோணாங்குப்பம், கிள்ளை என்ற பகுதிகளில் மட்டும் சுமார் 700 குடும்பங்கள் புயல் பாதுகாப்புக் கட்டிடங்களுக்கு, அவர்கள் பத்திரமான இடங்களுக்கு, அழைத்து செல்லப்பட்டு, பின்னர் 9-5-90அன்று அவர்கள் எல்லாம் மீண்டும் அவரவர் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த மாவட்டத்தில் 8 கட்டு மரங்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டன. உயிர்ச்சேதம் ஏதுமில்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் உள்ள 2 தூண்கள் இடிந்து விழுந்ததால் 8 பேர் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள்.





சன்னைக்குத் திரும்பிக்கொண்டிருந்த 1116 என்ற எண்
காண்ட படகு, புலிகாட் என்ற இடத்தின் அருகில் வரும்போது
யந்திரக் கோளாறு ஏற்பட்டது. அது கூனங்குப்பம் அருகில்
ரையேற்றப்பட்ட பிறகு, அதிலிருந்த 4 மீனவர்களும்
த்திரமாகக் கரை சேர்க்கப்பட்டார்கள். முருகன் என்ற பெயர்
காண்ட படகு பழுதாகி, அதிலிருந்து 5 மீனவர்களோடு
சன்னையிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் தத்தளித்துக் கொண்
ருந்தது, ஜெய் அம்பிகா என்ற பெயர் கொண்ட,
ந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு கப்பலால், பழு
ான படகு கண்டுகொள்ளப்பட்டு, அதிலிருந்த தயாளன்,
ணி, நாகலிங்கம், விஜயன், ஆறுமுகம் என்ற 5 மீனவர்களும்
ாப்பாற்றப்பட்டார்கள். இயந்திரக் கோளாறு காரணமாக ஒரு
ிசைப்படகு (எண். 1086) ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அருகில்
ங்கூரம் பாய்ச்சப்பட்டு நின்றிருப்பதாகத் தகவல் கிடைக்கப்
ெற்றுள்ளது. அதிலிருந்த மீனவர்களில் 3 பேர் சென்னை திரும்பி
ிட்டார்கள். மற்ற 2 மீனவர்களைக் காப்பாற்ற உரிய நடவடிக்
கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எம்.எஸ். 937 என்ற எண்
கொண்ட படகு ஒன்று சென்னையை விட்டு 2–5–90 அன்று
மீன் பிடிக்க ஆந்திரக் கரைக்குச் சென்று, சென்னை திரும்பும்
வழியில் பழவேற்காடு அருகில் மூழ்கிவிட்டதாகத் தெரிகிறது.
டகிலிருந்த 5 மீனவர்களில் 4 பேர் கரை சேர்ந்துவிட்டார்கள்.
மற்ற ஒருவரைப் பற்றிய விவரம் தெரியவில்லை.

அதிராம்பட்டினத்தில் உள்ள கரையூர் தெருவிலிருந்து 5–5–90 அன்று மீன் பிடிக்கச் சென்ற 15 மீனவர்கள் காணவில்லை என்ற தகவல் கிடைத்ததும், மாவட்ட நிர்வாகம் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்து, அவர்கள் அனைவரும் கரை சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதே இடத்திலிருந்து 6–5–90 அன்று கடலுக்குள் சென்ற 3 மீனவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் உதவியோடு 8–5–90 அன்று கரை சேர்க்கப்பட்டு உள்ளார்கள்.

நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த 12 மீனவர்கள் 5–5–90 அன்று மீன்பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் காணவில்லை என்று தகவல் கிடைத்தது. அவர்களைத் தேடும் பணியிலே மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டது. மூன்று மீனவர்கள் 7–5–90 அன்றும், ஒன்பது மீனவர்கள் 8–5–90 அன்றும் கரை சேர்க்கப்பட்டுள்ளனர். நாகை, நம்பியார் நகரைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் (பழனியாண்டி, முருகேசன், நொண்டி), 6–5–90 அன்று மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் மூவரும் 8–5–90 அன்று காலை 10 மணிக்கு மல்லிப்பட்டினம் வந்து சேர்ந்தனர். பின்பு அவர்கள் சொந்த இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 10

10-15 மணி

கோடியக்கரைக்கு அருகிலே உள்ள ஆற்காட்டுத்துறை கடற்கரைப் பகுதியில் படகில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் காணவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்த நான்கு மீனவர்களும் நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டையைச் சேந்தவர்கள். 6–5–90 அன்று மீன்பிடிக்கச் சென்றவர்கள். Coast guard மற்றும் தொடர்புடைய இதர அமைப்புகள் அவர்களைத் தேடும் பணியிலே ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். விமானம் மூலம் தேடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தூதுவருக்கும் இது சம்பந்தமாகத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், ஜகதாப்பட்டினம் கடற் பகுதியில் ஒரு மீனவர் மின்னலால் தாக்குண்டு இறந்துவிட்டார். இவர் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர். ஆதலால், இவரது குடும்பத்திற்கு காப்புறுதித் தொகை ரூபாய் 15,000 வழங்க ஏற்பாடு செய்யப்படும். புயல் எச்சரிக்கைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் 7–5–90 அன்று இராமநாதபுரம் வட்டம், கீழக்கரையைச் சேர்ந்த 4 மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றார்கள். ''வத்தை'' என்று பொதுவாக அழைக்கப்பெறும் நாட்டுப் படகில் அவர்கள் சென்றார்கள். மீன்பிடிப்பதற்காக அவர்கள் 3 முறை வெடி மருந்துக் குச்சிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். முதல் முறையாகவும், மூன்றாம் முறையாகவும் அவர்கள் பயன்படுத்திய வெடி மருந்துக் குச்சிகள் உடனடியாக வெடித்தன. இவர்களுக்கு மீன்கள் கிடைத்தன. இரண்டாவது முறையாக பொருத்தப்பட்ட வெடி மருந்துக் குச்சி முதலிலே வெடிக்காமல் எதிர்பாராத விதமாக திடீரென்று வெடித்ததால், வெடி மருந்துக் குச்சிக்கு அருகில் சென்ற 19 வயது நிரம்பிய பால்ராஜ் என்பவர் தீ காயங்களுக்கு உள்ளாகி, கடல் நீரில் மூழ்கிவிட்டார். மீதமிருந்த 3 மீனவர்களும் பால்ராஜ் சடலத்தைக் கடலிலேயே விட்டுவிட்டு கடற்கரை விரைந்து விட்டார்கள். 8–5–90 அன்று கீழக்கரை கடற்கரையில், இறந்த பால்ராஜ் சடலம் காணப்பட்டது. கரை திரும்பிய மூன்று மீனவர்களில் தோழன் மகன் சின்னத்தம்பி, மத்தியாஸ் மகன் சின்னத்தம்பி ஆகிய இருவரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். முனியாண்டி மகன் மலைராஜ் என்ற மீனவர் தலைமறைவாகியுள்ளார். கீழக்கரை காவல் நிலையத்தினர் இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்து, புலன் விசாரணை செய்து வருகிறார்கள். பெருமழையால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விவரங்கள் ஆங்காங்கே மாவட்ட நிர்வாகத்தினரால் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. ஓரிரு நாட்களில் அந்தக் கணக்கு எடுக்கும் பணி முடிந்துவிடும். அதன்பின்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பின் அளவுக்கேற்ப நிவாரணத் தொகைகள் வழங்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே எந்த விதமான விவாதமும் இடையாது. பேரவை விதி 110 இன் கீழ் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரவர்கள் அறிக்கைகள் வைப்பார்கள்.



1990 மே 10]

(ஆ) டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர்களின் மாநாட்டின் நடவடிக்கைகள் குறித்தும் மூடப்பட்ட மில்களைத் திறக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கைகள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை விதி 110–ன் கீழ் கீழ்கண்டவைகளை அவைக்கு அளிக்கிறேன். ஒன்று, 29–வது இந்திய தொழிலாளர்கள் மாநாட்டின் ஆழ்ந்தாராய்வுகள் பற்றியும், இரண்டு, மூடிக்கிடக்கும் 6 மில்களைத் திறக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் இரண்டு அறிக்கைகளின் நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

29–வது இந்திய தொழிலாளர் மாநாட்டின் ஆழ்ந்தாராய்வுகள் பற்றிய அறிக்கை.

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21–22 ஆகிய இரு நாட்களில், 29–வது இந்திய தொழிலாளர் மாநாடு, புதுடில்லி பாராளுமன்ற இணைக்கட்டிடத்தில் நடந்தது. மைய அரசின் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டை மாண்புமிகு பாரதப் பிரதமர் 21.4.90 அன்று துவக்கி வைத்தார். தமிழ்நாட்டின் சார்பாக மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர், தொழிலாளர் துறை ஆணையர் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசு இணைச் செயலாளர் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

2. இந்திய தொழிலாளர் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் பின்வரும் பொருள்கள் இடம் பெற்றிருந்தன :—

(1) நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு வகித்தல்.

(2) தொழிலுறவு சட்டத்தை (தொழிற் தாவாச் சட்டம் மற்றும் தொழிற் சங்கச் சட்டம் ஆகியவற்றிற்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் உட்பட) பரிசீலித்தல்.

(3) தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைச் சரிபார்க்கவும் அவ்வாறு சரிபார்த்த தொழில்களை வகைப்படுத்தவும் நடைமுறைகளை வகுத்தல்.

(4) ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்கள் முன்னேற்றம் பற்றிப் பரிசீலனை செய்தல்.

(5) தொழிலாளர் சட்டங்கள் நடைமுறைப்படுத்துதலை பரிசீலித்தல்; மற்றும்

(6) குழந்தை தொழிலாளர், பெண் தொழிலாளர் மற்றும் குடிபெயரும் தொழிலாளர்கள் பற்றி சட்டங்களையும், கொள்கைகளையும் ஆராய்தல்.

3. (1) **நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு வகித்தல் :** இக் கூட்டத்தில் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு வகித்தல் திட்டத்திற்கென ஒரு சட்ட வடிவம் தரப்பட வேண்டும் என்றும் அச்சட்டம் மைய அரசால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் ஒருமித்த கருத்து நிலவியது.

(i) கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் முதலில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும் வகையில் படிப்படியாகச் செயற்படுத்தும் வகையில் நெகிழ்வுத் தன்மை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

(ii) பெரும்பாலான தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள தொழில் நிறுவனங்களைப் பொறுத்த வரை தேசிய கருத்தரங்கில் எடுத்த முடிவுகளின் அடிப்படையில் தொழிலாளரின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். ஏனைய இனங்களிலும், தொழிலாளர் அல்லாத பணியாளர்களின் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையிலும் நேரடி இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக பிரதிநிதித்துவம் முடிவு செய்யப்பட வேண்டும். வேலையினின்றும் நீக்கப்பட்ட தொழிலாளர்களைப் பொறுத்தவரை நீதிமன்ற விசாரணையில் முடிவு எடுக்கப்படாமல் உள்ள வழக்குகளில் தொடர்புள்ள பணியாளர்களும் இரகசிய வாக்கெடுப்பில் பங்கு கொள்ளத் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

(iii) தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் ஆகியோருக்கிடையே சமமான அடிப்படையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். எனினும் நிர்வாகச் செயலாட்சிக் குழு அளவில் (Board Level) பிரதிநிதித்துவம் குறித்து ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தொழிலாளர்களுக்கு 50 சதவீத அளவில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என தொழிலாளர் பிரதிநிதிகள் கூறினர். ஆனால் நிர்வாகத்தின் தரப்பில் ஆரம்பக் கட்டத்தில் தொழிலாளர்கள் சார்பாக ஒரு பிரதிநிதியும் இதர பணியாளர்கள் சார்பாக பணியாளர்களுக்கும் ஒரு பிரதிநிதியும் மட்டும் இருந்தால் போதும் என்று கூறப்பட்டது. இந்தப் பிரதிநிதித்துவம் 50 சதவீதமாக இருக்க வேண்டும் என மாநில அமைச்சர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

தொழிலாளர்களுக்கு நிர்வாக மூலதனத்தில் பங்கு பற்றிய பிரச்சினை உத்தேசிக்கப்பட்ட சட்டத்திலிருந்து தனியாக பரிசீலிக்கப்படவேண்டும்.



(2) தொழிலுறவுச் சட்டம் : 1988-ஆம் ஆண்டு மாநிலங்கள் அவையில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிற்சங்கம் மற்றும் தொழிற் தாவாக்கள் (திருத்தச்) சட்டம் திரும்பப்பெற வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது. அதேசமயத்தில், ஒரு ஒருங்கிணைந்த தொழிலுறவுச் சட்டம் விரைவில் இயற்றப்பட வேண்டும் என்கிற கருத்தும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கென, ஒரு இருதரப்பு குழு இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரசின் தலைவராக திரு. ஜி. இராமானுஜம் அவர்கள் தலைமையில் அமைக்க மாநாடு முடிவு செய்தது. இக் குழுவில் ஒன்பது தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் ஒன்பது தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இக் குழு, தனது அறிக்கையை 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

(3) தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைச் சரிபார்த்தல், தொழில்களை வகைப்படுத்துதல், ஆகியவற்றிற்காக நடைமுறைகளை வகுத்தல் ஏனையத் தொழிற்சங்கங்களைப் பொறுத்தவகையில் கிராமப்புறத் தொழிலாளர்கள் விவசாயத் தொழில்களைத் தவிர்த்து ஏனைய தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்த சரிபார்க்கும் முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்து பொதுவாகச் சரிபார்த்தலுக்கான தேதி 31.12.89 என்றும் முடிவு செய்யப்பட்டது.

விவசாய மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டிலும் அதற்கான தொழில்களை வகைப்படுத்துவதற்கான நடைமுறைகளை இறுதி செய்ய மைய தொழிற்சங்கங்களின் கூட்டமொன்று 15.5.90 அன்று 6.00 மணி அளவில் மைய தொழிலாளர் நல அமைச்சகத்தால் கூட்ட முடிவு செய்யப்பட்டது.

4. **ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர் முன்னேற்றம் பற்றிய ஆய்வு :**

விவசாயத் தொழிலாளர்களுக்கும், கட்டுமானப் பணியில் ஈடு பட்டு உள்ள தொழிலாளர்களுக்கும் பணிப் பாதுகாப்பு, சம்பளம் மற்றும் நல நடவடிக்கைகள் உள்ளடக்கி மைய அரசே சட்டம் இயற்ற வேண்டுமென்று ஒருமித்த கருத்து நிலவியது. கட்டுமானப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் உத்தேசச் சட்டத்தின் மேலும் அத் தொழிலாளர்களுக்கு ஆபத்தின்மை மற்றும் சமூகப் பாதுகாப்புக்கு வழி செய்வதுடன் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வாரியங்கள் அமைப்பதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கும் வகையிலும் இருக்க வேண்டும்.

தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களைச் செம்மையாகச் செயற்படுத்த நிர்வாக அமைப்பினை வலுப்படுத்தவும் வலியுறுத்தப்பட்டது.

[திரு.கே. என். நேரு] [1990 மே 10

**குறைந்த அளவு ஊதியச் சட்டம் :** இச்சட்டத்தில் கூறியுள்ள காலமுறைப்படி குறைந்த அளவு ஊதியம் மாற்றி அமைக்கப்படவேண்டும். மற்றும் அதிக அளவிலான தொழில்கள் இச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். குறைந்த அளவு ஊதியத்தை மாற்றி அமைக்கும் போது விலைவாசி உயர்வினைச் சமாளிக்கும் முகமாக விலைவாசிப் புள்ளியுடன் இணைக்கப்பட்ட மாறுபடும் அகவிலைப்படியும் நிர்ணயிக்க வழி செய்யப்பட வேண்டும்.

**வேலையாள் இழப்பீட்டுச் சட்டம் :** விபத்து நிகழ்ந்த பிறகு ஒருவர் அந்த நிறுவனத்தின் தொழிலாளியா இல்லையா என்கிற சர்ச்சை எழாதவண்ணம் தொழிலாளர்களை அடையாளம் காட்டுவதற்கு வகை செய்ய இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

**குழந்தைத் தொழிலாளர் சட்டம் :** குழந்தைத் தொழிலாளர்கள் எங்கெங்கு அதிகமாக காணப்படுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கென நடைமுறைப்படுத்தப்படும் நலத் திட்டங்கள் தொடர்ந்தும், அதிக அளவிலும் செயற்படுத்த வேண்டுமென்று மாநாடு ஒருமித்த கருத்து தெரிவித்தது.

**இடம் பெயர்ந்து செல்வோர் சட்டம் ;** முன்கூட்டியே பயணச்சீட்டுத் தொகையை செலுத்த வேண்டுமென்று சட்ட விதியில் வரையறுக்கப்பட்டுள்ளதால் அரபு நாடுகளுக்கு பணி நிமித்தம் செல்பவர்களின் எண்ணிக்கையை மிகவும் பாதிக்கிறது. எனவே இது சம்பந்தமான விதி மாற்றி அமைப்பது பற்றி ஆவன செய்யப்பட வேண்டும்.

**ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் :** ஒப்பந்த முறை நீக்கப்படும்பொழுது, வேலையிழக்கும் ஒப்பந்தத் தொழிலாளர்களை அந்த நிறுவனங்கள் பணியில்மர்த்திக் கொள்ளவேண்டுமென இச் சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை என்பதை மாநாடு சுட்டிக்காட்டி இதனைப் பரிசீலிக்க வேண்டும் என்று கூறியது.

**மாநிலங்களுக்கு இடையே குடிபெயரும் தொழிலாளர் சட்டம் :** இச் சட்டத்தில் விதிகளை மீறுவோர்களுக்குத் தற்போது விதிக்கப்பட்டுள்ள தண்டனை மிகவும் குறைவாக உள்ளது என்றும், சட்ட விதிகளை மீறாமல் தடுக்க தண்டனை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் கருதப்பட்டது.

**மூடிக் கிடக்கும் 6 ஆலைகளைத் திறக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய அறிக்கை :**

தமிழகத்தில் மூடிக் கிடக்கும் 6 ஆலைகளின் நிர்வாகத்தை தமிழக அரசே ஏற்று நடத்தவேண்டும் என்ற முன் மொழிவு தமிழக அரசால், மத்திய அரசின் ஒப்புதலுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.



1990 மே 10] [திரு. கே. என். நேரு]

இந்த முன்மொழிவைத் துரிதப்படுத்தி ஆணை பெற செய்தி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆகிய இரு அமைச்சர்களும், தங்களுடன் கைத்தறி மற்றும் துணி நூல் செயலர், தொழிலாளர் ஆணையாளர் மற்றும் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் ஆகிய அதிகாரிகளுடன் 19-4-90 அன்று காலை டெல்லியில மத்திய ஜவுளித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சரத் யாதவ் அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினர். உரையாடுகின்றபொழுது தமிழக முதல்வர் எழுதியிருந்த நேர்முகக் கடிதத்தின் நகலும் மத்திய அமைச்சரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. கலந்துரையாடலின் போது மத்திய அமைச்சருடன் மத்திய அமைச்சக அதிகாரிகளும் இருந்தனர். தமிழக அமைச்சர்கள் இருவரும் தேர்தல் அறிக்கையில் "மூடிய ஆலைகளைத் திறப்போம்" என்று அளித்த வாக்குறுதியை நினைவூட்டி, இதில் தமிழக அரசு எவ்வளவு தீவிரமாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசு தனது ஒப்புதலை விரைந்து தருவதற்கான காரண காரியங்களை, வலுவான வாதங்களை மத்திய அமைச்சர் முன் வைத்து வலியுறுத்தினர். மத்திய அமைச்சரும் இதனை நியாயமாக பரிவோடு பரிசீலிக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டார்கள். இந்த கலந்துரையாடலுக்கு முன் தமிழக அரசின் இரு அமைச்சர்களும் தமிழக அரசின் அதிகாரிகள் மூவரையும் (கைத்தறி மற்றுப் துணி நூல் துறை செயலர், தொழிலாளர் ஆணையர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர்) முன்கூட்டியே சென்று இத்துறையிலுள்ள மத்திய அரசு அதிகாரிகளைச் சந்தித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழக அரசு அதிகாரிகள் மத்திய ஜவுளித் துறை செயலரைச் சந்தித்து உரையாடினர். மத்திய அரசுச் செயலர் தமது கருத்துரையாக 1985–ஆம் ஆண்டிலிருந்து மூடிய ஆலைகளின் நிர்வாகத்தை ஏற்பதற்கு முன்பு ஆலைகளின் ஸ்திரத் தன்மை (Viability) பார்க்கப்படுகிறது என்றும், அது Nodal ஏஜென்சி மூலமாகவோ அல்லது B.I.F.R. மூலமாகவோ அறியப்படுகிறது என்றும் அதன் பிறகே மத்திய அரசு இதற்கு ஒப்புதல் தருகிறது என்றும் கூறினார். அப்பொழுது கூட தமிழகஅரசின் அதிகாரிகள் தமிழகத்தின் தனித் தன்மையையும் இது விஷயத்தில் ஏற்பட்டிருக்கிற இக்கட்டான நிலைமையையும் விரிவாக விளக்கி, அவருடைய இணக்கத்தைத் தருமாறு வேண்டினர். இதற்குப் பிறகு தான், மத்திய அமைச்சருடன் தமிழக அமைச்சர்களும், அதிகாரிகளும் கலந்து உரையாடினர். மத்திய அமைச்சருடன் கலந்துரையாடிய பின் தமிழக அரசின் அதிகாரிகள் அங்கேயே தங்கி மத்திய அரசு அதிகாரிகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். மத்திய அமைச்சருக்கு எப்படியெல்லாம் குறிப்பு வைக்கலாம் என்பதற்கு சில கருத்துக்களையும் முகாந்திரங்களையும் தெரிவித்தனர்.

தமிழக அமைச்சர்கள் இருவரும் மத்திய அமைச்சரை சந்திப்பதற்கு முன்பு தமிழகத்தை சேர்ந்த மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மாறன் அவர்களைச்

சந்தித்து இது சம்பந்தமாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சத்தியாதவ் அவர்களுடன் இருமுறை தொலைபேசி மூலம் பேசிய பின் தான் தமிழக அரசின் அமைச்சர்கள் மத்திய ஜவுளித் துறை அமைச்சரை சந்தித்துப் பேசினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

19-4-90 மாலை தமிழக அரசு அமைச்சர்கள் இருவரும் அதிகாரிகளுடன், B.I.F.R அலுவலகம் சென்று அதனின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன், அவர்களிடத்தில் நிலுவையிலிருக்கும் நான்கு ஆலைகளைப்பற்றி விரிவாக கலந்துரையாடினர். B.I.F.R. தலைவரும், உறுப்பினர்களும் நல்லிணக்கம் காட்டி, அரசே ஏற்று நடத்த முன்வந்தால் ஸ்திரத் தன்மையைப் (Viability) எற்றி ஒப்புதல் அளிக்க B.I.F.R.-க்கு ஆட்சேபணை இருக்காது என்று சொல்லி, இதற்கான ஒரு வாய்தாவையும் விரைவிலேயே போடுவதாகச் சொல்லி அந்த வாய்தாவுக்கான தேதியாக 17-5-90 என்று நிர்ணயித்து, அன்றைக்கே அந்த நான்கு ஆலைகளின் ஸ்திரத் தன்மை பற்றி ஒப்புதல் (Viability clearance) கொடுக்க இயலும் என்ற பாணியில் பேசினார்கள். அவர்களோடு கலந்துரையாடியது உற்சாகமாகவும், விரைவில் ஒரு முடிவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறும் புலப்பட்டது.

இந்நிலையில் B.I.F.R. அல்லது NODAL ஏஜென்சி மூலமாக "Viability clearance" கொடுத்த பின்போ, அல்லது அதற்கு முன்போ மத்திய அரசு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் ஒப்புதலுக்கு B.I.F.R. அல்லது NODAL ஏஜென்சி clearance வேண்டும் என்று வைத்துக்கொண்டாலும், அவைகள் இன்னும் சில வாரங்களில் கிடைத்துவிடும். அந்த "clearance" கிடைத்த ஒரு சில நாட்களில், மத்திய அரசின் ஒப்புதல் வாங்கி விட முடியும். ஆகக்கூடி ஓரிரு மாதங்களில் நிச்சயமாக இந்த ஆலைகளைத் திறப்பதற்கான அத்தனை ஆணைகளும் வழிமுறைகளும் பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) 1990-91-ஆம் ஆண்டிற்கான பேரவைக் குழுக்கள்.

### (i) பேரவை விதிகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 256-வது விதியின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்குப் பின்வரும் உறுப்பினர்களைப் பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்



3. மாண்புமிகு சட்ட அமைச்சர்
4. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. திரு. எஸ். ஆர். இராதா, எதிர்க் கட்சித் தலைவர்
7. திரு. சம்சுதீன் என்கிற கதிரவன், அரசுத் தலைமைக் கொறடா
8. திரு. என். கணபதி
9. திரு. பெ. சீனிவாசன்
10. திரு. ராம. நாராயணன்
11. திரு. எஸ். திருநாவுக்கரசு
12. திரு. ஜி. கருப்பையா மூப்பனார்
13. திரு. குமரி அனந்தன்
14. திரு. கே. ரமணி
15. திரு. எம். அப்துல் லத்தீப்
16. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்

பேரவை விதி 256-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

### (ii) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990-91 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. அ. கணேசமூர்த்தி
3. திரு. அ. இராசேந்திரன்
4. திரு. கா. அண்ணாதுரை
5. திரு. தா. உதயசூரியன்
6. திரு. டி. ஆர். கஜபதி
7. திரு. வீ. செ. கோவிந்தசாமி
8. பேராசிரியர் க. பொன்னுசாமி

9. திரு. எஸ். டி. உகம்சந்த்

10. திரு. எஸ். டேனியல்ராஜ்

11. திரு. ந. ராமச்சந்திர ரெட்டி

12. திரு. ந. நஞ்சப்பன்

பேரவையின் 240-வது விதியின் கீழ் மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

## (iii) அவைக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 253 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1990-91 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. செ. இராமச்சந்திரன்
2. திரு. கே. இராமச்சந்திரன்
3. திரு. எஸ். ஆர். முனிரத்தினம்
4. திரு. எம். முத்தையா
5. திரு. எம். முத்தையன்
6. திரு. ஜி. பொன்னுபிள்ளை
7. திரு. ஏ. கோதண்டம்
8. திரு. ஏ. சுப்பு
9. திரு. எஸ். குணசேகரன்
10. திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி
11. திரு. கே. ஆர். இராஜேந்திரன்
12. திரு. க. பழனிசுவாமி
13. திரு. எம். மோசஸ்
14. திரு. ஆ. மு. முனிரத்தினம்
15. திரு. எம். அண்ணாமலை
16. திரு. ஜி. பழனிச்சாமி
17. திரு. ஜெ. அசேன்
18. திரு. ந. நஞ்சப்பன்

பேரவை விதி 253 (1)-ன் கீழ், திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.



## 5. கவன ஈர்ப்பு.

### (அ) தென்னாற்காடு மாவட்டம் வெள்ளயம்காவியம் இராமத்தில் வனத்துறை அலுவலர் ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்ததால் ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பாப்பா உமாநாத், திருவாளர்கள் என். பழனிவேல், கே. ஆர். சுந்தரம், சி. கோவிந்தராஜன், கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் குன்றுகளில் உள்ள வெள்ளயம்காவியம் கிராமத்தில் வசிக்கும் வெள்ளையம்மாள் என்பவரிடம் வனத்துறை அலுவலர் ஒருவர் தகாத முறையில் நடந்து கொண்டதால் ஏற்பட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் இச்சம்பவம் சம்பந்த மாக, விருத்தாசலம் வருவாய் கோட்ட அலுவலர் மூலமாக விசாரித்து, திரு. வெள்ளையன் மற்றும் அவரது மனைவி திருமதி வெள்ளையம்மாள் ஆகியோர்களின் வாக்குமூலங்களை பெற்று அறிக்கை ஒன்று சமர்ப்பித்துள்ளார். அதில் கள்ளக்குறிச்சி வட்டம் கல்வராயன் மலையில் உள்ள கல்வியம் கிராமத்தில் வசித்து வரும், திரு. வெள்ளையனுக்கும், திரு. சின்னசாமிக்கும், நீர்ப் பாசன வாய்க்கால் ஒன்று சம்பந்தமாக தகராறு இருந்து வந்தது என்றும், இவ்விஷயத்தில் பஞ்சாயத்தாரின் தீர்ப்பை திரு. வெள்ளையன் மறுத்ததால் அவருக்கு ரூ. 10,000 அபராதம் விதித்தார் என்றும், இதையும் அவர் ஏற்காததால், அவ்வூரைச் சேர்ந்த திரு. தண்டபாணி என்பவர் திரு. வெள்ளையனை, சந்தன மர குற்ற வழக்கில் சிக்க வைக்க திட்டமிட்டார் என்றும் திருமதி வெள்ளையம்மாள் வாக்குமூலம் அளித்ததாக கூறப் பட்டுள்ளது.

2. மேலும், திரு. வெள்ளையன், பழனி சென்றிருந்தபோது, 12–4–90 மதியம் சுமார் 2-00 மணியளவில், 10 வனத் துறையினர், அவரது வீட்டை சோதனையிட்டு, தானியக் களஞ்சிய கூரையின் மீது உள்ள பழைய சந்தன மரக்கட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு, திருமதி வெள்ளையம்மாளையும் அழைத்துக் கொண்டு வெள்ளிமலைக்குச் சென்றார்கள் என்றும், போகும் வழியில் தொரடிபபட்டு கிராமத்தில், திருவாளர்கள் திருநாதனையும், மகேந்திரனையும், வெள்ளையம்மாளோடு வைத்துவிட்டு, மற்றும் 8 வனச் சிப்பந்திகளும் சாராயம் குடிக்கச் சென்றார்கள் என்றும் அப்பொழுது, இருட்டிவிட்டதால், திருவாளர்கள் மகேந்திரனும், திருநாதனும், வெள்ளையம்மாளை அருகில் உள்ள ஒரு ஓடைக்கு அழைத்துச் சென்று கற்பழித்து விட்டு, அவர்களும் சாராயம் குடிக்கச் சென்றுச் விட்டனர் என்றும் திருமதி வெள்ளையம்மாள் வாக்குமூலம் கொடுத்துள்ளார் அதற்குப் பின் வெள்ளையம்மாள் அருகில் உள்ள புதரில் ஒளிந்திருந்து விட்டு, வனச் சிப்பந்திகள் திரும்பி சென்ற பிறகு, கொட்டப் புதூர் கிராமத்தில் போய் தங்கினார் என்றும், அவரது கணவர் பழனியில் இருந்து 14–4–90-ல் வந்தபோது, காவல் நிலையத்தில் போய் புகார் கொடுத்தனர் என்றும் கூறியுள்ளார். அப்புகாரில் வெள்ளையம்மாள் கற்பழிக்கப்பட்டது பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. 15–4–90 அன்று தான், கற்பழிக்கப்பட்டது பற்றி வெள்ளையம்மாள் அவருடைய கணவரிடம் கூறிவிட்டு, அதிகாரி களுக்கும் இதுபற்றி தந்திகள் அனுப்பியுள்ளார். திரு. வெள்ளையன் தன்னுடைய வாக்குமூலத்தில் தான் ஆத்தூர் சென்றிருந்ததாகவும், தன் மனைவி கூறியபடி, பழனிக்கு செல்லவில்லை என்றும் கூறியுள்ளார்.

3. விருத்தாசலம் வருவாய் கோட்ட அலுவலர், 17–4–90 அன்று திருமதி வெள்ளையம்மாளை ஒரு பெண் மருத்துவர் மூலம் மருத்துவப் பரிசோதனை செய்ததில் பெண் மருத்துவர் தன்னுடைய அறிக்கையில், வெள்ளையம்மாளுக்கு, பலாத்காரம் செய்ததற்கான வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்று சான்றிதழ் வழங்கியுள்ளார். மேலும் உடல் பரிசோதனைக்கான அறிக்கை மருத்துவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இச்சம்பவம் சம்பந்தமாக, கச்சரபாளையம் காவல் நிலையத்தில், இந்திய தண்டனையியல் சட்டம், பிரிவு 354 (Molestation) மற்றும் 323 (Simple hurt)-ன் கீழ், ஒரு வழக்கு எண் 103/90 பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

4. வனத்துறையினரும், கோமுகி சரகத்தில், குற்ற எண் 3/90–91 நாள் 12–4–90-ன் படி, 375 செ. மீ. நீளம். 45 செ.மீ. சுற்றளவுள்ள, 41.5 கிலோ எடையுள்ள சுமார் ரூ. 8000 மதிப்பு கொண்ட ஒரு சந்தனக்கட்டை பிடிக்கப்பட்டதற்கான ஒரு வழக்கு பதிவு செய்துள்ளனர். இக்குற்றம் சம்பந்தமாக, திரு. வெள்ளையனை வனத்துறையினர் 17–4–90 மாலை 6.00 மணியளவில் கைது செய்து, 18–4–90 காலை கள்ளக்குறிச்சி குற்றவியல் நீதிபதி முன் ஆஜர் படுத்தினார்கள்.





5. விருத்தாசலம் வருவாய் கோட்ட அலுவலர், ரகசிய விசாரணை செய்து, திருமதி வெள்ளையம்மாளுக்கு உடம்பில் எந்த காயமும் இல்லாததாலும், சந்தன மரக் குற்ற வழக்கு 12–4–90, 12.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டதாலும், வனத்துறையினர், தன்னை கற்பழித்ததாகக் கூறும் திருமதி வெள்ளையம்மாளின் புகாரில் சந்தேகம் இருப்பதாகத் தெரிகிறது என்றும் கூறியுள்ளார். இருந்தாலும் திருமதி வெள்ளையம்மாள் கொடுத்த புகாரின் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கினை விசாரணை செய்து வரும் காவல்துறை கண்காணிப்பாளரின் அறிக்கையும் மருத்துவ அறிக்கையும் எதிர்பார்க்கப்படுகிறது.

6. முதன்மை வனத்துறைத் தலைவரும், சந்தன மர வழக்கு பதிவு செய்யப்பட்ட காரணத்தால், திருமதி வெள்ளையம்மாள் வீண் புகார் கொடுத்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கமான அறிக்கையில் நடந்ததை மறுத்து, மாற்றுக் குற்றம் சாட்டக்கூடிய அளவிலே தான் இருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கல்ராயன் மலைப் பகுதியில் கிட்டத்தட்ட 120 கிராமங்களில் 45 ஆயிரம் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்களை வனத்துறையினர் சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கி வருகின்றனர். அதில் இதுவும் ஒன்று. அங்கே 1984–85-ல் விவசாய சங்கம் ஆரம்பிக்கப்பட்டு மார்க்சிஸ்ட் கட்சி வந்த பிறகு, அந்த மலைவாழ் மக்களுக்குக் கொஞ்சம் உத்வேகம் வரவே, ஏற்கெனவே நடந்த காரியங்கள் எல்லாம் நடைபெற முடியாத நிலைமை ஏற்படக்கூடிய காரணத்தாலே அந்த வனத்துறையினர் அவர்கள் மீது சந்தனக் கட்டை திருடியதாக வழக்கு போடுவது– இப்படிப்பட்ட காரியங்கள் இப்போது கூட சமீபத்தில் ஒரு மாத காலத்தில் 200 வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. அங்கு வனத் துறை அதிகாரி, ஒரு வீட்டுக்கு ஒரு மரக்கால் கடுக்காய் வேண்டும் என்று—அது கடுக்காய் விளையக் கூடிய இடம்—12 கிலோ கேட்பதும், ஒரு வீட்டுக்கு ஒரு புளி கட்டி வேண்டும் என்று கேட்டதும்—இதையெல்லாம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அபராதம் போடுவதும், அந்த அபராதத்தைக் கட்ட மறுத்தால் அவர்கள் மீது இப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் போடுவது என்றும் இந்த அடிப்படையில் தான் இந்த கற்பழிப்புச் சம்பவம் 12–4–90–ல் ஏற்பட்டது; அங்கு சந்தனக் கட்டை திருடிக்கொண்டு போனதால் அது ஏற்பட்டதல்ல. அவர்கள் மேலும் சொல்லி இருக்கிறார்கள், இதை நீங்கள் காவல் துறைக்கு புகார் செய்தால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைவாகக் கேளுங்கள். உங்களுக்குத் தெரியாததா? எல்லோரும் சொற்பொழிவில்

ஆரம்பித்து விடுகிறார்கள். அது கவன ஈர்ப்பாக இருந்தாலும் சரி, துணை வினாவாக இருந்தாலும் சரி, சொற்பொழிவைத் தவிர வேறு எதுவும் கிடையாது என்று ஆகிவிட்டது.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்த கற்பழிப்பு சம்பவம் பற்றி நீங்கள் காவல் துறையில் புகார் செய்தால் உங்கள் மீது வழக்கு போடுவேன் என்ற அடிப்படையில் தான், அந்த வெள்ளையம்மாளின் கணவன் வழக்கு கொடுத்த காரணத்தினால், அவர் மீது கவுண்டர் வழக்கு போட்டு இது நடைபெறுகிறது. இது சரியல்ல. இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அந்த கற்பழிப்பு செய்தவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கல்ராயன் மலையிலே கல்வியம் என்ற கிராமத்திலே நடைபெற்ற இந்த நிகழ்ச்சி பற்றி அதிகாரிகளோடு நான் விரிவாக ஆலோசனை நடத்தினேன். அங்கே வனத்துறை காவலர்கள்,பாரெஸ்டர்,கார்டு வாட்சர் என்ற அளவிலே ஒரு 10 பேர் 12 ஆம் தேதி கல்வியம் கிராமத்துக்குச் சென்று வெள்ளையன் வீட்டுக்குச் சென்று அந்த நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். அங்கே நெற் களஞ்சியம் இருக்கின்ற அந்த இடத்திலே பழைய ஒரு சந்தனக் கட்டை இருந்ததாகக் கூறி, வெள்ளையனுடைய மனைவி வெள்ளையம்மாளை அழைத்துச் சென்று இருக்கிறார்கள். அழைத்துச் சென்றது தவறு என்று நான் ஒத்துக்கொள்கின்றேன். இந்த வழக்கிற்காக ஒரு வீட்டிற்கு பகல் 12 மணிக்கு 10 பேர் சென்று ஒரு பெண்ணை, வெள்ளையனுடைய மனைவி வெள்ளையம்மாளை அழைத்துச் செல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை; அழைத்துச் சென்றது தவறு. அங்கிருந்து ஏதோ பழைய கட்டை. அது எந்த ஆண்டு வெட்டப்பட்டது என்று கூட தெரியவில்லை; 5 ஆண்டுகள் இருக்கலாம்.; 10 ஆண்டுகள் இருக்கலாம்; 1976—லே தான் ஜாகீர்தார்களிடம் இருந்து அந்தப் பகுதி ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக நம்முடைய வனத்துறைக்கு மாற்றப்பட்டு இருக்கின்றது. ஆகவே அந்தக் காலத்தில், ஜாகீர்தார் இருந்த காலத்திலே வனத்துறையிலே சந்தன மரங்களைக்கூட தாராளமாக அங்கே உள்ள மலைவாசிகள் வெட்டிக்கொள்வது உண்டு; அந்த முறையிலே வெட்டிக் கொண்டு தான் அதை அவர்கள் அங்கே வைத்து இருக்க முடியும். ஆனால் இதற்கு அங்கே ஒரு பின்னணி இருக்கின்றது, அங்கே ஊரிலே ஒரு தகராறு; வெள்ளையனுக்கும், சின்னையனுக்கும் நிலத் தகராறு. இந்தத் தகராறுக்காக பஞ்சாயத்து கூடி 10 ஆயிரம் ரூபாய் அபராதம் வெள்ளையனுக்கு விதித்து இருக்கிறார்கள். அவர் அதைக் கொடுக்க மறுத்திருக்கிறார். இப்படி ஒரு தகராறிலே எப்படியோ வனத்துறை காவலர்கள் அங்கே வந்து நுழைந்திருக்கிறார்கள். இது மிக மிகத் தவறு என்று நான் ஏற்றுக்கொண்டு அந்தக் காவலர்கள் மீது



10—25 மணி

அங்கே உள்ள வனத்துறை அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை நிச்சயமாக ஏனென்றால்,காவலர்கள் தவறு செய்கிற பொழுது— கீழே உள்ளவர்கள் தவறு செய்கின்றபொழுது, மாவட்ட ரீதியிலே டி.எஃப்.ஓ., அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே கடந்த ஓராண்டுக் காலமாகச் சொல்லி வருகிறேன். ஆகவே, அந்த மாவட்ட டி.எஃப்.ஓ., உள்பட அங்கேயுள்ள காவலர்கள் மீது உரிய நட வடிக்கை எடுக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், கற்பழிக்கப்பட்ட அந்தச் சம்பவம் பற்றிப் பல்வேறு மான கருத்துக்கள் இருக்கின்றன. வெள்ளையம்மாள், வருவாய்க் கோட்ட அலுவலரிடம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிடுவதற்காக மன்னிக்கவும். ஓரிரு வரிகளில் விடை சொல்லிவிடலாம். ஏன் என்றால், ஏற்கெனவே ஒரு நீண்ட அறிக்கை கொடுத்தாகி விட்டது. இன்னும் ஆறு சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும் என்று சொல்லி விட்டேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : முக்கியமான ஒரு பிரச்சினை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மறுக்கவில்லை. இன்னும் நிறைய நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவருக்கு ஏற்கெனவே அறிக்கை கொடுத்திருக்கிறது. அதனால் சுருக்க மாகவே சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, ஏனென்றால் இது கற்பழிப்பு என்ற ஒரு விவகாரம் வனத் துறைக்கு வருவதால், பழிபோடுவது — அது உண்மையா இல்லையா என்று ஓரளவு சொல்லித்தான் ஆக வேண்டும்.

தலைவரவர்களே, நான் சுருக்கமாக முடித்துக் கொள் கிறேன். கற்பழிக்கப்பட்டாள் வெள்ளையம்மாள் என்று சொல்வதிலே சில சந்தேகங்கள் இருக்கின்றன. அங்கே விசாரணை செய்த வருவாய்க் கோட்ட அலுவலரே நேர விசாரித்துவிட்டு அதிலே சந்தேகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆகவே கற்பழிக்கப்பட்டாள் என்று சொல்லவில்லை—நாங்கள் ஒரு பெண் கற்பழிக்கப்படக் கூடாது [illegible] எந்தவிதமான [illegible] கருத்து வேறுபாடும் இல்லை. அதுவும் [illegible] அதிகாரிகள்

தான். ஆனால் அதற்குரிய ஆதாரம் இல்லை; சந்தேகம் இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், வனத் துறை அதிகாரிகளுக்கும், இந்தப் பகுதியிலே வாழ்கின்ற மலைவாசி மக்களுக்கும் இடையிலே தகராறு இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்த்து வைப்பதற்கு வனத் துறை தீவிரமான நடவடிக்கையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்டர்கள் இதற்கு ஆதரவு தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கற்பழிப்பு பற்றி சந்தேகம் என்று சொன்னார்கள். இன்னும்இதுவரை—ஒரு மாத காலமாகியும் கூட, காவல் துறையினுடைய அறிக்கையும் வரவில்லை என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறை அறிக்கையும் வரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி இந்தச் சந்தேகம் வந்தது என்று தெரியவில்லை. நான் பின்னணியைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதுசம்பந்மாக அமைச்சரவர்கள், எங்களைப் போன்றவர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அங்கு வனத் துறையினரால் நடத்தப்படக்கூடிய, ஏற்கெனவே கட்டைகளைத் திருடுவது, பல்வேறு காரியங்களுக்கு எல்லாம் குறுக்கே நிற்கிற அந்த விவசாய சங்கமும், அதனுடைய தலைவரும் என்கின்ற காரணத்தினால்தான், அந்த விவசாய சங்கத்தினுடைய தலைவரையே 9–4–87-இல் அடித்துக் கொலை செய்யும் நோக்கத்தோடு சென்றிருக்கிறார்கள். இது பூராவும் ஒரு வழக்கே நடந்து கொண்டிருக்கிறது. அந்த பாட்சாகான் என்பவரைச் சொல்லி, இன்றைக்கு அமைச்சரிடத்திலே தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு வேறு ஒரு பாய் இதிலேயெல்லாம் ஈடுபட்டு இருக்கிறார். அவருக்கு மூன்று லாரிகள் உண்டு. பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அந்த விவசாய சங்கத் தலைவர்—அவரை முஸ்ம் என்கிற காரணத்தினால் அவர் பெயரைப் போட்டு இவர் இதற்கெல்லாம் சம்பந்தம் என்று அனாவசியமாக அமைச்சருக்குப் பொய்யான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இது சம்பந்தமாகக் கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக, 8–6–87, 11–11–87, இப்பொழுது அண்மையிலே 21–4–90 அங்கிருந்து மகஜர்கள் நம்முடைய மாநில முதலமைச்சரவர்களுக்கும், வனத் துறை அமைச்சரவர்களுக்கும், பாரதப் பிரதமர் அவர்களுக்கும்கூட இப்படிப்பட்ட கொடுமைகளை நிறுத்தச் சொல்லிக் கேட்டிருக்கிறார்கள். எனவே, இங்கு நடந்துவரும் கொடுமைகளை உயர் அதிகாரிகளைக் கொண்டு விசாரிப்பதற்கு வேண்டிய ஒரு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும், இந்தக் கற்பழிப்புச் சம்பவத்தில் ஈடுபட்ட அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.





10–30 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, கற்பழிக்கப்பட்டது என்பதை நான் மீண்டும் வன்மையாக மறுக்கிறேன். ஏனைய தவறுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால், தலைவரவர்களே, ஒரு இரண்டு நிமிஷம் இதற்காக நான் எடுப்பதற்கு நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே முக்கியமான ஒரு பிரச்சினை, வெள்ளையம்மாள் சம்பவம்—அவரை அழைத்துச் சென்றது 12—ஆம் தேதி. 14-ஆம் தேதி போலீஸ் நிலையத்தில் சென்று அவர் ஒரு புகார் மனு கொடுக்கின்றார்; அங்கே கற்பழிக்கப் பட்டதாக அவர் சொல்லவில்லை. 17 ஆம் தேதி வருவாய்க் கோட்ட அலுவலருடைய விசாரணை நடக்கின்றது. அங்கேதான், கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. 12–ஆம் தேதி நடந்த சம்பவத்தின் மீது 14–ஆம் தேதி காவல் துறைக்கு—போலீஸ் நிலையத்திற்குச் சென்று, அவர் ஒரு புகார் மனு கொடுக்கின்றார், எஃப்.ஐ.ஆர். அதிலே அவர் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. தவிர அங்கே காவல் துறையில் கொடுக்கப்பட்ட மனுவில் அவர் தனியாக இருந்த அந்த ஓடை பக்கத்தில், 10 பேர் தன்னை தனியாக விட்டுச் சென்று விட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் சொன்னபோது, இரண்டுபேர் மட்டும் அங்கே இருந்தார்கள், எட்டு பேர் சென்று விட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட முரண்பட்ட தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. வருவாய்த் துறை அதிகாரி ஒரு பெண் மருத்துவரைக் கொண்டு சோதனை செய்து பார்த்து இருக்கிறார். பலவந்தமாக அவரை கற்பழித்தார் என்று சொல்கிற அளவிற்கு காயம் எதுவும் அவருடைய உடம்பிலே இல்லையென்பது பெண் மருத்துவருடைய ரிப்போர்ட். அதற்குப் பிறகு காவல் துறை ரிப்போர்ட்டும் வந்திருக்கிறது, இன்றைக்கு என்னுடைய கையில்இல்லை. ஆனால் அதைப்பற்றி என்னிடத்தில் வனத் துறை அதிகாரி சொல்லி இருக்கிறார். அதிலேயும் இப்படிப் பட்ட கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரியவில்லையென்று காவல் துறை கூறுகிறது. தவிர, இன்னும் ஒரு ரிப்போர்ட் மருத்துவத் துறையிலிருந்து 'Vaginal semen' அதை அவர்கள் எடுத்து அனுப்பி இருக்கிறார்கள். அதுபற்றிய ரிப்போர்ட் மட்டும் தான் வரவில்லையே தவிர, ஏனைய அறிக்கைகள் அனைத்தும் வந்து விட்டன. அதிலே வனத்துறை அதிகாரிகளுக்கும் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்கும் மலைவாசி மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லக்கூடிய நம்முடைய சங்கராபுரம் தொகுதி உறுப்பினர் முத்தையன் போன்றவர்களுக்கும் அதைப்போல கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பாட்சா ஜான் போன்றவர்கள் எல்லாம் மலைவாசி மக்களுக்காக அங்கே

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 மே 10

போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும், வனத் துறைக்கும்—முத்தையன் அவர்களுக்கும் வனத்துறை அதிகாரிகளுக்கும் தகராறு இருக்கிறது. ஆகவே, தகராறு இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்தத் தகராறை வைத்து, அங்கே ஒரு கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்றது என்பதை நான் ஏற்க மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வாணியாற்று அணையிலிருந்து பாசனத்திற்கு நீர் விடப் பெறாதது:

திரு. வ. முல்லைவேந்தன்: தலைவர் அவர்களே ''வாணியாறு அணையிலிருந்து முறையாகக் கால்வாய்கள் மூலம் பாசனத்திற்குத் தண்ணீர் விடாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

வழக்கமாக வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக செப்டம்பர் முதல் தேதியிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும்.

நீர் வழங்கும் விதிகளின்படி குறைந்த பட்சம் 235 மி. க. அடி கொள்ளளவு நீர்த்தேக்கத்தில் இருந்தால், பாசனத்திற்கு செப்டம்பர் 1—ந் தேதி திறக்கப்படும்.

1989 ஆம் ஆண்டு செப்டம்பர் 1—ந் தேதி நீர்மட்ட உயரம் மற்றும் கொள்ளளவு கீழ்க்கண்டவாறு இருந்தது:

| | |
|---|---|
| நீர்மட்ட உயரம் | 29.77 அடி |
| கொள்ளளவு | 115 மி.க.அடி |

1989ம் ஆண்டு போதுமான கொள்ளளவு இல்லாததால் நீர் செப்டம்பர் 1—ந் தேதி திறந்து விடப்படவில்லை.

புதிய ஆயக்கட்டுப் பரப்பு 8,550 ஏக்கரில் 1,462 ஏக்கருக்கு மட்டும் நடப்பு ஆண்டில் 25—12—89 அன்று முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

புதிய ஆயக்கட்டுப் பரப்பு 1,462 ஏக்கருக்கு 25—12—89 முதல் நனைப்புகளுக்கு மட்டுமே (For wettings only) கீழ்க்கண்டவாறு தண்ணீர் தரப்பட்டுள்ளது. 25—12—89 அன்று அணையில் 50.85 அடி உயரத்திற்கு நீர் இருந்தது. அணையின் தற்போதைய, அப்போதைய கொள்ளளவு 270 மி.க. அடி.



1990 மே 10]

தண்ணீர் தரப்பட்ட விவரம்:

| | | |
|---|---|---|
| டிசம்பர் | 1989 | 5 நாட்கள் |
| சனவரி | 1990 | 8 நாட்கள் |
| பிப்ரவரி | 1990 | 9 நாட்கள் |
| மார்ச் | 1990 | 9 நாட்கள் |

16—12—89 அன்று நீர்மட்டம் 53.87 அடியாகவும் நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு 298 மி.க. அடியாகவும் இருந்தது. 1967 ஏக்கர் பழைய ஆயக்கட்டுப் பரப்புக்கு 16—12—89 முதல் 28—2—91 முடிய தண்ணீர் தொடர்ந்து விடப்பட்டுள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன்: தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1967 ஏக்கர் பழைய ஆயக்கட்டுப் பரப்புக்கு 16—12—1989 முதல் 28—2—1990 முடிய தண்ணீர் விடப்பட்டுள்ளது என்றும், புதிய ஆயக்கட்டுப் பரப்பு 1,462 ஏக்கருக்கு மாதத்திற்கு முறையே 5 நாட்கள், 8 நாட்கள், 9 நாட்கள் என்றும் தண்ணீர் விடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதிய ஆயக்கட்டு பரப்புக்கு நனைப்புக்காக மட்டும் தண்ணீர் விடப்படுகிறது. பழைய ஆயக்கட்டுகளுக்கு வாணியாறு அணையிலிருந்து, வாணியாற்றின் மூலம் ஆலப்புரம் ஏரிக்கு மாதக்கணக்கில் தண்ணீர் விடப்படுவதால் தண்ணீர் வீண்விரயமாவதுடன், பலபேர் தண்ணீரைத் திருடுகிற வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், புதிய ஆயக்கட்டுகளுக்கு இடதுபுற கால்வாய் வழியாக தண்ணீர் விட வேண்டுமென்று விதி இருந்தாலும் கூட, அவர்கள் இடதுபுற கால்வாய் வழியாக தண்ணீர் விடுவதில்லை. அதனால் பல பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. நம்முடைய தலைமைப் பொறியாளரைச் சந்தித்து இடதுபுற கால்வாயின் வழியாக தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டோம். அவர்களும் ஆணை இடுவதாகச் சொல்லி 6,7 மாதங்கள் ஆகியும் தண்ணீர் வரவில்லை. எனவே, முறையாக விட வேண்டிய கால்வாய் வழியாக தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அந்த கால்வாயில் தண்ணீர் விடுவது என்பது இரண்டாவது பிரச்சினை. முதலில் தண்ணீர் அணையில் இருக்கிறதா என்பது பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். குறைந்த பட்சம் 235 மில்லியன் கன அடி தண்ணீர் அணையில் இருந்தால் தான் செப்டம்பர் 1—ம் தேதி தண்ணீர் விடுவதற்கு அணை திறக்கப்படும். ஆனால் சென்ற ஆண்டு 1989—ஆம் ஆண்டு செப்டம்பர் 1—ம் தேதி 115 மில்லியன் கன அடி தண்ணீர்தான்

இருந்திருக்கிறது. இருக்கிற தண்ணீரை வைத்து புதிய ஆயக்கட்டு, பழைய ஆயக்கட்டு பரப்புக்கு தண்ணீர் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இடதுபுற கால்வாயில் தண்ணீர் விட வேண்டுமென்று அவர்கள் தெரிவித்து இருப்பதும், ஒரு ஏரிக்கு அதிகமாக தண்ணீரை விடுகிறார்கள் என்று கூறியதும், அதிகாரிகளோடு கலந்து பேசி, அவைகள் சட்டத்திற்கு புறம்பானவைகளாக இருந்தால், உடனடியாக அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை.)

திரு. வ. முல்லைவேந்தன்: துணைத்தலைவர் அவர்களே, அணை கட்டப்பட்டு 7,8 ஆண்டுகளாகியும் கூட அதை ரெகுலராக ஒப்புடைக்காத காரணத்தால், அதிகாரிகள் தொடர்ந்து இருந்த பழக்கத்தின் காரணமாக முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்கள். தண்ணீரைக் கூட விலைக்கு விற்று விடுகிற நிலையில், இரவு நேரத்தில் தண்ணீர் திறந்து விடுவதாகச் சொல்லி, அவர்களுக்கு வேண்டியவர்களுக்குப் போகிற கால்வாயாக இருந்தால் மதகை அதிகமாக திறந்து தண்ணீர் விடுவதும், அவர்களுக்கு பணம் தராத பகுதியாக இருந்தால், குறைவாக தண்ணீர் விடுவதும் போன்ற நிலைமைகள் இருப்பதோடு, அந்தப் பகுதியில் அணை கட்டப்பட்டு எட்டு ஆண்டுகளாகியும், இன்னும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் 130 ஏக்கர் பரப்பு உள்ள இடத்திற்கு கால்வாய் வெட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்த அணைப் பகுதியை முழுமையாக முடிக்கவேண்டும். வாணியாறு அணையிலிருந்து போகிற கால்வாயில் பீலியாற்று அணைக்கு கால்வாய் வெட்ட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பல ஆண்டுகளாக அரசின் ஆய்வில் இருக்கிறது. அந்த கால்வாயை வெட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

10-35 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத்தலைவர் அவர்களே, அதிகாரிகள் மீது இவ்வளவு கடுமையான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுமத்தியிருக்கிறார்கள். இவ்வளவு கடுமையான குற்றச்சாட்டைச் செய்த அதிகாரிகளைப் பற்றி, இதற்கு முன்னால் என்னிடத்திலே சொல்லியிருக்கலாம், எழுதிக் கொடுத்திருக்கலாம். இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுக்கட்டும், 24 மணி நேரத்திலே இந்த அரசு அதுகுறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது, குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால். கால்வாய்களை வெட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். அதையும் இவர்கள் எழுதிக் கொடுத்தால், அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.



6 தனியார் அலுவல்

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990—அறிமுகம் செய்தல்.

*திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

*திரு. உ. ரா. வரதராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் முன்மொழிந்ததை நான் வழிமொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. கோ. வீரையன்: இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 27/1990)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

அதற்கு முன்னால் சில கருத்துக்களை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். 1974வது ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974, எட்டாவது பிரிவிற்கான வரைமுறையின்படி, இயக் கூர்திகள் சட்டத்தின் கீழ் தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்கப் பட்டு இருப்பதும், காலாண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் திங்களில் ஊர்தி புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதுமான போக்கு வரத்து ஊர்தி ஒன்றைப் பொறுத்தளவில், அந்த ஊர்தியைப் பொறுத்து, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 13/1974-ன்படி, வரவேண்டியுள்ள வரித் தொகையைக் கூட அந்தக் காலாண்டின் தொடக்கத்திலேயே செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. ஒருசில நேர்வுகளில் அந்த ஊர்தியை, காலாண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் திங்களில்தான் கையகப்படுத்தலாம். அந்த நேர்வுகளில் காலாண்டின் முதல் திங்களில் அது பதிவு செய்யப் பட முடியாது. எனவே அந்த ஊர்தி பதிவுசெய்யப்படும் தேதிக்கு முன்னரே, வரியை வசூலிப்பது என்பது இயலாததாக இருக்கக்கூடும். ஆகையினால், தற்காலிக அனுமதிச் சீட்டின் செல்லும் தன்மையை, துவங்குகின்ற தேதியில் மேற்சொன்ன சட்டத்தின் வரி செலுத்தப்படுவதற்கு வகை செய்வதற்கு வேண்டிய மேற்சொன்ன சட்டத்தின் எட்டாம் பிரிவினை திருத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின்படி மையச் சட்டம் 59/1988, இரண்டு வகை சரக்கு ஊர்திகள் அதாவது வாடகைக்காகவோ, வெகுமதிக்காகவோ பயன்படுத்தப்படும் சரக்கு ஊர்திகளும், வாடகைக்காகவோ, வெகுமதிக்காகவோ பயன்படுத்தாத சரக்கு ஊர்திகளும் ஒன்றாக சேர்க்கப்பட்டு, சரக்கு ஏற்றப்படும் எடையின் அடிப்படையில் அதை மாற்றி வகைப்படுத்தப்பட்டுள் ளன. மேற்சொன்னவாறு மாற்றி வகைப்படுத்தப்பட்டுள்ளதற்கு

---

*8-5-1990ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.



10-40 மணி

இணங்கியதாகவும் அமையும் வகையில் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 13/1974-ஐயும் தக்கவாறு திருத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநிலத்தின் வருவாயைப் பெருக்குகின்ற நோக்கத்தோடு சரக்கு ஏற்று வண்டிகள், பேருந்து கலங்கள், ஆம்னி பேருந்துகள், பயணப் பேருந்துகள், தனியார் போக்குவரத்து ஊர்திகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 13/1974-ன்படி செலுத்தப் படத் தக்க இயக்கூர்திகள் வரியை உயர்த்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மேற்சொன்ன சட்டத்தை தக்கவாறு திருத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு மேற்காணும்முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுத்து உள்ளது. எனவே இந்த மன்றம் சட்டமுன்வடிவை ஆய்வு செய்து எற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வாகன வரி விதிப்பு திருத்தச் சட்டமுன்வடிவு குறித்து பேசும்போது ஒரேயொரு திருத்தத்தை திரும்பப் பெறவேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டு, இதை வலியுறுத்தி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே இந்த திருத்தத்தில் 2-ஆம் பக்கத்தின் 'டி'---தற்போ துள்ள 2-ஆம் பத்திக்குப் பதிலாக பின்வரும் பத்தி அமைக்கப் படுகிறது என்றும் அதாவது 2 ஒப்பந்த வண்டிகளாக மட்டுமே ஓட்டப்படுவதற்கு ஓட்டுநர் நீங்கலாக பிற பிற 5 நபர்களுக்கு மேல் ஏற்றிச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ள ஊர்திகள் அந்த ஒப்பந்த வண்டிகள், சுற்றுலா ஊர்தியா என வகைப்படுத்தப்பட்ட தாயினும், இல்லையாயினும், ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ள ஓட்டுநர் நீங்கலாக பிற ஒவ்வொரு நபருக்கும் ரூ. 2,000 என்று இங்கே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி யானால் 55 இடங்களுக்கு மூன்று மாதத்திற்கு ரூ. 2,000 என்று சொன்னால், ரூ. 1,10,000 ஆகும். இப்படிப்பட்ட வண்டிகளை, வாகனங்களை அல்லது வேன் போன்ற, பஸ் போன்றவைகளை யார் உபயோகப்படுத்துகிறார்கள்? அநேகமாக பள்ளிச் சிறுவர் கள், கல்லூரி மாணவர்கள் இப்படிப்பட்டவர்கள் போவதற்கு இவைகள் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, திருவிழாக் காலங்களில் போவதற்கும் மக்கள் இதைப் பயன்படுத்துகின்றனர். அதுவும் அன்றி சில சமயங்களில் அரசியல் கட்சிகளுடைய மாநாடுகளுக்காகக் கூட இப்படிப்பட்ட வாகனங்களைப் பெறுகிறார்கள். இப்படி எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பெறுகிறார்கள். இப்படி எல்லா வற்றிற்கும் சகட்டுமேனியாக இப்படி ஒரு வரியைப் போடுவது

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 மே 10

என்பது இப்படிப்பட்ட மக்களைப் பெரிதும் பாதிக்கும். குறிப்பாக சிவகாசி மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலே இந்த மாணவர்களை பள்ளிக்கு அழைத்துச் செல்வதற்கு வேண்டிய இந்த வாகனங்கள் பூராவும் இப்படிப்பட்ட வரி விதிப்பிற்கு ஆளானால் இவை பூராவும் சுமக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களையும் அல்லது அரசியல் கட்சிகளுக்கும் போக வேண்டிய நிலைமை உண்டானால், இந்த வரி விதிப்பைப் பூராவும் அவர்கள் கொடுத்துத்தான் தீரவேண்டும். அவர்கள் மீது வந்த கட்டணத்தை எப்படி கட்டுவார்கள்? எனவேதான் இதை தயவு செய்து மறுபரிசீலனை செய்து இந்த வரியை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் யாருமே இப்படிப்பட்ட பஸ்களை எடுக்க மாட்டார்கள். அதனுடைய விளைவாக டூரிசம் டிபார்ட்மென்ட் கூட பாதிக்கப்படும். சுற்றுலா வாரியத்திற்குக் கூட எந்த விதமான பலனும் இருக்காது. அதுவும் கூட பாதிக்கப்படும் என்று இந்தச் சமயத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறையில் லாபமா நட்டமா என்பது அல்ல எங்களுடைய பிரச்சினை, மக்களுடைய வசதிதான் முக்கியம் என்று அவர்கள் கூறினார்கள். எனவே மக்களுக்கு வசதி தரத்தக்க முறையிலே இந்த வரியை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை ஆம்னி பஸ் நடத்துபவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. அவர்கள் அதையே தொழிலாகக் கொண்டு தொடர்ந்து அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆம்னி பஸ்களுக்கு போடக் கூடிய அந்த வரியை இதற்குப் போடாமல் இதனை திருப்பிப் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பயன்படுத்தப்படுவதே யாதென்று நான் ஏற்கெனவே முன்னமே சொல்லியிருக்கின்றேன். இந்த வரியை ரூ. 2 ஆயிரம் ஒரு சீட்டுக்கு என்று போட்டிருப்பதை தயவுசெய்து நீக்கி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்.

10–45 மணி

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகனச் சட்டத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்து முன் வைக்கின்றேன். இங்கே இன்றைக்கு உயர்த்தப்பட்ட வாகன வரி, சாதாரண சாமானிய மக்களையும் பாதிக்கிறது. மோட்டார் வாகன ஓட்டுநர்களையும் பாதிக்கிறது, சிறிய வேன்களையெல்லாம் கிராமப்பகுதி மக்கள் விவசாய பெருமக்கள் இன்றைக்கு பயன்படுத்திக் கொண்டிருக் கிறார்கள், காரணம் கிராமங்களில் பெரிய பெரிய வழித்தடங் கள் கிடையாது. கிராமங்களில் தார் சாலை கிடையாது. ஆகவே, விவசாய பெருமக்கள் தங்களுடைய விலைப் பொருள்களை எடுத்துக்கொண்டு கூட சில நேரங்களில்



1990 மே 10] [திரு. பி.எச். பாண்டியன்]

நகரத்திற்கு வேன்களில் கொண்டுதான் அங்கே விற்பனையில் ஈடுபடுகிறார்கள். 10, 20 சாதாரண மக்கள் ஒரு இடத்தில் சேர்ந்து பிறகுதான் அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமத்திற்குக் கொண்டு போய் வேன் 'டிரைவர்' விடுகிறார். அந்த வேன் 'டிரைவர்' தனனுடைய வாழ்க்கையில் சாதாரண ஒரு சிறிய 'டிரைவராக', சில நேரங்களில் ரிக்ஷா டிரைவர்களாக ஆட்டோ ரிக்ஷா 'டிரைவராக' கொஞ்சம பணத்தை சம்பாதித்த பிறகு வேனையும் வாங்கி தானும் வளர வேண்டுமென்ற எண்ணத்தோடு பொது மக்களுக்கும் இது பயன்படக்கூடிய அளவிற்கு இன்றைக்கு செய்யக்கூடிய அந்த மோட்டார் தொழிலுக்கு, இந்தச் சட்டம் இன்றைக்கு வளர்ச்சியைதடுக்கக்கூடிய ஒரு சட்டமாக, இன்றைக்கு இங்கே கொண்டு வந்திருக்கின்றீர்கள். எதற்கெடுத்தாலும் பாதிக்கக் கூடிய மக்கள் கிராம மக்கள்தான். எந்த வரியைப் போட்டாலும் கட்டக் கூடிய மக்களும் கிராம மக்கள்தான். எந்த வரியைப் போட்டாலும் கட்டக்கூடிய முதலாளியும் கிராம முதலாளிதான். வேன் 'டிரைவர்' அரசாங்கம் போடக் கூடிய இந்த கட்டணத்தை கட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்டத்தை இங்கு கொண்டு வந்திருக்கின்றீர்கள். நாமெல்லாம் கிராம மக்களைச் சந்தித்து உங்களையெல்லாம் வளர்ப்போம், உங்களையெல்லாம் உயர்த்துவோம், வருங்கால சந்ததியை வாழ வைப்போம், நீங்கள் எல்லாம் தொழில் அதிபர்களாக ஆக வேண்டாமா, நீங்கள் பொருளாதாரத்தில் உயர வேண்டாமா என்றெல்லாம் எல்லா கட்சிகளும் காலை 7 மணியிலிருந்து இரவு 10 மணி வரை ஆண்டு முழுவதும் பொதுக் கூட்டம் போட்டு பேசிவிட்ட பிறகு, இங்கே நீங்கள் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது உண்மையிலேயே பொது மக்களையெல்லாம் பாதிக்கக்கூடிய சட்டமும், கிராம மக்களுடைய வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய சட்டமும், கிராம மக்களுக்கு போக்கு வரத்தைத் தடுக்கக்கூடிய சட்டமுமாகும். ஆகவே நான இங்கே கேட்டுக்கொள்வதெல்லாம் வசதி படைத்தவர்களுடைய தலையிலே வரியை சுமத்துங்கள். ஏழை எளிய மக்கள் மீது வரியை சுமத்தாதீர்கள். அவர்களுக்கு வரியே போடக் கூடாது, காரணம் ஏழை மக்கள் வாக்கும் அளித்து வரியையும் கட்டி, ஆட்சியையும் அமர்த்தி கடைசியிலே அவர்கள் இப்படி மோட்டார் வாகன சட்டத்தினால் மிதிபட வேண்டுமா, என்பதுதான், நசுக்கப்பட வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். எந்தக் கட்சியாக இருந்தாலும் சொல்வது இதுதான். நாங்கள் ஏழைகள் அரசாக இருப்போம், ஆனால் ஏழைகளுக்கு வரிவிதிப்போம் என்பதை தேர்தல் நேரத்திலே சொல்வது கிடையாது. சொன்னால் ஒரு வாக்குக்கூட கிடைக்காது. ஆனால் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்த பிறகுதான் ஏழைகள் கோட்டைக்குள் நுழைய முடிவதில்லை. ஏழைகள் வாக்குச் சாவடியோடு நின்று விடுகிறார்கள். இங்கே கோட்டை யில் வந்து ஆட்சியில் இருக்கக் கூடியவர்கள் சந்திக்கக் கூடியவர் கள் மீது இந்த வரியை போட முடியுமா? அவர்களுக்கு ஒரு

'லாபி' உண்டு. அந்த 'லாபியில்' அவர்கள் உங்களோடு தொடர்பு கொள்வார்கள், யாராக இருந்தாலும். ஆகவே, வசதி படைத்தவர்களுக்கு கோட்டையிலே கூட அவர்களுடைய செல்வாக்கு, வரியை அவர்கள் மீது விதிக்கப்படாமல் இருப் பதற்கு ஒரு காரணமாக இன்றைக்கு அமைந்து விடுகிறது. ஆகவே, நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்வேன். 'வேனுக்கு' தலைக்கு 50 ரூபாய் என்பதை வசூலிக்காதீர்கள். தமிழகத்தில் இன்றைக்கு ஒரு புதிய வகையில் 'ஆப்பரேட்டர்கள்' 'டிரைவர்கள்' என்ற பெயரில் இன்றைக்கு 'ஆப்பரேட்டர்களாக' உருவாகியிருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் உயரட்டும்; வாழட்டும்; அவர்களும் கொஞ்சம் பணத்தைச் சேர்க்கட்டும். ஏழைக்கு மட்டும் வரியைப்போட்டுப் அரசாங்கம் பிடுங்கிவிடுகிறது. ஆகவே அவர்களுடைய வளர்ச்சியும் தடைபடுகிறது. அவர்களுடைய பொருளாதார நிலையும் பாதிக்கப்படுகிறது. அவன் இன்றைக்கு முன்னேறாமல் நின்றுவிடுகிறான். விரக்தி அடைந்து விடுகிறான். காரணம் ஏழை மக்களுக்கு சட்டத்தினால் பாதுகாப்பு இல்லை என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே வரி விதிக்கும் போது கிராம மக்களை நோக்கி வரியை விதிக்காதீர்கள் வரியை விதிக்கும்போது கிராமத்தில் இருக்கக்கூடிய புதியதாகத் தொழிலைத் துவக்கக்கூடியவர்கள் மீது வரியை விதிக்காதீர்கள்.

10-50 மணி

அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி, பொருளாதார சுதந்திரத்தை பறிக்காதீர்கள். சமுதாய நீதி, அரசியல் நீதி, பொருளாதார நீதி என்று அரசியல் சட்ட முகவுரையில் தெளிவுரையாக்கப்பட்ட அந்த மூன்று நீதிகள் கிராம மக்களுக்கு இன்னும் போய்ச் சேரவில்லை. இன்றைக்கு அரசியல் நீதியைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்குத்தான் குடி யிருப்புச் சட்டத்தை இங்கே நிறைவேற்ற இருக்கிறோம். 1973 ஆவது ஆண்டு காலாவதியாகி மீண்டும் ஒருமுறை 1975 ஆவது ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிறகு இன்றைக்குத்தான் ஏழை மக்களுக்காக பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை கொண்டு வரும்போது அந்த மக்களின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய வேன் டிரைவர்களுக்கு, கார் ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் சொன்னதைப் போல 2,000 ரூபாயை வசூலித்தால் யாருடைய தலையிலே போய் விழும்? எங்கேயும் கிராம மக்கள், பாமர மக்கள் அன்றாடம் சம் பாதிக்கக்கூடியவர்களுடைய மணிப் பையில்தான் அவர்களுடைய அரசாங்கத்தின் பார்வை விழுகிறது என்ற ஒரு எண்ணம் இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. எந்த ஆட்சியாக இருந் தாலும் இன்றைக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையில் ஏழை எளிய மக்கள் இன்றைக்கு இக்கட்டான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் அமைச்சரைக்



கேட்டுகொள்வேன். இப்போது 50 ரூபாயை உயர்த்தி இருக்கிறீர்களே இது யாருடைய தலையிலே போய் விழப்போகிறது? நாளைக்கு ஒரு டிக்கெட்டுக்கு 5 ரூபாய் என்று கேட்கக்கூடிய அந்த வேன் டிரைவர் 7 ரூபாய் என்று கேட்டால் தான் அதைக் கட்ட முடியும். ஆகவே நாற்று பிடுங்குவதற்கு, நகரத்தில் சென்று படிப்பதற்கு, நகரத்தில் சென்று பொருள்களை வாங்கச் செல்லக்கூடிய ஏழை மக்கள் இன்றைக்கு 2 ரூபாய் அதிகமாகச் செலுத்தினால் இங்கே உங்களுக்கு 50 ரூபாய் செலுத்த முடியும். ஆகவே அந்தச் சட்டத்தை கைவிட வேண்டும். முழுமையாக வேண்டுமானால் ஓய்வுபெற்ற ஆம்னி பஸ்காரர்களுக்கு 100 பங்கு ஏற்றுங்கள் கவலை யில்லை. பெரிய பெரிய பணக்காரர்களுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் ஏற்றுங்கள். அதற்குத் தடை கிடையாது. இன்று காலை கூட ஒரு பத்திரிக்கையில் பார்த்தேன். ஒருவருக்கு 25 இலட்சம் ரூபாய் இன்றைக்கு லாட்டரி சீட்டில் விழுந்திருக்கிறது. அந்த 25 இலட்சத்திற்கு தமிழ்நாட்டிற்கு என்ன வரி கிடைக்கப் போகிறது? இல்லை. அதையெல்லாம் விட்டுவிட்டு ஏழை எளிய மக்களுக்கு இன்றைக்கு நாம் நன்மையைச் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, பாதுகாப்பாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை அவர்களுடைய பொருளாதாரத்தை நசுக்கக்கூடாது என்பதை நான் இங்கே அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தேர்தல் நாள் அன்று கடைசி நாளில் உங்களுடைய வாக்காளர்களை எல்லாம்—எந்தக் கட்சியாக இருந்தாலும் ஜெயிப்பவராக இருந்தாலும், தோற்பவராக இருந்தாலும் கடைசி நாளில் வாக்காளர்களை எல்லாம் வாக்குச் சாவடிக்கு அழைத்துச்சென்ற வேன் டிரைவர்களுக்கு இன்றைக்கு வரி விதிக்கப்படுகிறது. இதை ஒருவேளை நீங்கள் தண்டனையாகக் கருதிக்கூட இந்த வரியை விதித்து இருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். ஒன்றைத் தெரிவிக்கிறேன். சட்டத்தில் 50,000 ரூபாய்க்கு மேல் செலவழிக்கக்கூடாது என்று இருக்கிறது, யாராவது 50,000 ரூபாய்க்குள் செலவழித்து இந்த மன்றத்திற்குள் வந்திருக்க முடியுமா? உண்மையைச் சொல்கிறேன். ஆகவே புரிந்துக்கொள்ள வேண்டும். உண்மை என்றைக்கும் கடையில் நிலைத்து இருக்கும். ஆனால் அப்படியே வெற்றி காண முடியாது. அப்படி எல்லோரையும் சட்டமன்ற உறுப்பினராக்கிய அந்த வர்க்கத்திற்கு இன்றைக்கு வரி விதிக்கப் படுகிறது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாண்டியன் அவர்கள், ஒருவேளை எதிர்த்து நின்றவர்கள் இந்த மன்றத்திற்குச் சென்றால் அதையும் உண்மையான செலவைச் சொல்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்களா?

திரு. பி. எச். பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்தில் வெற்றிபெற்று வந்தவுடனேயே சொன்னேன். 5 இலட்சம் ரூபாய்க்கு குறைந்து இங்கே யாராவது வெற்றி பெற்றிருக்கிறார்களா என்று அன்றைக்கும் சொன்னேன். எல்லா பத்திரிக்கைகளிலும் கொட்டை எழுத்துக் களில் போட்டிருந்தார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள் ?

திரு. பி. எச். பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, முதல் நாளில் இங்கே தெரிவித்திருக்கிறேன். வாங்கி படித்துக் கொள்ளுங்கள். இன்னொன்று, அனைத்து மோட்டார் வாகன ஓட்டுநர்கள் என்னை மதுரையில் சந்தித்து முறையிட்டார்கள். இப்படி அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

10–55 மணி

இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமேயானால் அடுத்த தேர்தலில் கடைசி நாள் அன்று எந்தக் கட்சிக்கும் வாகனங்களை வாடகைக்கு விட மாட்டோம் என்று அனைத்து மாவட்ட ஓட்டுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை வேட்பாளர்கள் நல்ல வேட்பாளர்கள் செலவு இல்லாமல் ஜெயிப்பதற்கு ஒரு வாய்ப்பு, ஆகவே, கள்ளத்தனமாக வாக்குகளை அள்ளுபவர்களுக்குதான் இதுபோன்ற வாகனங்கள் தேவை. தானாக மக்கள் போய் வாக்கு அளிக்கக்கூடிய நிலை உருவாகுவதற்கு இந்தச் சட்டம் ஒருவேளை வழி வகுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஓட்டுநர்களுக்கு பல சலுகைகள் செய்ய வேண்டியிருக்கிறது. சென்ற முறைபேசும்போது சொன்னேன் தகுதியை அவர்களுக்குக் குறைக்கவேண்டும் என்று.

மோட்டார் ஓட்டுநர்கள் இன்றைக்கு 10ஆம் வகுப்பு படித்திருக்கவேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். சென்ற முறையே சொன்னேன் அந்தச் சட்டத்தை திருத்துவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் திருத்தப்படவில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது எல்லாம் கிளினராக இருந்த ஏழை எளிய மக்கள்தான் டிக்கில் கடன் வாங்கி, இல்லாவிட்டால் பைனான்சியரிடம் கடன் வாங்கி இதுபோன்ற வாகனங்களை வாங்கி இன்றைக்கு ஓட்டுகிறார்கள். இந்த வாகனங்கள் ஓடுகின்ற காரணத்தால் தான் ஏழை எளிய மக்கள் வழித் தடம் இல்லாத மக்கள் இன்றைக்கு நகரத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

மற்றும் ஒன்று. இவ்வளவு வரியைமக்கள் செலுத்திய பிறகும் சாலைகள் இன்றைக்கு ஒழுங்காகவா இருக்கின்றன ? இன்றைக்கு போக்குவரத்துத் துறைக்கு நெடுஞ்சாலைத்





துறைக்கு இவ்வளவு ஒதுக்கீடு கிடையாது. மோட்டார் வாகனங்கள் இன்றைக்கு பழுதடைந்து விடுகின்றன. வரியையும் செலுத்திவிட்டு பழுதையும் பார்க்கவேண்டும். சாலைக்கு அதிகமாக நிதி ஒதுக்கவில்லை. குண்டும் குழியுமாக இன்றைக்கு சாலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் ஒருவருக்கு வரி விதிக்க வேண்டுமானால் அவருக்கு உரிமையை முதலில் கொடுங்கள். வசதியை செய்து கொடுங்கள். இந்த வரியை ஏனழகளிடம் வாங்கி அந்த ஏழை எளிய மக்களுக்கு செய்வதற்குக் கிடையாது. அதில் நிதி ஒதுக்கீடு கிடையாது. ஏழை எளிய மக்களுக்கு வழித்தடம் இல்லாத காரணத்தால்தான் இன்றைக்கு இந்த வேன்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அரசு செய்யாத இந்த நன்மையை ....

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவில் ஏற்கெனவே இருக்கின்ற வரிதான் வேன்களுக்கு இருக்கிறது. வரியை உயர்த்தவில்லை, அப்படி இருக்கும்போது வரி உயர்த்தி இருப்பதாகவே மாண்புமிகு உறுப்பினர் இங்கே கருத்து சொல்வது சரியானதுதானா ?

திரு. பி. எச். பாண்டியன்: தலைக்கு இவ்வளவு என்று போட்டு இருக்கிறது இல்லையா? 2000 ரூபாய் என்று சொன்னது. மற்றொன்று, வெளி மாநிலங்களிலிருந்து பாண்டிச்சேரியிலிருந்து வாகனங்களை வாங்கிக்கொண்டு வந்தால் இங்கே கட்டணம் செலுத்தவேண்டும், அதிகமாக வரி செலுத்தவேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இதனால் பாதிக்கப் படுபவர்களும் அவர்கள்தான். இரண்டாக பிரிப்போம். ஓனர், டிரைவர்,—ஓனருக்கு வரியை அதிகமாக விதியுங்கள், ஒரு டிரைவர் ஓனராக இருந்து வேன் ஓட்டினால் அவருக்கு இந்த வரியை விதிக்கக்கூடாது. அவன் தொழிலாக கொண்ட வனாக இருந்தால் டிரைவிங்கை தொழிலாக வைத்து இருந்தால்—

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைதலைவர் அவர்களே, அது விற்பனை வரி சட்டத்தின் கீழ் வருகின்ற ஒரு பிரச்சினை. ஏற்கனவே அதுபற்றி இங்கே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நட்முடைய மாநிலத்திலே வாகனங்களை விட்டுவிட்டு குறைவாக வரி இருக்கின்ற மாநிலத்திலே குறிப்பாக பாண்டிச்சேரியிலோ அல்லது மற்ற மாநிலங்களிலோ போய் வாங்கி இங்கே கொண்டு வந்து ஓட்டுவதைத் தடுக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் அங்கே வாங்கினாலும் வித்தியாசமாக இருக்கக்கூடிய வரியை இங்கே செலுத்தவேண்டும் என்று ஏற்கனவே திருத்தம் செய்யப் பட்டிருக்கிறதே தவிர அது ஏதோ ஏழைகள் தலையில் இந்த வரி எல்லாம் செலுத்தவேண்டும் என்பது அல்ல. இங்கே விற்பனை ஆகக்கூடிய வாகனங்களை வாங்காமல் பக்கத்து மாநிலங்களில்

ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரேகூட
காலப்போக்கில் கோயில்களில் மாற்றுப் பேருந்துகள் நூற்றுக்
கணக்கிலே நிற்கின்ற நிலையெல்லாம் மாறி இதனால் அங்கே
வெற்றிடம் ஏற்படக்கூடிய நிலையெல்லாம் ஏற்பட்டு அவரேகூட
முறையிடுகின்ற ஒரு காலம் வரும் என்று நான் நேற்றுகூட கூறி
யிருக்கிறேன். அதேபோன்றுதான் மீண்டும் நான் நினைவுபடுத்து
கிறேன். மாற்றுப் பேருந்துகள் என்பது இன்று ஆம்னி பஸ்களைப்
போல அல்ல. ஆம்னி பஸ்கள் ஒரு பாயிண்டிலேயிருந்து மற்றொரு
பாயிண்டுக்கு செல்கின்றன. ஆனால் ஏழையெளிய மக்கள்,
ஒரு திருமணம் நடக்கவேண்டுமென்றால், ஒரு காதணி
விழா நடக்க வேண்டுமென்றால்கூட அவர்கள் விரும்பு
கின்ற ஒரு இடத்திருந்து, ஒரு குக்கிராமத்திலிருந்து மற்றொரு
குக்கிராமத்திற்கு செல்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினா
லும், பல்வேறு கோயில்களுக்கு, பல்வேறு விழாக்களுக்கு
செல்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலும் மாற்றுப்
பேருந்துகளுக்கு வரி விதிப்பு என்பது இன்றைய தினம் ஏழை
யெளிய மக்களைப் பாதிக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்
தினால் மாற்றுப் பேருந்துகளுக்கு விதிக்கப்படுகின்ற வரியை
மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கோரி விடைபெறுகின்
றேன். நன்றி, வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு துணைச் சபா
நாயகர் அவர்களே, இந்த மோட்டார் வரி (திருத்தச்) சட்டத்தி
லே இருக்கிற சில விதிகளினாலே மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
எல்லா மக்களையும் ஏழைகள் பாழைகள் என்றுதான் சொல்
கிறோம். அதிலே ஒன்றும் வித்தியாசம் இல்லை. சட்டசபையிலே
இருக்கிற 234 பேர்களிலே 34 பேர்தான் கொஞ்சம் வசதி உள்ள
வர்கள், கார் வைத்திருப்பதிலே. பாக்கி 200 பேர்களும் நடை
பேர்வழிகள்தான். பஸ் எங்கே இருக்கிறது, இரயில் எங்கே
இருக்கிறது என்று பார்க்கிற பேர்வழிகள்தான் இன்றைக்கு
இருக்கிறார்கள்.

11-05 மணி

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய திரு. தீட்சிதர் அவர்கள்
கார் வைத்திருக்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் நடையிலேயே வேகமாக
நடக்கிறேன். பந்தயம் வைத்தால் கூட கட்டுகிறேன். கார்
என்னிடத்திலே இல்லை. ஒரு காலத்திலே கார் இருந்தது.
இப்போது இல்லை. எலக்ஷனிலே நின்று.நின்று எல்லாம் கரைந்து
போய்விட்டது. அந்தக் காலம் வேறு. முனிசிபாலிட்டி எலக்ஷனி
லே 4 தடவைகள் சேர்மனுக்காக நின்று இருக்கிறேன். ஆகவே
செலவு ஆகிவிட்டது.



அடுத்து இன்றைக்கு ஹாஸ்டலைப் பார்த்தால் 20 ப்ளஷர்
கார்கள்தான் இருக்கின்றன. பாக்கி எல்லோரும் பெட்டியைத்
தூக்கிக் கொண்டு, ஆட்டோ வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக்
கொண்டு தான் இருக்கிறார்கள். காலையில் ஸ்நானம் பண்ணி
விட்டு இரண்டு இட்டிலியைத் தின்றுவிட்டு இங்கே ஓடி வருகிறார்
கள். இந்த மாதிரி வறுமையை நோக்கி இருக்கிற ஜனங்கள்தான்
இருக்கிறார்கள். ஏரோ டிராமைப் பார்த்தால், ஏரோ ப்ளேனைப்
பார்த்தால், சூபர் ஃபாஸ்ட் வண்டிகளைப் பார்த்தால் இவ்வளவு
வேகமாகப் போகிறதே என்றுதான் பார்த்துக்கொண்டிருக்கிற
ஜனங்கள் தான் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழை
ஜனங்கள் இருக்கக்கூடிய நாட்டில் அவர்கள் எப்படியாவது, ஊர்
ஊராகப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்கு
ஆங்காங்கே டூரிஸ்ட் ஏஜென்ட் இருக்கிறார்கள். நீ பத்து ரூபாய்
கொடு, நீ 20 ரூபாய் கொடு என்று சொல்லி எல்லோரும் சேர்ந்து
லாபம் இல்லாவிட்டாலும் போகிறது, நீ ஊரைச் சுற்றிப் பார்க்க
வேண்டும் என்று சொல்லி கூட்டிக்கொண்டு போகிறார்கள். ஒரு
டூரிஸ்ட் வேன் அல்லது பஸ் வைத்துக்கொண்டு கோயில் போன்ற
இடங்களுக்குப் போகிறார்கள். அப்படி ஒரு கோயிலுக்கு ஒரு பஸ்
வருகிறது என்றால் அங்கே இருக்கிற முனிசிபாலிட்டி 10 ரூபாய்,
20 ரூபாய் என்று வாங்கிவிடுகிறார்கள். ஒன்றுக்கு மூன்று
மடங்கு வாங்கிவிடுகிறார்கள். அடுத்து வண்டியை அங்கே
நிறுத்துவதற்கு அவன் வாங்கிவிடுகிறான். நிறுத்துவதற்கு
வசதி இருக்கிறதோ இல்லையோ, அதற்கான வரியை அவன்
வாங்கிவிடுகிறான். அப்புறம் கோயிலுக்கு உள்ளே போனால் எங்க
ளைப் போன்ற ஆட்களைப் பார்த்துவிட்டால் அந்தக் காரியம்,
இந்தக்காரியம என்று சொல்லி அத்தனைக்கும் வாங்கிவிடுகிறார்
கள். யூரின் போக வேண்டும் என்றால் கூட 8 அணா கொடு, ஒரு
ரூபாய் கொடு என்று கேட்டு வாங்கிவிடுகிறார்கள். அப்புறம்
கோயிலுக்கு உள்ளே போனால், அதைப் பண்ணுகிறேன், இதைப்
பண்ணுகிறேன் என்று சொல்லி பணத்தை வாங்கிவிடுகிறார்கள்.
இப்படி எல்லாம் செலவழித்து விட்டு சந்தோஷமாகப் போகிறார்
கள். அதாவது சமயபுரம் கோவிலுக்குப் போய் தரிசனம் பண்ணி
னோமே, ஸ்ரீரங்கத்திற்குப் போய் தரிசனம் பண்ணினோமே,
திருச்செந்தூர் போய் தரிசனம் பண்ணினோமே என்று திருப்தி
யோடு போகிறான். இந்த மாதிரிதான் டூரிஸ்ட் இருந்துகொண்
டிருக்கிறது. இப்படி பக்தர்கள் இன்றைக்கு சுற்றுகிற அளவுக்குக்
கணக்கு இல்லை. இப்படி எல்லா மதத்திலும் தான் செல்கிறார்
கள், வேளாங்கண்ணிக்கு போகிறவர்கள் ஜாஸ்தி. இந்தமாதிரி
வேன்களிலும், பேருந்துகளிலும் ஜாஸ்தியாகப் போகிறார்கள்
அங்கே. இதேமாதிரி முஸ்லிம்களும் நிறைய போய்க்
கொண்டிருக்கிறார்கள். அப்படி போகிறவர்கள் எல்லாம் இனிமேல்
என்ன பண்ண முடியும்? இதுவரையில் 500 ரூபாய் இவ்வாறு
செலவழித்தவர்கள். இனிமேல் 2500 ரூபாய் கொடுக்க
வேண்டும் 3,000 ரூபாய் கொடுத்தாலும் அவர்கள் போகத்தான்
போகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தரிசனம் பண்ணியாக
வேண்டும். அப்படி என்றால் நாம் யாருக்கு வரி

போய் வாங்கினால் அது கிட்டத்தட்ட வரி ஏய்ப்புக்குச் சமம் என்ற காரணத்தால்தான் அந்தச் சட்டத் திருத்தம் ஏற்கனவே இந்த சபையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : யார் டெல்லி சென்றாலும் திரும்பி வந்தால் வரும்போது மின்சார சாதனங்களை, பொருட்களை வாங்கி வருவது வழக்கம். சட்டமன்ற உறுப்பினர்கள் கூட வாங்கிக் கொண்டு வருவது வழக்கம். காரணம் அங்கே வரி குறைவு. 4 சதவிதம் தான். ஒண்டா ஜெனரேட்டருக்கு அங்கே என்ன வரி? எமகாவுக்கு அங்கே என்ன வரி? மீண்டும் நாம் அந்த வரியை விதிக்கிறோமா? இதே கடையில்தான் விற்கிறார்கள். ஆகவே, அங்கே இருந்து வாங்கிக் கொண்டு வரும்போது நேரடியாக வீட்டுக்குக் கொண்டு போய் விடுகிறோம். ஆகவே சிக்குகிறவர்கள் இன்றைக்கு ஏழைகளாக டிரைவர்களாக இருப்பதால், அவன் உழைத்துதான் ஒரு ஆப்பரேட்டராக வரவேண்டும் என்ற ஆசை. முதலில் ஒரு வேன் வைப்பான், கொஞ்சம் வளர்வான், பிறகு அவனுக்கு கூட ஒரு பஸ் ஆப்பரேட்டராக வரவேண்டும் என்ற ஆசை. ஏன் அவனுடைய ஆசைக்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்கவேண்டும், என்ற வேண்டுகோள்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேனே ஒழிய இதில் எல்லோர்க்கும் பங்கு உண்டு.

11–00 மணி

உங்களை மட்டும் சொல்லவில்லை. 1947–லே இருந்து இருந்தவர்களுக்கும் பங்குண்டு. வரியை நாம் கிராமங்களை நோக்கித் தான் விதித்துக்கொண்டு இருக்கிறோம். நன்மைகளை நகரங்களை நோக்கி மட்டுந்தான் செய்துகொண்டு இருக்கிறோம். கிராம மக்களை தேர்தல் நேரத்திலே மட்டுந்தான் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். தேர்தலுக்குப் பிறகு அவர்களால் கோட்டைக்குள்ளே நுழைய முடியவில்லை, நாம்தான் இங்கே இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, நாம் கிராம மக்களை மறந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதை வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமம். நகரம் இரண்டுக்கும் பொறுப்பிலே இருக்கிற இந்தத் துறை, கிராமத்திற்கு ஒதுக்கி இருப்பதைவிட நகரத்திற்கு ஒதுக்கி இருப்பதும். அதற்காக மானியங்கள் தருவதும் நகரத்தை விட கிராமப் புறங்களுக்கு அதிகம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஒதுக்கீடு அதிகம் இருந்தாலும் கிராமங்கள் எங்கே முன்னேறி இருக்கின்றன. அங்கேயா பெரிய பாலங்கள் கட்டப்படுகின்றன? அங்கேயா பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது? அங்கேயா பெரிய அலுவலகங்கள் இருக்கின்றன? இன்னும் தலையில்





எண்ணெய் இல்லாமல் கிழிந்த சட்டையைப் போட்டுக்கொண்டு இருக்கக்கூடிய கிராம மக்கள்தான் அங்கே அதிகமாக வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். கிராம மக்களுக்கு நன்மைகள் இன்னும் போய்ச் சேரவில்லை வேண்டுமானால் துறைக்குப்போய் சேர்ந்து இருக்கலாம். காண்டிராக்டர்களுக்குப் போய்ச் சேரலாம். பி.டபுள்யூ.டி. காண்டிராக்டர் வீட்டைப் பாருங்கள்; எல்லா ஊர்களிலும் பெரியதாக இருக்கும். அவர்களுடைய வளத்தை வைத்து அவர் அவர்களுடைய பொருளைப் பார்த்துவிடலாம். கிராமத்திற்குப் போய்ச் சேரவில்லை. கிராமங்களிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் வேண்டுமானால் முன்னேறி இருக்கலாம், ஒவ்வொரு அரசாங்கத்தின் திட்டத்தின் மூலமாக அரசாங்கம் பாலம் கட்டுகிறது. அந்த ஊரில் வேண்டுமானால் பஸ்ஸில் ஏறி அந்தப் பாலத்தைத் தாண்டி செல்வார்கள், ஆனால் கிடைக்கக்கூடிய லாபம் நகரத்திலே வசிக்கக்கூடிய பெரிய காண்டிராக்டர்களுக்குத்தான் போய் சேர்ந்துகொண்டிருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை திருத்தி அமைக்குமாறு கேட்டு, அமைகிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி (திருத்த) சட்டத்தின் மீது சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். கடந்த நாளன்று, போக்குவரத்து மானியத்தின் மீது பேசுகின்ற நேரத்தில்கூட இதைத்தான் நான்வலியுறுத்திக் கூறினேன். இன்றைய தினம் இங்கே மோட்டார் வாகன வரி (திருத்த) சட்டத்தின் மீது போடுகின்ற வரிகள் ஏழையெளிய மக்களைத்தான் இறுதிக்கட்டமாக பாதிக்கின்ற காரணத்தால் இதில் திருத்தம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எந்த வரி போட்டாலும் அந்த வரி கடைசியாக ஏழையெளிய மக்களையே பாதிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அதையும் அரசு மனதில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஸ்பேர் பஸ் என்று சொல்லப்படுகின்ற மாற்றுப் பேருந்துகள் என்று ஒருசில பஸ்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றுக்கும் இன்றையதினம் வரி விதிப்பு ஏற்படுகின்ற காரணத்தினால் இன்று பல்லாயிரக்கணக்கான, பல லட்சக்கணக்கான பக்தர்கள் கோயில்களுக்குக்கூட செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாட்டிலே திருச்செந்தூர் கோயில் இருக்கிறது. பழனியிலே, திருத்தணியிலே கோயில்கள் இருக்கின்றன. இன்னும் பல்வேறு ஆலயங்கள் இருக்கின்றன. பக்தர்கள் தமிழ்நாட்டிலேயிருந்து திருப்பதிக்குச் செல்கிறார்கள். கேரளாவிலே உள்ள ஐயப்பசாமி கோயிலுக்குச் செல்கிறார்கள். அத்தனை பேரும் ஸ்பேர் பஸ் என்று சொல்லப்படுகின்ற இந்த மாற்றுப் பேருந்துகள் மூலம்தான் செல்கின்ற நிலை இருக்கிறது. இந்த மாற்றுப் பேருந்துகளுக்கு வரி விதிக்கப்பட்டதினால் லட்சக்கணக்கான பக்தர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலை இன்றையதினம்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மே 10

போடுகிறோம்? இப்படிப்பட்ட ஏழைகளுக்குத்தான் வரி போடு
கிறோம். அதற்காக அவன் கல்யாணம், காட்சிக்குப் போகாமல்
இருக்க முடியுமா? எனவே வரி போடுவது என்பது மித மிஞ்சி
இருக்கக்கூடாது. வரி போடாமல் இருக்க முடியாது. நம்முடைய
செலவுகளுக்காக வரி போடாமல் இருக்க முடியாது. அதற்காக
அது மித மிஞ்சிய வரியாக இருக்கக்கூடாது. சாப்பிட வேண்டியது
தான். அதற்காக வாயால் எடுக்கும் அளவுக்கு, வெளியே வரக்
கூடிய அளவுக்குச் சாப்பிட முடியுமா? எனவே மித மிஞ்சிய வரி
போடுவதால் பக்தர்கள் எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள்.
அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் கூட அவர்களுக்குப்
பெரிய பாதிப்பு இல்லை. ஏதோ வருஷத்தில் ஒரு நாள் அல்லது
இரண்டு நாள் என்று கூட்டங்களை, மாநாடுகளை நடத்தலாம்.
அதற்காக அவர்கள் போகிறார்கள் எனவே இந்தமாதிரி வரிபோடுவ
தால் யாருக்குஅதிப்படியான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்றால்
ஏழை ஜனங்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். எனவே தயவு
கூர்ந்து நம்முடைய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை
நான் கேட்டுக்கொள்கிறேன், இந்த வரி வேண்டாம். ஆம்னி
பஸ்ஸுக்கு போட்டிருக்கிறீகள். அதுவே ஜாஸ்தி, 3 இலட்சத்து 20
ஆயிரம் ரூபாய் கொடுத்து அவர்களால் பஸ் வாங்க முடியுமா?
எல்லாம் கடன் வாங்கித்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்,
இந்த பேங்கிலே கடன், அந்த பேங்கிலே கடன். தனியார் கடன்
என்று கடன் வாங்கித்தான் வாங்குகிறார்கள், பஸ்ஸுக்குப்
பின்னால் பார்த்தால் தெரிகிறது. அங்கே எழுதப்பட்டு இருக்
கிறது. ஓகோ இவன் இன்னாரிடத்திலே கடன் வாங்கியிருக்கிறான்.
3 இலட்சம் ரூபாய் என்று தெரிகிறது. இன்னும் சொல்லப்
போனால் விலை மலிவாக இருக்கிறது என்று சொல்லி பாண்டிச்
சேரியிலே போய் வாங்குகிறான். இந்த சொற்ப ரூபாய் வரி
கட்டுவதற்குப் பயந்து கொண்டு அங்கேபோய் வாங்கிக்கொண்டு
வருகிறான். எனவே அவன் மீது வரி போடுவது அவனுக்கும்
நல்லதல்ல. நமக்கும் நல்லது அல்ல. அதனால் ஏழைகளின்
தலைச்சுமைதான் ஜாஸ்தியாகும். இதைக் கூர்ந்து கவனித்து
வரியைக் குறைத்து நல்லபடியாக பக்தர்களை ஊக்குவிக்க
வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொண்டு விடை
பெறுகிறேன்.

*11-10 மணி*

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணை தலை
வர் அவர்களே, இந்த வரி விதிப்புத் திருத்தச் சட்டமுன்வடிவை
நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் உண்மையிலேயே
வருத்தப்படுகிறேன் —— அவர் அந்தத் துறையிலே இருக்கின்ற
காரணத்தால் அவர் கொண்டு வந்த காரணத்தால்—— கிராமத்
திலே பிறந்து கிராம மக்களுடைய வாக்குகளைப் பெற்றவர்
அவர். அதுவும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர்.
வருடந்தோறும் அவர் பார்ப்பாரேயானால் ஆயிரக்கணக்கான
பேர் இலட்சக்கணக்கானபேர் கிராமத்திலே இருந்து திருப்பதி



1990 மே 10] [திரு. வி. கே. சின்னசாமி]

கோவிலுக்குப் போகிறார்கள். பழனிக்குச் செல்கிறார்கள்.
ஐயப்பன் கோயிலுக்குச் செல்கிறார்கள். இப்படி எத்தனையோ
கோயில்களுக்கு எல்லாம் செல்கிறார்கள். ஆக கிராமத்திலே
பிறந்து, கிராமத்திலே உழைத்து அந்த கிராமத்திலேயே சாவது
என்ற அடிப்படையில் வாழ்ந்துகொண்டிருக்கிற அவன் வேறு
எதையும் கேட்கவில்லை. அவன் அமைச்சரிடத்திலே வந்து லாரி
பெர்மிட் அல்லது பஸ் பெர்மிட் என்று எதுவும் கேட்கவில்லை.
நாளெல்லாம் உழைப்பதற்காகவே பிறந்து இருக்கிறான். அப்படி
உழைக்கிற கிராம மக்கள் 100 பேர், 50 பேர் சேர்ந்துகொண்டு
வாரத்திற்கு அல்லது மாதத்திற்கு 10 ரூபாய், 20 ரூபாய் என்று
ஒருவரிடத்திலே கொடுப்பார்கள். அவர் அந்தப் பணத்தை ஒன்று
சேர்த்து பஸ் முதலாளிகளிடத்திலே கொடுத்து பஸ்ஸை எடுத்துக்
கொண்டு 100 பேர் என்று சேர்ந்துகொண்டு 5 நாள், 10நாள்
என்று டூர் செல்கிறார்கள் என்றால் சென்னையிலே வாழ்க்கை
யிலேயே வருடத்திற்கு 5-6 நாள் உழைக்காமல், தாங்கள் சேர்த்த
பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு கோயிலுக்குச் செல்
கிறார்கள். அவர்கள் இதுமாதிரி ஸ்பேர் பஸ்களைத்தான் நம்பி
செல்கிறார்கள். இந்த வரி அவர்களைப் பாதிக்கும். இந்துக்களின்
வழக்கம் என்னவென்றால், தங்கள் குழந்தைகளுக்கு ஆண்டு
முடிவில், அல்லது ஆண்டுக்கு ஒருமுறை கோயில்களில் சென்று
முடி இறக்கிக் கொண்டுவருவது வழக்கம். பெரியவர்களும் அப்படி
திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு, பழனி முருகன் கோயிலுக்கு
என்று சென்று, அங்கே மொட்டையடித்துக் கொள்வார்கள்.
அப்படிப்பட்ட மக்களை நம்பித்தான் இதுபோன்ற ஸ்பேர் பஸ்
களும் ஓடுகின்றன. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்ததுதான்.
தெரியாதது அல்ல, அப்படியும் ஏன் இதை மறந்துவிட்டு வரி
போட்டார்கள். என்று தெரியவில்லை. நீங்களே உங்களுடைய
தொகுதிக்குச் சென்று இப்படி வரி போட்டிருக்கிறோம், ஸ்பேர்
பஸ்களுக்கும் டூரிஸ்ட் பஸ்களுக்கும் வரி போட்டிருக்கிறோம்.
ஒத்துக்கொள்கிறீர்களா என்று கேளுங்கள், 10 சதவீதம் பேர்
கூட உங்களுக்கு வாக்கு அளிக்க மாட்டார்கள், அதை
உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். உங்களுக்கு மட்டு
மல்ல, எல்லோருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன். கிராமங்
களில் உள்ள மக்கள் வருடத்திற்கு ஒருமுறை, கோவில்களுக்குச்
சென்று முடி எடுத்துக்கொள்ளப் போவது வழக்கம். அவர்கள்
இதனால் பாதிக்கப்படுவார்கள். இப்போது அவர்கள் இந்த வரி
உயர்வால் ஆண்டுக்கு ஒரு முறை போகமுடியாது, 5 ஆண்டுக்கு
ஒருமுறைதான் போக முடியும். அந்த அளவுக்கு வரி போட்டிருக்
கிறீர்கள். இந்த வரிவிதிப்பு தேவையற்றது. மேலும் அந்தக்
கம்பெனிகள் ஸ்பேர் பஸ்கள் வைத்திருப்பதற்குக் காரணம்,
திடீரென்று நடைமுறையில் உள்ள பஸ்கள் வழியில் ரிப்பேர்
ஆகிவிட்டால், போன் செய்தால் உடனே ஸ்பேர் பஸ்ஸை அனுப்பி
அந்த பாசஞ்சர்களை ஏற்றிக் கொண்டு சென்று பாதுகாப்பாக
இறக்கிவிடுவார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் யோசனை
செய்யவேண்டும்.

[திரு. வி. கே. சின்னசாமி] [1990 மே 10

இன்னும் சொல்லப்போனால், பள்ளிக் குழைந்தைகள் கல்லூரியில் படிப்பவர்கள் எல்லாம் ஆண்டு சுற்றுலாவிற்கு இப்படிப்பட்ட பஸ்களை எடுப்பது வழக்கம். இதுபோன்ற நல்ல பஸ்களை வாரக்கணக்கில் எடுத்துக்கொண்டு சுற்றுலா செல்கிறார்கள். அதுவும் பாதிக்கப்படும். யாருடைய ஓட்டுக்களை வாங்கிக் கொண்டு வந்தோமோ அவர்கள் தலையில் போடுகிற வரிதான் இது. 2,000 ரூபாய் என்று போட்டு இருக்கிறீர்கள். எப்படி நியாயம்? உங்களுக்கு டஸ் முதலாளிகள் மீது என்னவோ கோபம். ஆனால் அவர்கள் மீது வரி போடுவதாக நினைத்துக் கொண்டு மக்கள் மீது வரி போட்டிருக்கிறீர்கள். என்ன நியாயமோ தெரியவில்லை. அதை மறுபரிசீலனை செய்யவேண்டும். பஸ்களை தேசியமயமாக்குவோம் என்று சொல்கிறீர்கள். அதை வேண்டுமானால் இந்த வருஷமே செய்து கொள்ளுங்கள். ஆனால் இப்படி வரி போடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் வைத்திருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பஸ்களில் குறைந்த கட்டணத்தில் சுற்றுலா போகின்ற கிராமப்புற மக்களுக்கு ஏற்பாடுகளை செய்து கொடுக்கவேண்டும், உழைக்கின்ற மக்கள் கொஞ்சம் ஓய்வாக இருக்க இனிமேல் சுற்றுலாவே செல்ல முடியாத நிலை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லாரிகளின் எடைக்கு ஏற்றவாறு வரி போட்டிருக்கிறீர்கள். கிராமப்புற விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஏற்றிச் செல்ல லாரிகளைத்தான் நம்பியிருக்கிறார்கள். அவ்வப்போது கிடைக்கிற, விளைகின்ற பொருட்களை சந்தைக்கு ஏற்றிச் செல்கிறார்கள். எவ்வளவு எடை இருக்கிறது என்று அப்போது எடை போட்டுப் பார்த்து எடுத்துச் செல்லமுடியாது. 20 மூட்டை 10 மூட்டை என்று வெண்டைக்காய் போன்ற காய்கறிகளை எடுத்துச் செல்வார்கள். ஒரு வண்டிக்கு 3 டன், 4 டன் என்று கெபாசிட்டி இருக்கிறது என்று சொன்னால், அந்த வண்டிக்கு அதிகமான வரி போட வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு வெண்டைக்காய் கிலோ 5 ரூபாய், 10 ரூபாய் விற்கிறது என்று பேப்பரில் செய்தி வந்திருக்கிறது என்றால் என்ன காரணம்? கிராமப்புறங்களில் விளையும் காங்கறிகளை எடுத்துச் செல்கின்ற லாரிகளின் வரியை இப்படி ஏற்றியிருப்பதால்தான் இப்படி காய் கறிகளின் விலை ஏறியிருக்கிறது. இதை மக்கள்தான் கட்ட வேண்டும். வங்கிகள் கிராமப்புற விவசாயிகளுக்கு ரூ. 3000, ரூ. 5000 என்று கடன் வழங்குகிறது. இப்படி சிறு தொழில் செய்ய வங்கிகளில் கடன் வாங்கும் சிறு விவசாயிகள், தாங்கள் பயிரிட்ட காய்கறிகளை இப்படி அதிக வரி கொடுத்து லாரியில் எடுத்துச் செல்வதானால் அவர்கள் வியாபாரமே தோல்வியாகி விடும். ரயில்கள் தேசியமயமாக்கப்படவில்லையா, அதுபோலத் தான் பஸ்களும் தேசிய மயமாக்கப்படுகிறது என்று நேற்று முதல்வர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அதைப்போல, லாரி போக்குவரத்துக் கழகம் என்று மாவட்டத்திற்கு ஒன்று என்று கூட நாம் உருவாக்கினால் அது உபயோகமாக இருக்கும் அங்கே வாடகைக்கு லாரிகளைப் பெற்றுக் கொண்டு........



1990 மே 10] [திரு. மு. கண்ணப்பன்]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு குட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து அது பத்தாண்டுக்காலம் ஏராளமான நஷ்டத்திற்கு ஆளாகி, அதைத் தொடர்ந்து நடத்தினால், மேலும் கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால், சென்ற ஆண்டுமுதல் அந்த சரக்குப் போக்குவரத்துக் கழகம் மூடப்பட்டுவிட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. கே. சின்னசாமி : பஸ் கூட நஷ்டத்தில்தான் ஓடுகிறது. அதற்காக மூடிவிட முடியுமா? திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் எல்லாம் நஷ்டத்தில் ஓடுவதாகச் சொல்கிறார்கள். பி.டி.சி. நஷ்டத்தில் ஓடுகிறது என்றால் ஏன் அதை ஓட்டுகிறோம்? மக்களுக்காக ஓட்டுகிறோம்.

11-15 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தையும், மற்ற போக்குவரத்துக் கழகங்களையும் மூடுவது என்பது வேறு பிரச்சினை. இது கடந்த 13 ஆண்டுக்காலமாக நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்ஸ்டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பல லட்சக் கணக்கான ரூபாய்க்கு நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டு, நடைமுறை சரியில்லாமல், வாகனங்கள் பழுதுப்பட்டு, இனிமேல் நடத்த முடியாது என்ற சூழ்நிலையில், அதோடு நிறுத்துவது என்று நிறுத்தி, அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகக்கூடாது என்று வேறு போக்குவரத்துக் கழகங்களில் அவர்களுக்கு வழிவகை செய்யப்பட்டது. உறுப்பினர் அவர்களுக்கு இது தெரிந்திருந்தும், மீண்டும் புதிய கருத்தைச் சொல்வது போன்று சொல்வது அவ்வளவு சரியாக இல்லை.

திரு, வி. கே. சின்னசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புதிய கருத்தல்ல. உங்களால் தொடங்கப்பட்டது, இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அதை ஆரம்பித்து உங்களுக்கு திறமை இருக்கிறது. அதை ஓட்ட முயற்சிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக பொது நிறுவனங்கள், தொழிற்சாலைகள்கூட இப்படிப்பட்ட பஸ்களை வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வருடத்திற்கு ஒரு முறை, 6 மாதத்திற்கு ஒரு முறை வெளியூர் சென்று உணவை சமைத்துச் சாப்பிட்டு, 5, 6 நாட்கள் கழித்து திரும்பும் நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட பொது நிறுனவங்கள், கல்விச் சாலைகளுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரி, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைத் திருத்தத்திலே கொண்டு வர வேண்டுமென்று கோரி, நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தின்கீழ், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோவிந்தராஜன், திரு. பாண்டியன், திரு. வல்லரசு திரு.வெங்கடேஸ்வர தீட்சிதர் திரு.வி கே. சின்னசாமி ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து பொதுவாக ஏழை மக்களை பாதிக்கக்கூடிய அளவுக்கு வரி உயர்வு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதே நேரத்திலே போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை, நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேசும் போது, அதிகப்படியான பேருந்துகளை கிராமங்களில் விட வேண்டுமென்று ஏராளமான கோரிக்கைகளை வைத்தார்கள். அதைப்போல நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் சாலை வசதிகள் சரியில்லை, புதிய சாலைகளைப் போட வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்தார்கள், அவைகளுக்கெல்லாம் எவ்வளவு செலவாகும் என்று உறுப்பினர்களுக்கு புள்ளிவிவரம் சொல்லத் தேவையில்லை. அவைகளை எல்லாம் இந்த ஆண்டாவது பழுது பார்க்க வேண்டுமென்ற அடிப்படையில், பொது மக்களுக்கு எந்தவகையிலும் பாதிக்காத வகையிலே இந்த வரி உயர்வைச் செய்திருக்கிறோம். பஸ் கட்டணத்தைப் பொறுத்த வரையில் ஸ்டேஜ் கேரேஜ் தடப் பேருந்துகளுக்கு காலாண்டு வரி ஏற்கெனவே 280 ரூபாயாக இருந்தது. மொத்த வரி இது. அதை 310 ரூபாயாகச் செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட 30 ரூபாய் ஒரு சீட்டுக்கு, காலாண்டுக்கு உயர்த்தியிருக்கிறோம். இப்படி உயர்த்துவதன் காரணமாக, பொது மக்களுக்கான பஸ் கட்டணத்தை உயர்த்த முடியுமா என்றால், அது கார்ப்பரேஷனாக இருந்தாலும் தனியார் போக்குவரத்தாக இருந்தாலும், பஸ் கட்டணத்தை உயர்த்த முடியாது. இது பொது மக்களைப் பாதிக்கக்கூடிய வரி உயர்வு அல்ல. அந்த பஸ் நிறுவனங்கள் அவர்களாகத்தான் செலுத்த வேண்டும். பொது மக்களிடமிருந்து இந்தக் கட்டணத்தை வசூலிக்க இந்தச் சட்டத்திலே நாம் வழிவகை செய்யவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேன்களுக்கு அதிகமாகக் கட்டண உயர்வு செய்திருக்கிறார்கள் என்ற தவறான கருத்தை இங்கே சொல்லி இருக்கிறார்கள். வேன்களை பொறுத்தவரையில் சென்ற ஆண்டு நாம் கட்டண உயர்வு செய்தோம், 1800 ரூபாய் என்று வரியை உயர்த்தினோம். ஆனால் அந்த வேன் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய பல்லாயிரக் கணக்கான ஓட்டுனர்கள், தொழிலாளர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களைச் சந்தித்து, தொழிலில் ஏற்படக்கூடிய இடையூறுகளை எடுத்துச் சொன்னதன் பேரில் அந்த 1800 ரூபாய் என்று உயர்த்திய வரி ஆயிரம் ரூபாயாக, அவர்களுடைய சம்மதத்தோடு குறைக்கப்பட்டது. வேனிலே பயணம் செய்யும் பயணிகள் 6 பேர்தான் போக முடியும் என்ற நிலை சென்ற ஆண்டுவரை இருந்தது. ஆனால் 13 பேர்வரை அந்த வேன்களிலே பயணம் செய்யலாம் என்ற சலுகை கொடுத்து,





சென்ற ஆண்டு வரியைக் குறைத்ததோடு, மேலும் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அவர்களுக்கு என்று எந்த விதமான வரியையும் நாம் கூடுதலாகப் போடவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்:

**11.20 மணி**

குறிப்பாக இன்னொன்று, ஸ்பேர் பஸ்களுக்கான வரியை உயர்வு செய்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 'ஆம்னி பஸ்' என்று சொல்லக்கூடிய கான்ட்ராக்ட் கேரேஜ்களுக்கு ஒரு சீட்டுக்கு 500 ரூபாய் என்று இருந்ததை இப்போது 2 ஆயிரம் ரூபாயாக நாம் உயர்வு செய்து இருக்கிறோம். அது ஏன் உயர்வு செய்யப்பட்டது. அதற்கான காரணங்கள் ஆகியவைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகவே தெரிந்து இருக்கும். அதை நான் மேலும் இங்கே விளக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் னியார்களோ அல்லது போக்குவரத்துக் கழகங்களோ வைத்து இருக்கக்கூடிய ஸ்பேர் பஸ்களுக்கும் இந்த வரி பொருந்துகிறதே, அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்களே—சுற்றுலா செல்வதற்கு, திருமணங்களுக்குச் செல்வதற்கு—பள்ளிக் குழந்தைகள் சுற்றுலா செல்வதற்கு இப்படியெல்லாம் உபயோகிக்கக்கூடிய பஸ்களா ஆயிற்றே என்ற ஒரு நிலைமையையும் இங்கே சொல்லி இருக்கின்றார்கள். அந்த ஸ்பேர் பஸ்களை பொறுத்தவரையில் ஏற்கெனவே ஸ்பெஷல் பெர்மிட் என்று வாங்கி, 4 நாட்களுக்கோ, 5 நாட்களுக்கோ அவர்கள் சுற்றுலா செல்வதற்கோ, திருமணங்களுக்கு அல்லது மற்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்வதற்கோ பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். இந்த ஆம்னி பஸ்களுக்கான வரி அதற்கும் பொருந்தும் என்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்ட காரணத்தாலே தான் ஆங்காங்கே வரி உயர்வு தர வேண்டும் என்ற ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமித்த கருத்திலே தெரிவித்த அந்த எண்ணத்தின் அடிப்படையில், அரசைப் பொறுத்த வரையில் நாங்கள் ஒரு முடிவை மேற்கொள்ள இருக்கின்றோம். இப்போது வரி உயர்வு செய்து இருப்பது, ஏற்கெனவே இருப்பது. ஒரு மாற்றுப் பேருந்துக்கு, ஸ்பேர் பஸ்ஸுக்கு, ரூட்டிலே ஓடக்கூடிய தடப் பேருந்தாக இருந்தால் 284 ரூபாய் வரி செலுத்த வேண்டும். ஆனால் ஸ்பேர் பஸ்ஸாக இருந்தால் 210 ரூபாய் வரி செலுத்த வேண்டும். இப்போது நாம் செய்து இருக்கக்கூடிய ஏற்பாடு, ஸ்பேர் பஸ்ஸாக வைத்து இருக்கக்கூடியவர்களும், அந்த சலுகை வரி இல்லாமல் ரூட் பஸ்களுக்குச் செலுத்தக்கூடிய அந்த வரியையே அவர்களும் செலுத்த வேண்டும். தற்போது உயர்வு செய்து இருக்கின்றபடி 310 ரூபாய் ஒரு சீட்டுக்கு வரி செலுத்தினால் போதும். ஆம்னி பஸ்களுக்குப் போடப்பட்டு இருக்கக்கூடிய வரி, இந்த ஸ்பேர் பஸ்களுக்குப் பொருந்தாது என்கின்ற முடிவை இந்த அரசாங்கம் எடுத்து இருக்கின்றது. (மேஜையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இதற்கு ஒப்புதல் தந்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப்பைச் செய்கின்ற நேரத்தில் இன்னொன்றையும்

[திரு. மு. கண்ணப்பன்] [1990 மே 10]

சொல்ல வேண்டும். ஸ்பேர் பஸ் என்று வைத்துக்கொண்டு, ஏதோ சுற்றுலாவுக்கு ஏழை மக்கள் பயன்படுத்துகின்ற வகையில் பயன்படுத்தினால் அதற்குரிய அனுமதியைப் பெற்று தாராளமாகப் பயன்படுத்தலாம்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சில பேர் ஸ்பேர் பஸ் என்று வைத்துக் கொண்டு அதையே ஸ்டேஜ் கேரேஜாக, பயணிப் பேருந்துகளாக ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை எங்கு நடக்கிறது என்பது அரசினுடைய கவனத்துக்கு வந்து இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட தவறான முறையிலே அதைப் பயன்படுத்துவார்களேயானால் அப்படிப் பிடிக்கப்படுகின்ற, தவறான முறையிலே ஓட்டப்படுகின்ற பேருந்துகளுக்கு சீட்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் என்கின்ற வரி விதிப்டதோடுகூட அவர்களுடைய பெர்மிட்டுகளையும் கேன்சல் செய்வதற்கு தகுந்த நடவடிக்கையை அரசாங்கம் மிகக் கடுமையாக மேற்கொள்ளும் என்கின்ற எச்சரிக்கையையும் இந்த நேரத்திலே அரசின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே அந்த வரி குறைப்பானது நிச்சயமாக நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தபடி ஏழை மக்களைப் பாதிக்காத வகையில் அமைந்து இருக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு–3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு-3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

(1) In clause 3 in sub-clause (2) In sub–item (a) for the figures 1000-00 against item (d). *substitute* the figures 500–00.



1990 மே 10] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

(2) In clause 3, in sub-clause (2) In sub–item (b), *for* the figures 2000–00, *substitute* the figures 500–00"

(திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.)

11-25 மணி

இந்தத் திருத்தத்தை நான் முன் மொழிகின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கனவே இந்த மன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ஒரு சில சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்னது போன்று, வேன்களுக்கும் இந்தச் சலுகையை வழங்குவதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டே அந்த வரி உயர்வு இருந்தாலும் இன்றைக்கு அந்தக் கோரிக்கை இருக்கிறது. சென்ற ஆண்டே ஏற்றியிருக்கிறோம்; இந்த ஆண்டு ஏற்றவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், மறுபரிசீலனை செய்து, வேன் உரிமையாளர்களுடைய அந்தக் குறையை நீக்குகின்ற அளவிற்கு அந்த வரியையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1990 மே 10

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1990) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. வி. இராமசாமி: பேரன்புமிக்க பேரவைத் துணைத் தலைவர்களே, 1990-ஆம் ஆண்டுக்கான கூட்டுறவுச் சட்ட திருத்தத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அதே நேரத்தில் என் கட்சியின் சார்பில் சில ஆலோசனைகளை இந்த அவைக்கு முன்னால் வைக்கத் தயாராக இருக்கிறேன். அரசுத் துறைகளில் செயல்படக் கூடிய துறைகளில் முக்கியமானது ஒன்று கூட்டுறவு ஆகும். ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்று நாட்டிலே நடைமுறையிலே வரக்கூடியது இந்த ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்தில் இருக்கக் கூடிய அதிகாரிகள் அனைவரும் அரசு ஊழியர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால், அதிலே பணியாற்றக்கூடிய பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே, அவர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்படுவதற்கும், மேலும் நல்லதொரு ஊதியச் சட்டமும், வேலை ஆள் நிலை ஆணையும், சேவைக்கான கள விதிகளையும் ஒழுங்குபடுத்த சட்டம் கொண்டு வர வேண்டும் என்று இந்த அவையின் முன் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலப் பதிவாளர் தெரிவித்துள்ள சம்பள விகிதத்தையும் உத்தரவாதமாக அறிவிக்கப்பட வேண்டுமென்பதோடு, ஏற்கனவே இந்தக் கூட்டுறவு போர்டு கலைக்கப்படுவதற்கு முன்னால் அந்த போர்டால் உயர்த்தப்பட்ட சம்பளங்கள் இன்னும் பலயிடங்களில் இந்த மாநிலத்தில் அந்த ஊழியர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்குமேல் அவர்கள் தொழிற்சங்கத்தின் மூலமாகத் தங்களுடைய கோரிக்கைய வைத்து லேபர் ஆபீசர் முன்னோ அல்லது அங்கிருக்கக் கூடிய அதிகாரிகள் முன்னோ ஒப்பந்தம் ஏற்பட்டால் அதனையும் கூட்டுறவு அதிகாரிகள் அமல்படுத்துவது இல்லை. அதற்குமேல் நீதிமன்றத்திற்கோ தொழில் கோர்ட்டுக்கோ சென்று அந்த ஊழியர்களுக்கு நியாயம் கிடைத்தால் அதுவும் அமல் நடத்தப் படாமல் இருப்பது ஒரு வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

---

*8-5-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.





அதுவல்லாமல், கிராமப்புறத்திலே தனியார் நடத்தக்கூடிய இந்த அங்காடி கடைகளில், இருக்கக்கூடிய ஊழியர்களையும் கூட்டுறவு ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11.30 மணி

மேலும், கூட்டுறவு நிறுவனத்தை விரிவுபடுத்தி அதிலே மக்களுக்குத் தேவையான நுண்பொருள்கள் அனைத்தும் அதிலே கொள்முதல் செய்து கேரளா மாநிலத்திலே இருப்பது மாதிரி செய்ய வேண்டும். மக்களுக்கு நல்லதொரு பொருட்கள் கிடைப்பதற்கு, அரசு இந்தக் கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்தி, வலுப்படுத்தி, மக்களுக்குத் தேவையான பொருட்களை விநியோகம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையில் மாவட்ட தலைநகரங்களில் உள்ள கடைகளுக்கு சொந்தக் கட்டிடங்கள். அதற்கான வண்டிகள், இவைகளை எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்து அவைகள் அங்கு தடையின்றி செயல்படுவதற்கும், நடைமுறையாக்குவதற்கும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு என்ற முறையில், அரசுத் தரப்பிலே இன்று 800 பேர்கள் கொண்ட ஒரு பகுதிக்கு கடை ஆரம்பித்து செயல்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை மேலும் துரிதமாகச் செயல்படுத்தவேண்டும். இன்றைக்கு கிராமப்புறங்களில் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இன்னமும் கார்டு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களுக்கும் குடும்ப அட்டைகள் கிடைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று என் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்குகிற வகையில், பெண்களுக்காகவும், ஆதிதிராவிட உறுப்பினர்களுக்காகவும் அவர்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்வேண்டும் என்ற அடிப்படையான, அத்தியாவசியமான இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையிலும், தேர்தல் நடைபெற வேண்டும் என்ற கருத்து அனைத்துத் தரப்பு மக்களிடத்திலேயிருந்தும், ஒத்த கருத்தாக உருவாகி, எந்தச் சூழ்நிலையிலாவது தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகங்கள் கூட்டுறவுச் சங்கங்களை நடத்தவேண்டும் என்ற அடிப்படையிலேயும், தனி அதிகாரிகளுடைய கையிலே இருக்கிற அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்களுடைய கைக்கு வரவேண்டும் என்ற அடிப்படையில், இன்றைக்கு எந்தத் திருத்தங்கள் கொண்டு வந்தாலும் கூட, அந்தத்

திருத்தங்களை ஏற்றுக்கொண்டு, தேர்தல் வருவதற்கான வழிவகை வகுக்கப்படவேண்டுமென்பதில் நிச்சயமாக நாம் ஆர்வமாக இருக்கிறோம்.

இந்தச் சட்டத்தின் மூலமாக ஏற்படுகிற சில விளைவுகளை எடுத்துச் சொல்லியாகவேண்டும் என்பதாலே சொல்கிறேன். பிரதமச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின், டிஃபால்டர் களாக இருந்தாலும் தேர்தலிலே நிற்கலாம் என்ற நிலையை உருவாக்குவது அவ்வளவு நல்லதல்ல. டிஃபால்டர்கள் தேர்தலிலே நிற்பது, அவர்களுக்கு வாக்குரிமை வழங்குவது என்பது நிச்சயமாக அவ்வளவு சரியாக இருக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், டிஃபால்டர்கள் என்று சொல்கிற அந்த நிலைகளை மாற்றுவதற்கு ஒரு வாய்ப்பு என்று சொல்கிற நேரத்தில் தேர்தல் வருகிற நேரத்திலே தான் பண டிஃபால்டர்கள் முறையாக உறுப்பினர்களாக ஆகிற நிலைமைகள் வரும். சில பேர்கள் தேர்தலிலே நிற்பதற்காகக் கூட அவசர அவசரமாக பாக்கிகளைக் கட்டி, அல்லது அவர்கள் தரவேண்டிய நிலுவைகளை எல்லாம் அடைத்து விட்டு, அவர்கள் தகுதி உள்ள உறுப்பினர்களாக ஆகவேண்டும் என்பதற்காக அந்த நிலைகளை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு அதற்கும் ஒரு வழிவகை இல்லை என்ற அளவிற்கு ஆகி, பாக்கியிருந்தாலும் பரவாயில்லை, டிஃபால்டராக இருந்தாலும் பரவாயில்லை, எந்தக் குறையாக இருந்தாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு வருவது நிச்சயமாக ஒரு ஆரோக்கியமான நிலை அல்ல என்பதை மட்டும் நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கல்வியைப் பொறுத்தவரையில், எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது என்ற நிலை என்பது, இன்றைக்கு நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலும், அதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்ற கட்டாயத்திலே இருக்கிற நிலையாகும். ஆனால் இந்த நிலை தொடர்ந்து நீடிக்க முடியுமா என்று சொன்னால் நிச்சயமாக முடியாது. கல்வியைப் பொறுத்தவரையிலும், கல்வி அறிவு இல்லாதவர்கள், வேறு அறிவுகள் அவர்களுக்கு பல்வேறு வகையான அனுபவங்கள், அறிவாற்றல்கள் இருந்தாலும் கூட, கல்வி என்ற நிலையை அவர்கள் பெறவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு இருக்கிற பல்வேறு ஆற்றல்களும் கூட, அது முறையாக செயல்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது என்பதையும், இந்த நேரத்திலே நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

**11.35 மணி**

அதே போல் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கிற நேரத்தில், கடந்த சில மாதங்களுக்கு முன்னால், நடைபெற்றிருக்கிற நிலைகளை இந்த நேரத்தில்





மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால் அதிலே அவர்கள் நேரடியாக சம்பந்தப்படவில்லை என்று எனக்குத் தெரியும். என்றாலும் கூட்டுறவுச் சங்கங்கள் என்று சொல்கின்ற நேரத்திலே அவர்கள் அதிலே கொஞ்சம் சம்பந்தம் இருப்பதாக நினைத்துக்கொண்டு அவர்கள் அந்த அதிகாரிகள் மூலமாக அந்த நடவடிக்கைகளையாவது கவனிக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதனால் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் களை சேர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு இடங்களில் திடீர்திடீரென்று உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். நான் பணிவோடு ஒன்றை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்றவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே அதனுடைய அதிகாரத்திலே வரவேண்டுமென்பது நிச்சயமாக தவிர்க்கமுடியாத ஒன்று. ஆனால் அதே நேரத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் முழுவதையும் அங்கேயிருக்கின்ற உறுப்பினர்களுடைய நிலைகளுக்கு விரோதமாக வருமானால், நிச்சயமாக கூட்டுறவுச் சங்கங்கள் எதுவும் உருப்படியாகி வரமுடியாத நிலைமை வந்துவிடும். நான் குறிப்பிட்டுச் சொல்லவிரும்புகிறேன். பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரே வீட்டில் அதுவும் 15க்கு 20 என்ற அளவிற்கு ஒரு தடுப்பு போட்டிருக்கின்ற ஒரு சாதாரண வீட்டில், 5 பேர் வசிக்கக் கூடிய வீட்டில் 50 பேரை ஒரே முகவரியில் உறுப்பினர் களாக்கி ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்கிறார்கள். அது தவிர வேடிக்கை—நெசவுத் தொழிலுக்குச் சம்பந்தமில்லாத நெசவுத் தொழிலே தெரியாதவர்களை எல்லாம் கொண்டு போய் கூட்டுறவுச் சங்கத்திலே சேர்த்து, அவர்களைப் புதிய நெசவாளர்களாக ஆக்கி, எங்கள் தொழிலுக்குப் போட்டியாக, எங்கள் தறியிலே பங்கு வாங்கி, எங்கள் வேலையையும் கெடுக்கின்ற நிலைமைகள் எல்லாம் உருவாகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த நிலைமைகள் களையப்படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் நியமனம் என்று சொல்கின்ற நேரத்திலே நியமனங்களைக் கட்சிக்காரர்களுக்கு என்று போடுவதனால் என்னென் நிலைகள் வரும் என்பது பற்றி எனக்கு பல ஆண்டுக் காலமாக அனுபவம் இருக்கிறது. இங்கே இருக்கின்ற என்னுடைய நண்பர் ராமலிங்கம் சிரித்துக்கொண்டிருக்கிறார். நான் அவர் களுக்காக தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங் களிலே யார் ஊழல் செய்திருந்தாலும், யார் தவறு செய் திருந்தாலும் அவர்கள் மீது தீவிரமாக நடவடிக்கை எடுத்து, கூட்டுறவுச் சங்கங்களிலே தவறு செய்கின்றவர்களை மக்கள் முன்னாலே அடையாளம் காட்டி, அவர்களுக்கு உரிய தண்டனையைக் கொடுத்தால்தான் எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு நல்ல வழிவகை காணுகின்ற நிலை வரும். அதிலேயும் கூட்டுறவுச் சங்கங்களிலே, பண்டகசாலைகளிலே போன்றவைகளில் எல்லாம் கூட தவறு செய்து விட்டாலும் கூட

ஒன்றும் தெரியாது என்றால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தவறு செய்பவர்களானால், நெசவாளர்களுடைய வாழ்வும் இன்றைக்கு பாதிக்கப்பட்டு பல இடங்களில் தறிகள் இல்லாத அளவிற்கு நெசவாளர்கள் இன்றைக்கு வாழ்விற்குப் போராடு கின்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடுகிறது. எனவே இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலாவது நீங்கள் உடனடியாக தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த நெசவாளர் களுக்கு வாழ்வு தருகின்ற நிலையை நீங்கள் எடுக்கவேண்டும். பெரிய கூட்டுறவுச் சங்கங்கள், பண்டகசாலைகள் இருக்கின்றன. அதிலே எந்தத் தவறு செய்தாலும் அதை கண்டுபிடிக்க முடியாது. அது இப்படித் தவறோடு தவறாகச் சேர்ந்துகொண்டே போகலாம். ஆனால் நெசவாளர்களின் வாழ்விற்காக சில பேர்களுக்கு தொழில் தருகின்ற கூட்டுறவுச் சங்கங்களில் இந்தப் பிரச்சினைகளை மாற்றுவதற்கு தீவிர நடவடிக்கை எடுத்து நீங்கள் விரைவில் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்திருத்தங்களை ஆதரித்து அமைகின்றேன்.

திரு. பி. எச். பாண்டியன் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'Ex-parte-யாகப் போகக் கூடாது அல்லவா? The Bill has to be opposed or defended. கூட்டுறவுச் சட்ட மசோதாவினுடைய கருத்துக்களை தெரிவிக்க ஆசைப் படுகிறேன். பெண்களுக்கு 30 சதவீதத்தை ஒதுக்கிய இந்தச் சட்ட மசோதாவில் யாராவது பெண் உறுப்பினர்கள் பேசுவார் களா என்று பார்த்தேன். ஒருவரும் பேசவில்லை. ஆகவே சட்டப் பேரவையே முழுமையாக அந்த இட ஒதுக்கீட்டை ஆதரிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முதலிலே இங்கே வைக்கிறேன். 30 சதவீதம் தான். ஆனால் கூட்டுறவுச் சங்கத்திலே மட்டும் 30 சதவீதத்தைக் கொடுத்தால் ஜன நாயகத்தை நிலைநாட்டியது பால் ஆகாது. பாராளுமன்றத் திலும் 30 சதவீதத்தை, அந்த இட ஒதுக்கீட்டைக் கொடுக்க வேண்டும். சட்டமன்றத்திலும் கொடுக்க வேண்டும். உங்க ளுடைய அமைச்சரவையிலும் கொடுக்க வேண்டும். கோட்டை யிலுள்ள பெரிய அதிகாரிகளுடைய செலக்ஷனில் 30 சதவீதத் தை ஒதுக்கவேண்டும். உயர்நீதிமன்றத்திலே 30 சதவீதத்தில் அங்கேயும் பெண் நீதிபதிகளை நியமிக்கவேண்டும். ஆகவே இதைக் கீழிருந்து மேலே வரை 30 சதவீதத்தை ஒழுங்கான விகிதாச்சாரப்படி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இல்லா விட்டால் மேலேயிருந்து கீழ் வரை பாராளுமன்றத்திலிருந்து கூட்டுறவுச் சங்கம் வரை வழங்கவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

11-40 மணி

கூட்டுறவுக் கடன் ஏதாவது பாக்கி வைத்திருந்தால் அவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்ற விதிமுறை இருக்கிறது.





அதையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசி னார்கள், சிறிய கூட்டுறவுச் சங்கத்திற்கே அந்தத் தடை. பெரிய பெரிய பொறுப்பில் உள்ளவர்கள் எல்லாம் வருமான வரி கட்டாமல் இல்லையா? அவர்கள் எல்லாம் தேர்தலில் நிற்க வில்லையா? பாராளுமன்றம், சட்டமன்றம் இதற்கு ஏன் விதி விலக்கு? அந்த வரியைக் கட்டாத காரணத்தால் தடை கிடை யாது. ஆகவே, அப்படியெல்லாம் இருக்கும்போது யாராவது ஒரு ஏழை கூட்டுறவு கடனை திரும்பச் செலுத்த முடியவில்லை யென்றால் அதையே காரணமாகக் காட்டி அவருடைய வாக்குரி மையை, அவர் தேர்தலிலே நிற்பதையே தடை செய்வது உண்மையிலேயே ஜனநாயகத்தில் ஒருவருக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்பைக் குறைப்பதாகும். ஆகவே, அந்தத் தடையும் கீழி யிருந்து மேலே வரை இருக்க வேண்டும். எங்கேயும் பாதிக்கப் படுகின்றத் தட்டு கீழ்தட்டுத்தான். சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று சொல்வது போல், வரி கட்டாதவர்கள் எல்லோரும் சமமாக பாவிக்கப்பட வேண்டுமென்ற வேண்டு கோளை நான் இங்கே தெரிவித்து இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து அமைகின்றேன், வணக்கம்.

திரு. ஜி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்தினுடைய இந்த சட்டத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல முன் வருகிறேன் கூட்டுறவு சங்கங்களில் அநேகமாக இன்றைய தினத்தில் போலி கார்டுகள் வைத்திருக்கக் கூடியவர்கள் என்று சொல்லி அநேக மாக கார்டுகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே கிராமப் புற மக்கள் உண்மையாகவே கார்டு பெறக்கூடிய தகுதியுள்ளவர் களுக்கு இன்றைய தினம் கார்டு கிடைக்காமல் அவர்கள் அத்தியா வசியமான பொருள்களை வாங்குவதற்கு முடியாத ஒரு சூழ் நிலைமை. கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மக்கள் பல்வேறு சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கார்டுகளை போலியாக இல்லாமல் உண்மையான நபர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு அவர்கள் அத்தியா வசியமான பொருள்களை கூட்டுறவு சங்கங்களில் வாங்கு வதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் கூட்டுறவு கிராம அங்காடிகளில் இருக்கக் கூடிய பல்வேறு அங்காடிகள் வாடகைக் கட்டிடங்களிலே இன்றைய தினம் பணியாற்றிக் கொண்டிருக் கின்றன. பாதுகாப்பு இல்லாத இடங்களிலும் இருக்கின்றன. கூட்டுறவு பொருள்களை வைக்கின்றபோது கூட மழைகள், இன்னும் வெள்ளச் சேதாரங்கள் ஏற்படுகின்ற நேரங்களில் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகின்றன. திருட்டுகள் கூட நடை பெறுகின்றன. ஆகையால் அரசு மூலமாக கூட்டுறவு சங்கங் களுக்கு முழுமையாக பக்கா கட்டிடங்கள் கட்டி தொடர்ந்து அந்த கூட்டுறவுச் சங்கம் செம்மைப்படுவதற்கு ஆவன செய்யு மாறு நான் கேட்டுக் கொண்டு இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

[1990 மே 10

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை விமர்சித்து பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், இந்தச் சட்டத்தினுடைய புனிதமான நோக்கங்களை எண்ணிப் பார்த்து வரவேற்றிருக்கிறார்கள். இந்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு தேர்தல் சீக்கிரம் நடத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஏற்கெனவே இந்த மன்றத்திலே கொடுத்த கூட்டுறவு சங்கங்கள் தேர்தல் நடத்துவதற்கான வாக்குறுதி குறித்து ஆய்வு செய்து தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட நேரத்தில், சில நடைமுறைச் சங்கடங்கள், ஏற்பட்டு தடைபட்ட காரணத்தினாலேதான் இந்த் திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தைப் பொறுத்த மட்டில் அனைவரும் ஏற்றுக் கொண்ட நிலையில், அனைவரும் இந்த திருத்தங்கள் வரவேண்டுமென்று வரவேற்கிற நிலையில், அவர்களே வரவேற்கின்ற காரணத்தினாலே இந்தத் திருத்தத்தையெல்லாம் ஏற்றுக் கொண்டு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கடன் தவணை பாக்கியிருந்தால் அவர்கள் எப்படி தேர்தலிலே போட்டியிடலாம், ஏதாவது தடை இருக்கவேண்டாமா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் தெரிவிப்பதெல்லாம், பாக்கியுள்ளவர்கள் வாக்களிப்பதற்கு இப்பொழுது அனுமதித்திருப்பதற்குக் காரணம் நீண்ட நாட்களாக கூட்டுறவுத் தேர்தல் நடைபெறாத நேரத்திலேயிருந்த காரணத்தினாலேதான் கடன் பாக்கி உள்ளவர்களும் இந்த முறை நீண்ட நாட்களுக்கு பின்னாலே இந்தத் தேர்தல் நடைபெறுகின்ற காரணத்தினால், வாக்களிப்பதற்கு மட்டும் உரிமை வழங்கப்படுகிறது. ஆனால் அவர்கள் வாக்காளர்களாக போட்டியிட முடியாது. வாக்காளர்களாக போட்டியிட வேண்டுமேயானால் அவர்களுடைய கடந்த கால கடன் தவணையைச் செலுத்தியாக வேண்டும் என்கிற நிபந்தனையும் இன்றைக்கு இருக்கிறது. ஆனால் இந்த கருத்தையே நம்முடைய முன்னாள் சபாநாயகரும் நம்முடைய அன்புக்குரிய மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் எதிர்த்தார்கள். வருமான வரி பாக்கியுள்ளவர்களே தேர்தலிலே நிற்கலாம் என்கிற கட்டம் இருக்கிறபோது, சாதாரண கூட்டுறவு சங்கங்களிலே கடன் வாங்கிய ஏழை விவசாயிகள் இதற்காக, இந்த சாதாரண காரணத்திற்காக மறுக்கப்பட வேண்டுமா என்கின்ற கேள்விக் குறியை எழுப்பினார்கள். எனவே, எதிர்கட்சித் தலைவருடைய கேள்விக்கும், நம்முடைய முன்னாள் சபாநாயகர் அவர்களுடைய கேள்விக்கும் இடையில் சமாதானமாக, வாக்களிப்பதற்கு உரிமை, வாக்காளராக நிற்க வேண்டுமென்றால் தவணையைக் கட்ட வேண்டுமென்ற ஒரு சமாதான முடிவை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 மே 10] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

11-45 மணி

அடுத்து நம்முடைய உறுப்பினர்கள் பழனிச்சாமி அவர்களும், இராமசாமி அவர்களும் இந்தத் திருத்தங்களை வரவேற்றார்கள். அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றபோது ரேஷன் கார்டுகள் குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான உத்திரவு – அரசு ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படி புதிய குடும்ப அட்டைகள் வேண்டுமென்று மனுச் செய்தவர்களுடைய பட்டியலை மாவட்டத்திலே உள்ள மாவட்ட வழங்கல் அதிகாரியிடம் தருவார்களேயானால் 100சதவீதம் பரிசோதனைக்குப் பின்னாலே குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்று நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். இந்த நியாய விலைக் கடைகள் எல்லாம் வாடகை இடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் நிரந்தரமான ஒரு கட்டிடம் கட்டி அதிலே இருந்தால் பொது மக்களுக்கும் நலமாக இருக்கும். அத்தோடு பொருள்களும் பாதுகாப்பாக இருக்கும் என்ற கருத்துப்பட அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்தும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நிச்சயமாக தேர்தல் ஆகஸ்ட் மாதத்திலேயே பிரைமரி சங்கம் என்கின்ற தொடக்க சங்கங்களுக்கு தொடங்கும் என்று தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு வேண்டி அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள்
(திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு
எண். 28/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட
முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (இ) பொது விற்பனை வரி மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச்
செயலர்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி
(மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்டமுன்வடிவு எண். 29/1990) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்
பெறவேண்டும்.''

**11-50 மணி**

* திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட திருத்தத்தின்
மூலமாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். வரி
விதிப்பு குறித்து சாதாரண மக்களுக்கு இது போய் சேர வேண்டும்
என்ற அடிப்படையிலே அந்த விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்
கிறார்கள்.இதை ஒரு சாதாரண வார்த்தையாக நான் எடுத்துக்
கொள்ளாமல் உண்மையிலேயே இந்த வரி விதிப்புகள் சாதாரண
மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சொன்னால், இதிலே
சில திருத்தங்களை கொண்டுவந்திருக்கிறீர்களே அதிலே சில
மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று நான் என் கருத்துக்
களைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக பருத்தி கழிவு நூல்
களுக்கு 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்
கிறது. இந்த வரி உயர்வானது அந்த பருத்தி, வேஸ்ட் காட்டன்
மில்களிலே பயன்படுத்தக்கூடிய பருத்தி நூலாகும். அந்த நூல்
களிலே நெய்யக்கூடிய துணிகள் மிக தரம் உள்ளவையாக
இருக்காது. சாதாரண கிராமங்களிலே வாழக்கூடிய ஏழை
மக்களுக்காக பயன்படுத்தக்கூடிய மிக மோசமான துணிதான்
அந்த பருத்தி நூல்களிலே கிடைக்கும். ஆகவே, இந்த ஆறு
சதமான விழுக்காடு என்பது, சாதாரணத் துணியின் மேல்தான்
விழும். அது கிராமத்திலே இருக்கக்கூடிய ஏழை எளிய பெண்
களுக்கும், மக்களுக்கும் நெய்யக்கூடிய அந்த துணியின் மீதுதான்
போய்ச் சேரும். ஆகவே, இது குறைக்கப்படவேண்டும் என்று
நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

*1990 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் நாளிட்ட தமிழ்நாடு
சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.





கிராமத்திலே வாழுகின்ற ஏழை–எளிய மக்களுக்கு உதவுகின்ற
வகையில் இந்த வரி திருத்தம் அமைய வேண்டும் என்றும்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சொல்லக்கூடியது, கோதுமை, கோதுமை மாவிலே
தயாரிக்கப்பட்டிருக்கக்கூடிய பொருட்களின் மீதான வரி இதிலே
விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே சுருக்கமாக சொல்ல வேண்டு
மென்று சொன்னால், கோதுமை மாவிலே தயாரிக்கக்கூடியவை
பிஸ்கட்டுகளும், ரொட்டிகளும், பன்களும், அதனைப்போல்
பல்வேறு வகையான உணவுப் பொருட்களும் தான். இன்றைக்கு
ரொட்டி தயாரிக்கக்கூடிய அந்த கோதுமை மாவின் மேல்
போடப்படும் வரி என்பது, இரண்டு விழுக்காட்டிலேயிருந்து
நான்கு விழுக்காடாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அநேகமாகச்
சொன்னால், சரி பாதி. 100 சதவிகிதம் என்று சொல்லலாம்.
இது அதிகமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். இன்றைக்கு மத்திய அரசாங்கம் நமக்குக் கொடுக்கக்
கூடிய அரிசி போதுமானதாக இல்லை என்று பலமுறை இங்கே
பேசியிருக்கிறோம். அதைச் சரிக்கட்டக்கூடிய முறையில்தான்
கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் இன்றைக்கு ஓரளவிற்காவது
கோதுமையினை வாங்கி, கோதுமை மாவை வாங்கி, ஏழை-எளிய
மக்கள் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலைமை இருக்கின்றது. அதை
ஊக்கப்படுத்தவேண்டுமென்று சொன்னால், அரிசியிலிருந்து சற்று
விலகி, கோதுமைப் பண்டங்களை உபயோகப்படுத்துவதற்கு
ஊக்கப்படுத்தக்கூடிய முறையிலே நாம் முன் முயற்சி எடுக்க
வேண்டுமென்று சொன்னால், இந்த வரி உயர்வு பாதிக்கும்
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அந்தக் கோதுமை மாவிலே தயார் செய்யக்
கூடியது தான் ரொட்டி, தமிழகம் முழுவதும் ரொட்டி சாதாரண
மக்கள் வாங்கக்கூடிய நிலையிலே இருக்கவேண்டும். நீங்கள்
பார்க்கலாம், ஆஸ்பத்திரிகளிலே நோயாளிகள் பயன்படுத்தக்
கூடிய அளவுக்கு ரொட்டிகள் இருக்கின்றன என்று சொன்னால்,
இந்த வரி விதிப்பின் மூலமாக ரொட்டிக்கும், பன்னுக்கும்,
கூடுதலாக விலையை உயர்த்தக்கூடிய சூழ்நிலை உருவாகும்.
ஆகவே, சாதாரணமக்கள் மீது நாம் வரியைப் மறைமுகமாக
போடுவதாக அர்த்தம், நேரடியாக இல்லாவிட்டாலும், கோதுமை
மாவுக்கு நாம் இரண்டு விழுக்காட்டை அதிகப்படுத்தினால்,
அது அதனுடைய உற்பத்தியைப் பாதிக்கும். அந்த உற்பத்தி
யினாலே அந்த பயன்படக்கூடிய மக்களை அது பாதிக்கும்.
சாதாரண மக்களை அது பாதிக்கும். கிராமப்புற மக்களையும்
அது பாதிக்கும். ஆகவே, அந்த வரி உயர்வை சிறிது நாம்
தளர்த்தினால், அல்லது குறைத்தால் சாதாரண ஏழை எளிய
மக்களுக்கு, கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு அதனால் பயன்
கிடைக்கும். அதேபோல், அரிசி பற்றாக்குறையைப் போக்கக்
கூடிய அளவிற்கு, கோதுமையைப் பயன்படுத்தக்கூடிய மக்களுக்கு

ஓரளவிற்காவது அது பயன்தரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதையும் குறைக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, தவிடு, சாதாரண பிஸ்கட்டு தயார் பண்ணுகிறார்கள். குழந்தைகள் உணவு, பிஸ்கட் என்று சொன்னாலே குழந்தைகள் உணவு. அதற்கு நாம் வரி போட்டால் குழந்தைகளுக்கு பிஸ்கட்டே போய்ச் சேராது. ஆகவே, அதைக் கொஞ்சம் கருணையோடு குறைப்பதற்கு முயற்சிக்கவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விருமபுகிறேன். அடுத்தாற்போல் சொல்லியிருப்பது, கொப்பரைத் தேங்காய், தேங்காய், அநேகமாக எனக்கு முன்னால் பேசிய முன்னாள் சட்டசபைத் தலைவர் பி. எச். பாண்டியன் சொன்னார், கொப்பரைத் தேங்காய்க்கு வரி போட்டால் அது தேங்காய் எண்ணெய் விலையை ஏற்றும். இன்றைக்கே தேங்காய் எண்ணெய் வாங்க முடியாத அளவுக்கு விலை ஏறியிருக்கிறது. கிராமத்திலே இருக்கக்கூடிய, சாதாரண மக்கள், அரிசன மக்கள், தேங்காய் எண்ணெயைப் பார்த்து பல ஆண்டுக் காலமாகிறது. தலைக்குத் தேய்க்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, கொப்பரைத் தேங்காய்க்கு வரி போட்டால், தேங்காய் எண்ணெய் விலை இன்னும் கூடுதலாகத் தான் வரும். ஆகவே, அதையும் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

11–55 மணி

அதற்கடுத்தபடியாக சாதாரணத் தேங்காய்க்கு வரியைக் குறைத்திருக்கிறார்கள். ஒரு சதம் குறைத்திருக்கிறார்கள். நான் அதிலே பார்த்தேன். இன்றைக்கு சாதாரண தேங்காய் விலை மிகக் கடுமையான நிலையில் இருக்கிறது. ஒரு தேங்காய் வாங்க வேண்டுமென்று சொன்னால், மூன்று ரூபாய்க்குக் குறைவில்லாமல் கொடுத்து வாங்க வேண்டும். சட்டினி கூட இன்றைக்குக் கிடைக்க முடியாத சூழ்நிலை. ஓட்டல்களிலே நீங்கள் பார்க்கலாம். ஓட்டல்களிலே சட்டினிக்கு தேங்காய்க்குப் பதிலாகப் புண்ணாக்கைக் கலக்கக்கூடியதாகச் சொல்கிறார்கள். நான் நேரடியாகப் பார்க்காவிட்டாலும்கூட, இன்றைக்குப் பரவலாகப் பேசப்படுகிறது. அப்படிப்பட்ட தேங்காய்க்கு அந்த வரி விலக்கை அளிக்கலாமே தவிர, ஒரு சதம் குறைப்பதற்கு மேலும் குறைத்தால் அதுவும் சாதாரண, கீழே இருக்கக்கூடிய மக்களுக்குப் பயன்படும். இதெல்லாம் சாதாரணமக்கள் பயன்படுத்தக்கூடியது. பெரிய பணக்காரர்கள், வசதி வாய்ந்தவர்கள் பயன்படுத்தக் கூடியது அல்ல. அப்படிப்பட்ட சாதாரண மக்கள் பயன்படுத்தக் கூடியதற்கு உண்மையிலேயே, முதலமைச்சர் அவர்கள் ஏராளமான சலுகைகளை அளிக்கக்கூடிய இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இப்படிப்பட்ட நிலையில் இன்னும் கூடுதலாக வரி





விலக்குகள் அளித்தால் அது மக்களுக்குப் போய்ச் சேரும்—(மணி யடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்—என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி போன்ற பொருட்களுக்கெல்லாம் 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தி இருக்கிறீர்கள். இதுவும் சாதாரண மக்கள் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் தான். இதையெல்லாம் நாம் உண்மையிலேயே கருணை உள்ளத்தோடு குறைக்கவேண்டும். இன்றைக்கு வந்து இருக்கக்கூடிய இந்த பில்லில் சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய அத்தனை பொருட்களுக்கும் வரி கூடுதலாகவும், சிலதுக்கு குறைவானதும் என்ற நிலை இருக்கிறது. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து, ஆட்சி மன்றச் செயலாளர் பரிசீலனை செய்து சாதாரண மக்களுக்குப் பலன் கிடைக்கின்ற முறையில் இந்த வரி விகிதங்கள் அமையவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லி எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டமுன்வடிவை அதிலே சிலவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற முறையிலே என்னுடைய கருத்தை எடுத்து வைக்கிறேன்.

இந்த அரசு இன்றைக்கு ஒரு முனை விற்பனை வரியை அறிமுகம் செய்திருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி ஆகும். வியாபாரிகளைப் பொறுத்தவரையிலும், அதேநேரத்தில் பொதுமக்களைப் பொறுத்தவரையிலும், அது மிகவும் பயன் அளிக்கக்கூடிய வகையில் அமைந்து இருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் மக்களுக்கு அன்றாட உபயோகத்தில் இருக்கின்ற பல்வேறு சாதாரண பொருட்கள் மீது இன்றைக்கு வரி போட்டு இருக்கிறோம். மிளகாய், தனியா, புளி போன்ற பொருட்களுக்கு எல்லாம் இன்றைக்கு வரி உயர்வு அளித்து இருக்கிறோம். சாதாரண மக்களுடைய உணவில் போடக்கூடிய இந்தப் பொருட்கள் மீது நாம் வரியைச் சுமத்தினால் அது சாதாரண மக்களைத் தான் பாதிக்கும் என்ற முறையில் இவைகள் மீது போட்டிருக்கின்ற அந்த வரியை அறவே ரத்து செய்யவேண்டும். வரியை முழுமையாக ரத்து செய்கின்ற அளவுக்கு அறிவிப்பினை அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஏழை மக்களுடைய மூட்டையைச் சுமந்து செல்கின்ற வண்டிகளின் டயர்களுக்கு இன்றைக்கு வரியைக் குறைத்து இருக்கிறீர்கள். ஆனாலும் கிராமத்தில் உள்ள

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 மே 10

சூழ்நிலையைப் பொறுத்தவரையில் விலங்குகளால் இழுக்கப்படும் வண்டிகளுக்கு டயர்களுக்குப் போடக்கூடிய அந்த வரியை அறவே ரத்து செய்கின்ற அளவுக்கு நீங்கள் நடவடிக்கை எடுத்து அதே நேரத்தில் இந்த வரியைக் குறைப்பதால் ஏற்படுகின்ற இழப்பை ஈடுகட்ட வேண்டுமானால் நீங்கள் ஆடம்பரப் பொருட்கள் மீது வரியைக் கொண்டு வாருங்கள் அல்லது பெரிய பெரிய யந்திரங்கள் மீது வரியை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டு, அதேநேரத்தில் வியாபாரிகளிடத்திலே மற்றொரு குறை இருப்பது மேல் முறையீடு செய்கின்ற நேரத்தில் நீதிபதியை நாம் நியமனம் செய்கிறோம் என்று சொன்னாலும் அந்தத் துறையைச் சேர்ந்தவர்களை நாம் நியமிக்கக்கூடாது. துறையைச் சேர்ந்தவர்களை நீதிபதியாக நியமித்தால் அவர்கள் மூலமாக எந்தவிதமான சரியான தீர்ப்பு வர முடியாத நிலை மான் இருந்து கொண்டு வருகிறது. ஆகவே, மேல்முறையீடு என்ற அந்தக் குழுவிலே நீதிபதிகளைத் தான் நீங்கள் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு நீங்கள் போட்டு இருக்கின்ற அந்த வரியை ரத்து செய்து அறிவிக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திருத்தம் நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சரும், முதலமைச்சருமான கலைஞர் அவர்கள் அறிவித்து இருக்கின்ற வற்றை சட்டம் ஆக்குவதற்காகத்தான் என்பதை எல்லோரும் அறிவீர்கள்.

12–00 மணி

*1990–91* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான உரையில் குறிப்பிட்ட சில பண்டங்களுக்கு வரிச் சலுகைகளை அரசு அறிவித்து இருப்பதோடு அண்டை மாநிலங்களில் நிலவுகின்ற வரி விகிதங்களைக் கருத்தில் கொண்டும் மற்றும் சாதாரண மனிதனைப் பாதிக்காதவகையில் நிதி வள ஆதாரங்களைப் பெருக்கு வதற்காக வேண்டியும் சில பண்டங்களைப் பொறுத்தவரையில் விற்பனை வரி விகிதங்கள் சற்று உயர்த்துவது என்று முடிவு செய்துள்ளது. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். குறிப்பாக, தேங்காய்க்கு வரி விதித்தால் ஏழை யெளிய மக்களைப் பாதிக்கும் என்றார்கள். ஆயில் மில்களுக்கு விற்கப்படுகிற தேங்காய்க்கு மட்டுந்தான் வரிவிதிப்பு உயர்த்தப் படுகிறதேயல்லாமல் சாதாரணமாக, பொது மக்களுடைய பயனுக்காக, உபயோகத்திற்காக விற்கப்படுகிற தேங்காயின் மீது



1990 மே 10] [திரு. எல். கணேசன்]

வரிவிதிப்பு இல்லை. அதைப்போலவே இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். வரிவிலக்குக் அளிக்கப் படுகின்ற அல்லது குறைக்கப்படுகின்ற பொருள்களுக்குக் கூட வரி உயர்த்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். உண்மையைச் சொன்னால், வேளாண்மை விளைபொருள்கள் மீது, அதாவது, மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி, மிளகு, மற்றும் சீயக்காய் கொட்டை ஆகியவற்றின் மீதான வரி விகிதமானது 8 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, சில பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சில பொருள்களுக்கு வரிகுறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. சிலவற்றிற்கு, ஏழையெளியவர்கள் மீது பாதிக்காத அளவில், சற்றே, குறைவாகவே, வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே, ஒட்டு மொத்தமாக நம்முடைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டவைகளை அருள்கூர்ந்து நீங்கள் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:**

*"1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று. சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990–ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஊ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1990

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990–ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதற்கான சட்டமுன்வடிவை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். மனோன்மணியம் சுந்தரனார் அவர்களுடைய பெயரால் தென் மாவட்டங்களிலே இருக்கின்ற கல்லூரிகள், கல்விக்கூடங்கள் இவைகளையெல்லாம் இணைத்து ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்ற இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வ மாக வரவேற்கிறேன். நீராரும் கடலுடுத்த என்கின்ற தமிழ்த் தாய் வாழ்த்தை நமக்கு நல்கி தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டுகின்ற வகையில் மனோன்மணியம் என்கின்ற மாபெரும் காவியத்தை நல்கிய அந்த மாபெரும் கவிஞனுடைய பெயரால் தென் மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை ஏற் கின்ற வகையில் இப்படிப்பட்ட பல்கலைக்கழகத்தை அமைப்பது மிகப் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. என்று நான் கருதுகிறேன். இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுகின்ற வகையில், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவில் ஒருசில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட

*9–5–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.



12-05 மணி

ன்வடிவில். ஏற்கனவே. நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற
கலைக் கழகங்களுக்கெல்லாம் இருக்கின்ற அதே விதத்தில்தான்
டமிடும் குழுவிற்கும், கல்வியிற் சிறந்த எண்மருக்கு மேற் படாத
கள் வேந்தரால் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும்,
சிப் பேரவைக்கு 8 உறுப்பினர்கள் வேந்தரால் நியமனம்
ய்யப்பட வேண்டுமென்றும், ஆட்சிக் குழுவிற்கு 3 உறுப்பினர்கள்
ந்தரால் நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்
டிருக்கிறது. இது புதுமையானதல்ல. ஏற்கெனவே இருக்கின்ற
லாப் பல்கலைக் கழகங்களுக்கும் இப்படிப்பட்ட ஒரு விதிதான்
மைந்திருக்கிறது. ஆனால், வேந்தரைப் பொறுத்தமட்டில்,
தகு ஆளுநர் அவர்களே இங்கு வேந்தராக இருக்கிறார்கள்.
ன் சொல்கிற கருத்து ஏற்கனவே பல்வேறு மாநிலங்களில்
ப்படிப்பட்ட ஆட்சிக் குழுக்கள், ஆட்சிப் பேரவை இப்படிப்
ட்டவைகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற நேரத்தில்,
பந்தர் அவர்கள் நியமனம் செய்கின்ற நிலையில், அரசாங்கத்
ற்கும். நியமனத்திற்கும் இடையே பல முரண்பாடுகள் ஏற்
டிருக்கின்றன. நான் உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன்,
ரளா மாநிலத்தில் ஆட்சிக் குழுவுக்கும் ஆட்சிப் பேர
வக்கும், பல்கலைக் கழகத்திற்கும் நியமனம் நடைபெற்ற
ரத்தில் அங்கே வேந்தர் அவர்கள் நியமித்த முறை சரியல்ல
ன்று அரசாங்கம் ஒரு கருத்தைக் கூறி, இது இந்திய நாடு
ழுவதும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்திய விஷயமாக
டந்த காலத்தில் அமைந்ததை நான் நினைவுகூர்கிறேன்,
கவே ஒரு 'பாபுலர் கவர்ன்மென்ட்'–மக்களால் தேர்ந்தெடுக்
ப்பட்ட ஒரு அரசாங்கம் விரும்புகிற அல்லது பரிந்துரைக்
ன்ற நபர்கள், ஆட்சிமன்றக் குழுவுக்கும், ஆட்சிப் பேரவைக்கும்
தர்ந்தெடுக்கப்படுவது அல்லது நியமிக்கப்படுவது என்பதுதான்
பாருத்தமாக இருக்கும். ஆகவே, என்னுடைய கருத்து என்பது
வந்தர் அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தினுடைய
லோசனைகளுக்குட்பட்டு நியமனம் செய்யவேண்டுமென்று
தியிலேயே ஒரு அமைப்பு இருக்குமேயானால், அப்படிப்பட்ட
டிவு கறாராக அமைவதற்கும், எதிர்காலத்திலே நியமனம்
ம்பந்தமாக அரசாங்கத்திற்கும், வேந்தர்க்கும் இடையிலே
ர்ச்சை ஏற்படாமல் இருப்பதற்கும், ஒரு வாய்ப்பாக அமையும்
ன்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். அதேபோல, இங்கே
ல்வேறு பிரதிநிதிகளை, ஆட்சிப் பேரவைக்கும், ஆட்சிமன்றக்
ழுவுக்கும் தேர்ந்தெடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.
ஆனால், என்ன காரணத்தினாலோ தெரியவில்லை மாணவர்கள்,
திலே சேர்க்கப்படவில்லை. நான் ஏற்கெனவே ஒரு முறை
ந்த மன்றத்திலே வலியுறுத்தி இருக்கிறேன். மாணவர்களுடைய
பிரதிநிதி ஒருவர் அல்லது இருவர், அவர்களால் தேர்ந்தெடுக்கப்
பட்டு, ஆட்சிப் பேரவை, ஆட்சிக் குழு ஆகியவற்றிற்கு
உறப்பினர்களாக ஆகவேண்டுமென்ற வகையில் நாம் சட்டத்
திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று நான் ஏற்கெனவே
கோரி இருக்கிறேன். 18 வயதான இளைஞர்கள் இன்றைக்கு

வாக்குரிமை மூலம் எம். எல். ஏ., எம். பி.-க்களைத் தேர்ந்
தெடுத்து, மத்திய மாநில அரசுகளை உருவாக்குவதிலே
பங்கேற்கிற சூழ்நிலையில், மாணவர்கள் தங்களுடைய கல்விப்
பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற பல்கலைக் கழகத்திற்கு
ஆட்சிக் குழுவுக்கும், ஆட்சிப் பேரவைக்கும் தங்களுடைய பிரதி
நிதிகளைத் தேர்ந்தெடுப்பதிலே இருக்கிற நியாயத்தை மறுப்
பதிலே என்ன காரணம் இருக்கிறது என்பதுதான் எனக்குப்
புரியவில்லை. இதனால் எல்லாம் ஒரு பெரிய தவறு நடந்து
விடும் என்று நான் நினைக்கவில்லை. கேரள மாநிலத்தில்,
மாணவர்கள் சிண்டிகேட்டுக்கும், செனட்டுக்கும் தங்களுடைய
பிரதிநிதிகளை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே
18 வயதான இளைஞர்களுக்கு வாக்குரிமை நல்கி இருக்கிற
இந்தக் காலகட்டத்தில் தமிழகத்திலேயும், இந்த ஆட்சிக்காலத்தில்
குறிப்பாக, இளைஞர்களை ஊக்குவிப்பதிலே அக்கறை கொண்
டிருக்கிற இந்த ஆட்சிக் காலத்தில், மாணவர்களுடைய பிரதி
நிதிகளை, ஆட்சி மன்றப் பேரவையிலும், ஆட்சிக் குழுவிலும்
இடம் பெறுகின்ற வகையிலே ஒரு மாற்றத்தை உருவாக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இங்கே ஆசிரியர்களுக்குப் பிரதிநிதி இல்லை;
வழக்குரைஞர்களுக்கு, இப்படிப்பட்ட பல்வேறு தரப்பட்ட பிரதி
நிதிகளுக்கெல்லாம் அங்கே வாய்ப்பு இருக்கிறது. தனியார் கல்லூரி
நிறுவனங்களுடைய பிரதிநிதிக்குக்கூட இவைகளில் பிரதி
நிதித்துவம் இருக்கிறது. ஆனால், ஆசிரியர்கள் அல்லாத பணி
புரியக்கூடியவர்கள், பல்கலைக் கழகத்திலே, கல்லூரியிலே பணி
செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பிரதி
நிதிகளுக்கும் இந்த ஆட்சி மன்றப் பேரவையிலும், ஆட்சிக்
குழுவிலும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், பல்வேறு வணிகர்கள்
உட்பட பல்வேறு பிரிவினர்களுக்குக் கொடுக்கப்படுகிறபோது,
தொழிலாளர்களும் தங்களுடைய பிரதிநிதிகளை ஆட்சிக் குழு
விற்கு அல்லது ஆட்சிப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கின்ற வகை
யிலே ஒரு வாய்ப்புத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,
கடைசியாக, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.
இன்றைக்குப் பல்கலைக் கழகங்கள் என்பது, தன்னாட்சி பெற்ற
அமைப்பாக இருந்தாலும் கூட, மாண்புமிகு கல்வியமைச்சர்
அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்—தன்னாட்சி பெற்ற எந்த
அமைப்பிலேயும் அரசாங்கம் தலையிட முடியாது என்று அடிக்
கடி ஆணித்தரமாகச் சொன்னார்கள்;

**12-10 மணி**

இருந்தாலும் கூட இந்த அவையிலே, பல்வேறு தவறுகள்,
முறைகேடுகள் சில பல்கலைக் கழகங்களிலே ஏற்பட்டன
என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. சென்னைப்
பல்கலைக் கழகத்திலே நடந்த தவறுகள் குறித்து அரசு



விசாரணை நடத்திக் கொண்டிருப்பதாக இந்த அவையில் அறிவிக்கப்பட்டது, ஆகவே அப்படிப்பட்ட தவறுகள் அந்தத் தன்னாட்சி பெற்ற அமைப்புகளில் நடக்காமல் இருப்பதை உத்தரவாதம் செய்வதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மதுரைப் பல்கலைக் கழகத்திலே பரீட்சை எழுதிய பல மாணவர்களுக்கு மார்க்ஷீட் கிடைப்பதில் கூட தவறுகள் இருக்கின்றன. மார்க்ஷீட்டே வரவில்லை. எனக்குத்தெரிந்த ஒரு மாணவன் பரீட்சை எழுதி 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் இதுவரையில் மார்க் ஷீட் வரவில்லை. நான் கூட நேரடியாகச் சென்று முறையிட்டும் எந்தப் பதிலும் வரவில்லை. ஆகவே இப்படி பரீட்சை எழுதிவிட்டு என்ன ஆயிற்று என்ற கவலையோடு 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் என்று இருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது, இவற்றை எல்லாம் சரிப்படுத்துவதற்கு, தன்னாட்சி பெற்ற அமைப்பாக பல்கலைக் கழகங்கள் இருந்தாலும் கூட அவைகள் முறையாக நடக்கிற வகையில், அரசாங்கம் ஆலோசனைகள் தருகிற வகையில் தலையிட்டு அவர்களுடைய செயல்பாடுகளைத் திருத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு இந்த அரசினுடைய சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தை நெல்லையில் அமைப்பதற்கு நமது கல்வியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற கோரிக்கையினை நான் முதலிலே வரவேற்கிறேன். முன்பு புரட்சித்தலைவர் எம்,ஜி.ஆர். அவர்கள் திருநெல்வேலியில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்கவேண்டும் என்று நினைத்து இருந்தார். அந்தக் காலகட்டத்தில் அது முடியாமல் போயிற்று. இருந்தாலும் நெல்லையிலே நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒரு பல்கலைக் கழகத்தைத் துவக்கி இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் முதலிலே அவருடைய பாடலுடன் துவங்குவதால் அவர் பெயரில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது. அன்புக்குரிய சகோதரர் திரு. செ. நூர்முகம்மது அவர்கள் சொன்னது போல் தமிழகத்தில் உள்ள வேறு பல பல்கலைக் கழகங்களில் தவறுகள் நடப்பதைப் போன்று தவறுகள் நடக்காமல் நல்லதொரு பல்கலைக் கழகமாக இது இயங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புரட்சித் தலைவர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக் கழகம் ஒன்றைத் துவக்கி இருந்தார்கள். அதை இப்போது

மாற்றி சென்னைக்குக் கொண்டுவருவோம் என்று இந்த அரசு அறிவித்து இருக்கிறது. இப்படி பல்கலைக் கழகங்கள் ஏற் பட்டிருக்கிற இடத்தை எல்லாம் மாற்றி மாற்றி அமைத்தால் பல குழப்பங்கள் ஏற்படும் என்பதை அரசுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் பல்கலைக் கழகத்தை அங்கே நல்லதொரு வகையில் துவக்கி நல்ல நிலைமைக்கு அது வர வேண்டும் என்று சொல்லி இதனை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை வரவேற்று அதிலே ஒருசில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக எல்லாப் பல்கலைக் கழகங்களும் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறதோ அதே முறையைத்தான் இதிலும் பின்பற்றி இருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழகத்திலே சென்னையிலே சென்னை பல்கலைக் கழகம் மட்டும் இருந்தது. அது பெருமைப்படக்கூடிய அளவுக்கு இருந்தது இந்திய நாட்டிலே மட்டும் அல்ல. வெளி நாட்டிலேயும் சென்னை பல்கலைக் கழகத்திலே படித்த மாணவர்களுக்கு நல்ல மதிப்பு இருந்ததை எல்லோரும் அறிவோம். ஆனால் இன்றைய தினம் தமிழகத்தில் பல பல்கலைக் கழகங்கள் குறிப்பாக இரண்டு மாவட்டம், 3 மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒரு பல்கலைக் கழகம் என்ற அளவில் பரவலாக இன்றைக்கு வந்திருக்கின்றன. ஒரு பல்கலைக் கழகத்திற்கு இன்னொரு பல்கலைக் கழகம் போட்டியாக நல்ல அளவிலே திறமையாகச் செயல்பட்டு அந்த வட்டாரத்திலே அது பெருமைப்படக்கூடிய அளவிலே இருக்கிறதா என்றால் சென்னை பல்கலைக் கழகத்திலே இருக்கிற அந்த மதிப்பும் மரியாதையும் மற்ற பல்கலைக் கழகங்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை. அதற்காக அவர்கள் முயற்சித்ததாகவும் தெரியவில்லை. புதிய பட்டப்படிப்புகள் துவங்கப்பட்டு ஆராய்ச் சிகள் செய்யப்பட்டு மற்ற பல்கலைக் கழகத்திலே இல்லாத அளவுக்குச் சிறப்பாக இந்தப் பணி நடக்கிறது. பட்டப்படிப்புகள் துவங்கப்பட்டிருக்கிறது என்ற சிறப்பை எய்தி இருக்கிறார்கள் என்று பாராட்டுகிற அளவுக்கு அமைய வேண்டும் என்பதை அமைச்சரவர்களிடத்திலே வலியுறுத்தி புதிதாக அமைய இருக்கிற இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அந்த வகையான ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

12.15 மணி

அந்தப் பல்கலைக் கழகத்தில் எவ்வாறெல்லாம் தேர்ந்தெடுக் கப்படவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் ஆட்சிமன்றக் குழுவுக்கோ அல்லது செனட்டுக்கோ அல்லது சின்டிகேட்டுக்கோ எந்த வகையில் ஏற்கெனவே தேர்ந்தெடுத்திருக்கிறார்களோ அந்த அளவைத்தான் இதிலேயும் வைத்திருக்கிறார்கள்.



இப்போது எனக்கு முன்னதாகப் பேசிய திரு. நூர்முகம்மது அவர்கள் சொன்னதைப் போல, இன்றையதினம் கல்லூரிகளிலே, பல்கலைக் கழகங்களிலே பயிலுகின்ற மாணவர் களுக்கு, பிரதிநிதிகளாக அரசாங்கமோ அல்லது துணை வேந்தரோ ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம். பெண்களுக்கு என்று பிரதிநிதித்துவம் யாரும் இல்லை. எஸ்.சி., எஸ்.டி. போன்றவர் களுக்குக் கூட இருக்கிறது. பெண்களுக்கு ஒரு நாமினேட் செய்வதற்கு 2 பேரையோ அல்லது குறைந்தபட்சம் ஒருவரையோ ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் அங்கேயிருக்கிற துணை வேந்தரோ அல்லது அரசாங்கமோ தங்கள் கோட்டாவில் தேர்வு செய்ய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு விளையாட்டுப் போட்டிகளில், மற்ற மாநிலங்களோடு போட்டி போடுகின்ற சிறந்த விளையாட்டு வீரர்களை, இப்படி இரண்டு மூன்று மாவட்டங்களைக் கொண் டிருக்கிற பல்கலைக் கழகங்களின் செனட்டில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும், குறிப்பாக எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும் இன்றையதினம் அஞ்சல் வழிக் கல்வி முறையில் (கரஸ்பாண்டென்ஸ் கோர்ஸ்) அதிகமாக கவனம் காட்டுகிறார்கள். அதில் வேலையும் குறைவு, அதிகமான வருவாயும் வருகிறது. அந்த நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. அப்படியே போனால் அது டுடோரியல் காலேஜ் மாதிரி இருக்கிறது. இப்போதெல்லாம் எங்கு பார்த்தாலும் கம்ப்யூட்டர் பயிற்சி வந்துவிட்டது. ஆகவே அஞ்சல்வழிக் கல்விக்கு அவசியமே இல்லை. அப்படியிருக்கும்போது, இதில் அதிக அக்கறை காட்டுகிற பல்கலைக்கழகங்களை நீங்கள் ஊக்குவிக்கக் கூடாது என்று சொல்லி, இன்றையதினம் புதியதாக ஒரு பல்கலைக்கழகம் உருவாவதை வரவேற்கிறேன். தமிழுக்காகப் பாடுபட்ட ஒருவர் பெயரால் இந்தப் பல்கலைக்கழகம் உருவாகிறது. தமிழ் என்று சொன்னால் நெல்லை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களின் தமிழ் சிறந்த தமிழ் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட மாவட்டத்தில் தோன்றிய ஒரு பெரிய தமிழ் அறிஞரின் பெயரால் இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்குகின்ற மாண்புமிகு முதல்வர், கல்வி அமைச்சர் போன்றவர்களைப் பாராட்டி, எதிர் காலத்தில் இந்தப் பல்கலைக் கழகம் வளர புதிய படிப்புத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களான திருநெல்வேலி—கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளின் பணி சிறப்பதற் கேற்ற வகையிலேயும், ஆய்வு மையம் வளரத் தக்க வகையிலேயும் ஒரு பல்கலைக்கழகம் அந்தப் பகுதியில் உருவாகவேண்டுமென்று சில ஆண்டுகளாக இருந்து வந்த அந்த வேண்டுகோள், இந்தச் சட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றது.

[டாக்டர் க. அன்பழகன்] [1990 மே 10

மனோன்மணியம் சுந்தரனார் பெயரை அந்தப் பல்கலைக்
கழகத்திற்கு வைப்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்
றார்கள், பாராட்டினார்கள். ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு
முன்னர், மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள், மிகப் பெரிய
அளவுக்குப் பலராலும் அறிஞராகப் பாராட்டப்பட்டு, தத்துவத்
துறையிலேயும் தலைசிறந்து விளங்கி, தமிழ் ஆராய்ச்சியிலேயும்
சிறந்த பல கருத்துகளை நாட்டுக்கு வழங்கியவர்கள்.
தமிழ் மொழியினுடைய தனி உயர்வைத் தமிழர்கள் எல்லாம்
உணர்கின்ற அளவுக்கு, தமிழின் தனிச் சிறப்பை, தமிழ்த்தாய்
வாழ்த்தாகப் பாடியவர்கள். இன்று தமிழக அரசு அந்த உயர்ந்த,
சிறப்பான தமிழ்த்தாய் வாழ்த்தை வழங்கிய மனோன்மணியம்
சுந்தரனார் அவர்களுக்குச் செலுத்துகிற நன்றிக் கடனாக, போற்று
தல் உணர்ச்சியாக, அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அந்தப் பெயரை
வைத்திருக்கிறோம்.

12.20 மணி

ஒரு 25, 30 ஆண்டுகளுக்கு முன்னர், பல்கலைக் கழகம் என்று
சொன்னால், சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரும், அடுத்து
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பெயரும், தனிப்பட்ட
முறையில் சட்டப்படி உருவாக்கப்பட்ட அந்தப் பல்கலைக்
கழகங்கள் தவிர வேறு பல்கலைக்
தேவை என்ற உணர்வுகூட இல்லாத கழகங்கள்
ஆனால் எந்தப் பல்கலைக் கழகமாக நிலை இருந்தது.
80 கல்லூரிகளை இணைத்து இருந்தாலும், 60 அல்லது
பல்கலைக்கழகம் சிறப்பான நடத்துகிறபோதுதான், அந்தப்
கல்லூரிகளின் தரத்தை முறையில், நிர்வாக முறையில்,
கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், மாணவர்களுடைய
கருத்து அண்மைக்காலத்தில் உயர்த்துவதற்கும் பயன்படுகிறது என்ற
பட்டு வந்திருக்கிறது. அந்த மிக அதிகமாக வலியுறுத்தப்
பல்கலைக்கழகம், தென் முறையிலே, மதுரை காமராஜ்
ஓரே பல்கலைக்கழகமாக மாவட்டங்களுக்கெல்லாம் சேர்த்து
கல்லூரிகளை இணைத்துக் இயங்கிய நிலையில், அதிகமான
நிலை ஏற்கெனவே கொண்டு செயலாற்ற வேண்டிய ஒரு
வருவதன் மூலமாக இருந்தது, இந்தப் பல்கலைக் கழகம்
பயிற்சிக் கல்லூரிகள், ஏறத்தாழ 39 கல்லூரிகள், 5 ஆசிரியர்
47 கல்லூரிகள் பொறியியல் சார்ந்த 3 கல்லூரிகள்—ஆக
கலைக் கழகத்திலே இப்போது மனோன்மணியம் சுந்தரனார் பல்
கின்றன. மதுரை இணைக்கப்படுகிற அந்த வாய்ப்பைப் பெறு
மிருக்கிற 61 காமராஜர் பல்கலைக் கழகத்தோடு மிச்ச
போதுள்ள நிலையில் கல்லூரிகள் இணைப்புடையதாகத் தொடர்ந்து இப்
இந்தக் கல்லூரிகளால், தொடர்ந்து நீடிக்க இருக்கின்றன. எனவே
னேற்றம் தரமான மாணவர்கட்கு ஏற்பட வேண்டிய முன்
கழகம் உருவாவது முன்னேற்றமாக அமைவதற்கு இந்தப் பல்கலை
இந்த ஆண்டில் சிறந்த வாய்ப்பு என்ற முறையில் இது
ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமாக்கப்படுகிறது.



1990 மே 10] [டாக்டர் க. அன்பழகன்]

பல்கலைக் கழகங்களைப் பற்றிக் குறிப்பிடுகிற போது,
அன்னை தெரசா பல்கலைக் கழகத்தைப் பற்றி மாண்புமிகு
உறுப்பினர் ஒருவர் தெரிவித்து, அது இடம் மாற்றப்படுவது
போல. பல்கலைக் கழகங்கள் இடம் மாற்றப்படக் கூடாதென்ற
கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தப் பல்கலைக் கழகம் இட
மாற்றத்திற்கு ஆளாகாது. இது ரீஜினல் என்ற முறையில் அமை
கிற பல்கலைக் கழகமாகும். மதுரை காமராஜர், பாரதியார்,
பாரதிதாசன், மனோன்மணியம் சுந்தரனார் போன்ற பல்கலைக்
கழகங்கள் வட்டார அடிப்படையிலே உருவானவை. வேறு சில
பல்கலைக் கழகங்கள்——காந்திகிராமம் பல்கலைக் கழகம்,
மத்திய அரசு மூலமாக, அவர்கள் ஆதரவிலே உருவாக்கப்பட்ட
பல்கலைக் கழகம், அது அந்த இடத்திற்கு உரியதாகவே 40 ,50
ஆண்டுக்காலமாக உருவாகி, வளர்ந்து பல்கலைக் கழகத்
தகுதியைப் பெற்றிருக்கிறது. அவினாசிலிங்கம் மனையியல்
கல்லூரி, 'டீம்டு யூனிவர்சிட்டி' என்ற முறையில், ஏற்றுக்கொள்ளப்
பட்டிருக்கிறது. அது அந்த இடத்திலேயே வளர்ந்த மரம். அன்னை
தெரசா பல்கலைக் கழகம் கொடைக்கானலிலே கொண்டு போய்
நடப்பட்ட மரக்கன்று. அந்தத் தட்ப வெப்ப நிலைமை அந்த
மரக்கன்று வளர்வதற்கு ஏற்றதாக இல்லை. மற்றும் ஒன்று, அது
அஃபிலியேட்டிவ் யூனிவர்சிட்டி என்ற முறையிலே வருவது
அல்ல, அது அந்த இடத்திலே இருந்து மாற்றப்படுகிற
காரணத்தாலே யாருக்கும் எந்த விதமான பாதிப்பும்
அல்லது நிர்வாக முறையிலே பெரிய தடுமாற்றமும் ஏற்
படுத்துவதற்கான எந்தக் காரணமும் இல்லை.
அன்றையதினம் நான் பேசுகிற போது, கேள்விக்கு விடை அளிக்கும்
போது சொன்னதைப்போல ஒரு தனித் தன்மை வாய்ந்த
பல்கலைக் கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம். அதற்கு
ஒரு பெரிய சுற்றுச் சார்பு தேவைப்படுகிறது. அந்தச் சுற்றுச்
சார்பு சென்னை போன்ற பெரிய நகரத்தில்
கிடைக்கிற அளவுக்கு, அதற்கு அடுத்த நிலையில் உள்ள நகரங்
களிலேகூடக் கிடைக்கவில்லை. மகளிர் முன்னேற்றத்தை அடிப்
படையாக வைத்து, அதற்கான வழிமுறைகளில் பல ஆய்வுகளை
நடத்துவதற்கு ஏற்ற இடம் என்ற முறையிலேதான் அந்தப்
பல்கலைக் கழகம் கொடைக்கானலில் வேர்விடாத நிலையில்
சென்னைக்குக் கொண்டுவரப்படுகிறது. இன்னும் சொல்லப்
போனால் அங்கே வேர் ஊன்றி விட்டது என்று சொல்லத்தக்க
நிலையே ஏற்படாமல், தடுமாறிக் கொண்டிருந்த
நிலையில், வளர்ச்சி குன்றிய நிலையில், வளர
முடியுமா என்ற ஐயம் ஏற்பட்ட நிலையில், அதனுடைய
பயன் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டும், இந்தியாவிற்கே
கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அது சென்னை நகரத்
திற்குக் கொண்டு வரப்படுகிறது. ஏனென்றால் இந்தியாவிலேயே
அப்படிப்பட்ட பல்கலைக் கழகம் வேறு இருப்பதாக எனக்குத்
தெரியவில்லை.

மற்றும் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் இப்போதுள்ள பல்கலைக் கழகங்களிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி, குறைகள் ஏற்படாமல் இந்த நிர்வாகத்தை உத்தரவாதம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது என்னால் முடியாத காரியம். ஆனால் குறை ஏற்படாது என்பது பொதுவாக நான் தெரிவிக்க விரும்புகிற கருத்து. பல்கலைக்கழக நிர்வாகங்கள் எல்லாம் குறைபாடு உடையன என்று கருத முடியாது. ஆனால் கருத்து வேறுபாடு உருவாகாத பல்கலைக் கழகமே இருக்க முடியாது. அந்தக் காலத்திலே தந்தை பெரியார் அவர்கள், 4 புலவர்கள் சேர்ந்தால், அவர்களிடையே தகராறு ஏற்படாமல் இருக்க ஒரு காவல் நிலையத்தை வைக்க வேண்டுமென்று சொல்வார்கள். இது புலவர்களுக்குச் சொன்னது மட்டுமல்ல, படித்த வர்களுக்கும் சொன்னது. படித்தவர்கள் 10 பேர் ஒன்று சேர்ந்தால் ஒவ்வொரு கருத்தையும் அவரவர்கள் நோக்கத்தில் வலியுறுத்தத் தொடங்குகிறபோது, கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்யும். அதே நேரத்தில் சில விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் பல்கலைக் கழகம் இயங்க வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கு ஆட்சிக் குழு இருக்கிறது, அதற்குப் பேரவை இருக்கிறது. அதிலே கல்லூரி ஆசிரியர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குப் பல்கலைக் கழகத்தைக் கண்காணிப்பதற்கான எல்லா உரிமையும் இருக்கிறது. அவ்வளவு தகுதி உடையவர்கள் இடம் பெறக்கூடிய ஆட்சிக் குழு, பேரவை இவைகளிலே இருக்கிறவர்கள் கண்காணிப்பார்கள் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அதிலேயும் திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றி, தெற்கே உள்ள மாவட்டங்களைப் பற்றிப் பொதுவான ஒரு கருத்தைச் சொன்னார்கள். நல்ல தமிழ் வளருகிற பகுதி என்று சொன்னார்கள். அது நெல்லைத் தமிழ், நாஞ்சில் தமிழ் என்றெல்லாம் பாராட்டப்படும். தென்பாண்டித் தமிழ் என்று பொதுவாகக் குறிப்பிடுவார்கள். மேலும் அங்குள்ளவர்கள் எல்லாம் சற்று கூர்ந்த நுண்ணறிவாளர்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அது உண்மையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆகவே இந்தப் பல்கலைக் கழகம், மற்றவர்கள் எல்லாம் பார்த்து சிறப்பாக நடக்கிறது என்று சொல்லத்தக்க அளவுக்கு அங்கேயுள்ள அதனுடைய பிரதிநிதிகள் அந்தப்பல்கலைக் கழகம் சீராக இயங்க உதவுவார்கள்; நேர்மையாக முறைகேடுகட்கு இடம் தராமல் எல்லா வகையிலேயும் பாராட்டத்தக்க வகையில் நடைபெற உதவுவார்கள்; வழி செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**12.25 மணி**

மற்றொன்று, இந்தப் பல்கலைக் கழகத்தில் சில குழுக்களுக்கு, ஆளுநர் இந்தப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக ஆகிற அந்தத் தகுதி அடிப்படையில் as "Chancellor of the University" அந்த தகுதி அடிப்படையில் சில பேரை நியமனம் செய்கிறார்கள்.



'Nominatiou of Members for different bodies". அப்படிச் செய்கிறபோது வேந்தர் நியமனத்துக்கும் அரசாங்கத்தினுடைய கருத்துக்கும் மாறுபாடு ஏற்படுவது உண்டு. அப்படி ஏற்பட்டுவிடக் கூடாது; அப்படி ஏற்பட இடம் இல்லாமல் அரசாங்கத்தினுடைய விருப்பத்தைத்தான் வேந்தர் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு கருத்து இங்கே வற்புறுத்தப்பட்டது. இன்று வரையில் நடைமுறையில் வேந்தருக்கு ஒரு பட்டியல் துணை வேந்தரால் அனுப்பப்பட்டு, அந்தப் பட்டியலைக் கூட அவர் அமைச்சருக்கு அனுப்பி அதிலே வேந்தராக ஆளுநரும் இணைவேந்தராகக் கல்விஅமைச்சரும் துணை வேந்தராக நியமிக்கப்படுகிற ஒரு தகுதி வாய்ந்த கல்வியாளரும் விளங்குகிற காரணத்தால் அதை அனுப்பி, ஒரு ஆலோசனையை பெற்று, அந்த ஆலோசனையில் ஏதேனும் கருத்து வேறுபாடு இருக்குமானால் அமைச்சருக்குத் தெரிவித்து, 'இந்த முறையில் நான் நிறைவேற்றலாம் என்று கருதுகிறேன்' என்று தெரிவித்து, அவர்களை நாமிநேஷன் செய்கிற, நியமனம் செய்கிற ஒரு முறை இருக்கிறது. அந்த முறை நீடிக்கும் என்று எதிர்பார்க்கிறேன். ஆளுநர் இருக்கக் கூடாது என்ற ஒரு கருத்து இங்கே பேசப்பட்டது. அது கவர்னரே இருக்கலாமா, கூடாதா என்ற கருத்துக்கு உட்பட்டது தான். எனவே அந்தக் கருத்துக்கள் ஒரு வகையில் இணைந்து எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என்று கருதுகிறேன். கவர்னரே தேவை இல்லை என்றால் 'சான்சலர்' என்ற இடத்தில் அவர் இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் கவர்னர் இருக்கிறபோது கல்வி நிலையங்கள் தன்னாட்சி அமைப்பாக விளங்க வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு இருப்பதற்காகப் பொது நிலையிலே இருப்பதாகக் கருதப்படுகிற ஆளுநர் அதிலே சான்சலராக இருப்பது வேந்தராக இருப்பது ஒரு இயல்பான தோற்றம் தருகிறது என்ற காரணத்தால் அதிலே நான் அதிகம் மாறுபட விரும்பவில்லை. இப்போது அரசாங்கம் எந்த அளவுக்கு இவைகளைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்குக் கலந்து ஆலோசிக்கப்படுவதான நிலைமை இன்றைக்கு நீடிக்கிறது. அந்த நிலைமை தொடரும் என்று எதிர்பார்க்கிறேன். எதிர்காலத்தில் தேவையானால் இந்த எண்ணங்களின் அடிப்படையில் மாற்றங்கள் செய்யக் கூடுமானால், செய்ய முடியுமானால் அப்போது ஆலோசிக்கப்படும்.

மற்றொன்று, மாணவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் நேரடியாகத் தேர்ந்தெடுத்த பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து. அதுவும் வேறு சில மாநிலங்களில் ஒன்றிரண்டு மாநிலங்களில் செயல்படுத்திய காரணத்தால் இங்கேயும் செயல் படுத்த வேண்டுமென்று தெரிவித்தார்கள். அது மிகுந்த ஆழ்ந்த பரிசீலனைக்கு உரியதாக இருக்கிறது. ஏனென்றால் இந்தப் புதிய பல்கலைக் கழகத்திலே இப்போது உள்ள கல்லூரிகளில் பயிலுகிற மாணவர்களுடைய எண்ணிக்கை 32,844. அத்தனை மாணவர்களுக்கும் உரிமை தந்து விட்டால் அத்தனை பேரும் வாக்களிக்கக் கடமைப்பட்டவர்களாக ஆகிறார்கள். ஒரு 35 ஆயிரம் மாணவர்கள் வாக்களிப்பது என்ற ஒரு தனித்

[டாக்டர் க. அன்பழகன்] [1990 மே 10

தன்மையோடு ஒரு தேர்தல் நடைபெறுமானால்—நடைபெற
வேண்டிய நிலைமை ஏற்படும்; அப்படி ஏற்படுமானால் மாண
வர்கள் இளைஞர்களாக இருக்கின்ற காரணத்தால் அரசியலிலி
ருந்து முழுமையாக அப்பாற்பட்டவர்களாக இருக்க முடியாத
காரணத்தால் யார் யாரோ தலையிடுகிற வாய்ப்பு அமையும்
என்ற காரணத்தால் தேர்தல் என்பது ஒரு அரசியல் தேர்தலைப்
போல ஆகிவிடக் கூடும். அதனுடைய விளைவு பல்கலைக் கழகத்
திலே பிரதிபலிக்கும். ஆனால் அதற்கு மாறாக இந்தப் பல்கலைக்
கழக வட்டாரத்திலே உள்ள கல்லூரிகளில் ஏற்கெனவே பயின்று
பட்டம் பெற்றவர்கள் கிராஜுவேட்ஸ்—அவர்கள் பல்கலைக் கழகத்
தினுடைய பட்டம் பெற்ற மாணவர்கள் என்ற முறையிலே
அவர்கள் வாக்களித்து அவர்கள் பிரதிநிதியாக ஒருவரைத் தேர்ந்
தெடுக்கிற வாய்ப்பு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வழங்கப்பட்டு
அந்தமூன்று மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுஇருக்கிறது. எனவே
அப்படி வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால், படித்துபட்டம்பெற்ற
மாணவர்கள் அந்தந்தக் கல்லூரியிலே ஆர்வம் உடையவர்கள்,
பல்கலைக் கழகத்தினுடைய முன்னேற்றத்திலே அக்கறை உடைய
வர்கள், அவர்களிலே ஒரு பிரதிநிதி வர முடியும் என்று சொல்
கிறபொழுது, படிக்கிற மாணவர்களா, படித்த மாணவர்களா
என்பதுதான் அதிலே பெரிய வேறுபாடே தவிர, மாணவர்களு
டைய உரிமை அதனால் காப்பாற்றப்பட வாய்ப்பிருக்கிறது;
தனியாக மாணவர்களேதான் தேர்தலுக்கு நின்று தெரிந்
தெடுத்து வர வேண்டுமென்று கட்டாயமாகக் கருதிடக் காரணம்
இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

12-30 மணி

பொதுவாகவே, இந்தப் பல்கலைக் கழகத்துக்கான இந்தச்
சட்டம் வருகிறபோது மிக அண்மைக் காலத்திலே கொண்டுவரப்
பட்ட சட்டத்தைப் பின்பற்றி பாரதியார் பல்கலைக் கழகம்;
பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவை போல அதே வகை
யில் அமைந்த பல்கலைக் கழகம் இது என்ற காரணத்தால், இந்தப்
பல்கலைக் கழகத்திற்கும் அந்தச் சட்டத்தை அடியொற்றி அதே
முறையில் சட்டம் உருவாக்கப்பட்டு இந்த அவைக்குத் தரப்பட்
டிருக்கிறது.

எனவே, இதிலே அதிக மாற்றமில்லை. எதிர்காலத்தில் ஏதே
னும் சில மாற்றங்களை நிறைவேற்ற வேண்டுமானால் அது
தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும்
சேர்த்துச் செய்யப்பட வேண்டியதாக அமையும். அதுபற்றித்
தக்க காலத்திலேதான் ஆய்வு நடத்த முடியும் என்பதைக் கூறி,
இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று
மாண்புமிகு பேரவை உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை
முன்னுள்ள கேள்வி :



1990 மே 10]

''1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 64 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

143984
600 008.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திர மாநிலத்திற்கு உதவியளித்தல்

***திரு. உ.ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழ் நாட்டைத் தாக்க வந்த புயல், மலைபோல வந்த அபாயம் பனி போல நீங்கியதைப்போல நீங்கியிருக்கிறது, மழையாலே சில சேதங்கள் ஏற்பட்டாலும்கூட, ஆனால், நம்முடைய எல்லையைக் கடந்த அந்த புயல் அண்டை மாநிலமான ஆந்திராவிலே கரை கடந்து மிகப் பெரிய சேதங்களையும், உயிரிழப்புகளையும் உண்டாக்கி இருக்கிறது என்பதைப் படிக்க நாமெல்லாம்மிகுந்த வேதனைப் படுகிறோம். அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலே அப்படித் துயருறுகிற மக்களுக்குத் தமிழ் நாட்டினுடைய சகோதர வாஞ்சையையும், நல்லெண்ணத்தையும் தெரிவிக்கக்

கூடிய முறையிலே தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அவர்களுடைய துயர்துடைப்புக்கு, நிவாரணத்திற்கு நிதி வழங்குகின்ற நல்ல அறிவிப்பைச் செய்து உதவ வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எப்பொழுதும் வேறு மாநிலங்களில் மாத்திரமல்ல வேறு நாடுகளில் ஏற்படுகின்ற இதுபோன்ற மனித சமுதாயத்திற்குப் பாதகமான நிகழ்ச்சிகளிலே கூட இந்த அரசும் அல்லது இந்த அரசை நடத்துகின்ற ஆளுங்கட்சியும் எந்த அளவிற்கு துணை நின்று இருக்கின்றன என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே ஆந்திரத்திலே ஏற்பட்டுள்ள இந்த வேதனையான சூழ்நிலையை மனதிற்கொண்டு, நம்மால், நாம் அனுப்புகின்ற நிதி போதுமானது என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட, நம்முடைய உணர்வைக் காட்டுகின்ற வகையில் ஆந்திர அரசுக்கு முதல்வர் நிதியிலேயிருந்து இருபத்தைந்து இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

**(உ) பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவு 1990.**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990—ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.31/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

**திரு. எம். அப்துல் லத்திப் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் கொள்கை அளவில் ஆதரிக்கிறேன். பொதுவாக, இன்றைக்கு விவசாயிகள் பரவலாக இன்னல்கள் தீர்ந்து

---

* 9-5-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.





12-35 மணி

இன்ப வாழ்க்கை பெறவேண்டுமென்றுச் சொன்னால், உழுகின்ற
நிலம் தனக்குச் சொந்தம் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட
வேண்டியது அவசியம். எனவே, இந்த மசோதாவினுடைய
நோக்கம் ஏற்புடையதாகும், வரவேற்கப்படக் கூடிய ஒன்றாகும்.
ஆனால், அதேநேரத்தில் ஒட்டுமொத்தமாக சமுதாயத்தில்
இருக்கிற சில பிரிவினர்களை எல்லாம் உள்ளடக்கி, எல்லோருக்கும்
இந்த சட்டம் பொருந்தும் என்று சொன்னால் அதனுடைய
அடிப்படை நோக்கத்தில் ஊனம் ஏற்படும் என்று நான்
கருதுகிறேன்.

பொதுவாக கடந்த காலத்தில் நம்முடைய நாட்டில் அறங்கள்
தழைக்க வேண்டும், தர்ம காரியங்கள் தடையின்றி நடை
பெற வேண்டும் என்பதற்காக அவரவர்கள் ஏற்றுக்கொண்டு
இருக்கிற கொள்கையின்படி, அவர்கள் பெற்றிருக்கிற உணர்வின்
அடிப்படையில், எதனை அவர்கள் தர்மங்கள் என்று கருதினார்
களோ அந்த தர்ம காரியங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும்
என்பதற்காக நிலங்களை தானமாக வழங்கி விட்டுச் சென்று
இருக்கிறார்கள். கோயில்களில் ஆறுகால பூஜைகள் நடைபெற
வேண்டும். ஆகம விதிகளின் படி அந்த கோயில்களில் நித்திய
காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தில், நிலங்களை
அந்த காலத்தில் தர்ம சிந்தனை உடையவர்களும் மன்னர்களும்
கூட வழங்கி விட்டுப் போய் இருக்கிறார்கள். அந்த நிலங்களை
ஒட்டுமொத்தமாக அதிலே பயிரிடக்கூடியவர்கள் தங்களுக்குச்
சொந்தமாகக் கருதுவதும், அதேநேரத்தில் அதற்கு கொடுக்க
வேண்டிய குத்தகைகளை—கோயில்களுக்கு, வக்ஃப் சொத்துக்கள்
என்று சொல்லக்கூடிய மசூதிகள், தர்காக்கள் இவைகளுக்கு
எல்லாம் சொந்தமாக இருக்கிற அந்த நிலங்களுக்குரிய குத்தகை
களையும் அவர்கள் கொடுக்க மறுப்பதும், அதனால் இன்றைக்கு
பல கோயில்கள் தங்களுடைய வழிமுறைப்படி, நெறிமுறைப்படி
பூஜைகளை நடத்துவதும், கோயில் நிர்வாகத்தை நடத்துவதும்
நித்திய காரியங்களை அவர்கள் நிறைவோடு செய்வதும் ஆறு
கால பூஜைகளை ஆகம விதிகளின்படி நடத்துவதும் யலாமல்
போன காரணத்தால், பல கோயில்கள் வெறிச்சோடிக்
கிடக்கின்றன.

அதைப்போலத்தான், மசூதிகள். அந்த மசூதிகளுக்குரிய ஒரே
வருமான ஊற்றுக்கண்ணாக இந்த நிலங்கள் தான் என்று இருக்கும்
போது அந்த நிலத்தை நம்பி அவர்கள் மசூதி நிர்வாகத்தை
நடத்தக் கூடியவர்கள், தர்காக்களை நடத்தக் கூடியவர்கள்
அநாதை இல்லங்களை நடத்தக்கூடியவர்கள் இவர்கள் எல்லாம்
முழுமையாக இந்தச் சட்டத்திற்கு உட்படுத்தப்படுவார்
களேயானால் அந்த தர்ம நிறுவனங்கள் எல்லாம் பாதிக்கப்படும்.
எனவே, இந்த அறக்கட்டளைகளை இதிலேயிருந்து விடுவித்து,

அந்த அறக்கட்டளைகள் எல்லாம் செம்மையாக நடைபெறு வதற்கு இந்த சட்டத்திலிருந்து அவைகளை எல்லாம் விடுவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12-40 மணி

குறிப்பாக இன்றைக்கு கோயில் நிலங்கள், மசூதி நிலங்கள் இவைகள் எல்லாம் கூட சட்ட வரம்பு மீறப்பட்ட நிலையில் பட்டாக்கள் வழங்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. அதற்கு காரணம் யதார்த்த நிலையில் இவைகளில் எல்லாம் வீடு இல்லா தவர்கள் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நிலம் இல்லாத வர்கள் உழுது கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களை அதிலேயிருந்து வெளியேற்றுவதும், அவர்களிடத்திலிருந்து குத்த கையைக் கோருவதும் நீதியின்பாற்பட்டதாக இருக்காது என்ற நிலையில் அவைகள் செய்யப்படுகின்றன. அவர்களுக்கு உரிய சட்டபூர்வமான உரிமைகள் வலியுறுத்தப்படுகின்றன. அது சமுதாய ரீதியிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நோக்கமாக இருந்தாலும், அதனுடைய மறு பக்கத்தைப் பார்க்கும்போது, தர்மங்கள், தழைக்க இவைகள் எல்லாம் வருமான ஊற்றுக் கண்களாக விளங்கவேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் முழுமையாக அந்த வருமானம், அவைகளிலேயிருந்து கிடைக்காமல் போகுமானால் நம்முடைய நாட்டில் நாம் ஒத்துக் கொண்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும், பெரும்பான்மை யான மக்கள் கோயில்களுக்குச் செல்வதிலும் மசூதிகளுக்குச் சென்று வழிபாடுகளைச் செய்வதிலும் அவர்கள் ஒரு ஆத்ம திருப்தியை அடைகிறார்கள் அகமிய உயர்வு கிடைக்கும் என்று நம்புகிறார்கள். எனவே வயிற்றுக்காக நாம் வழி வகுத்து சட்டங்களை நிறைவேற்றும்போது அகமிய, ஆத்மிக, மக்களுடைய பெரும்பான்மை மக்களுடையஅகமிய ஆத்மீக திருப்தியையும் நாம் கருத்தில் கொண்டு, சட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக வருவாய்த்துறையிலே கோயில் நிலங்களிலும், மசூதி நிலங்களிலும் பட்டா கொடுப்பது என்பது ஒரு சில இடங்களில் நடைபெறுகின்றன. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வேன், தயவுசெய்து அறக்கட்டளையாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு இந்த பொதுவான சட்டத்திலிருந்து விடுதலை அளித்து அவை களுக்கு பட்டா கொடுக்கப்படக்கூடாது. ஒரு வேளை அவைகள் நம்முடைய ரிஜிஸ்ட்ரேஷன் ஆபிசிலே ரெஜிஸ்தர் செய்யப் படுவதற்கு ஏதாவது ஒரு காரணத்தாலே தஸ்தாவேஜுகள் வந்தால் அறக்கட்டளைகள் என்று தெரிந்தால் அந்த அறக் கட்டளைகளை, இந்துக் கோயில்களாக இருந்தால், இந்து ரிலிஜியஸ் என்டோமென்ட் துறையினரையும் அதேபோல் முஸ்லீமாக இருந்தால் வக்ப் துறையினரையும் கலந்துகொள்ளாமல் அவர்களுடைய கருத்தை அறியாமல் ரிஜிஸ்ட்ரேஷன் செய்யக்





கூடாது என்று ஒரு ஸ்டான்டிங் ஆர்டர், அந்த ஆர்டரை அரசு அனுப்புவது ஏற்படுத்துவது பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதோடு அனாதைகள், விதவைகள் என்று ஒரு சிலர் இருக்கக்கூடும். அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே வருமானத் தினுடைய ஆதாரம் இவைகளாகத் தான் இருக்கின்றன. ஒரு விதவை, தனக்கு இருக்கக்கூடிய நிலத்தை தான் உழ முடியாமல் பிறரை வைத்து உழுது, அதிலிருந்து வருமானத்தைப் பெற்று அதை வைத்து உண்டு வாழவேண்டும் என்ற நிலையிலே இருக்கக் கூடிய விதவைகள், எத்தனையோ பேர்கள், அப்படித்தான் அநாதைக் குழந்தைகளும் இருக்கிறார்கள். முன்னோர்கள் சம்பாதித்து வைத்துப் போனது, வயதுக்கு வராத பிள்ளைகள், அதிலிருந்து வருகிற வருமானத்தை வைத்துத்தான் உண்டு வாழவேண்டும் என்ற நிலை எல்லாம் இருக்கிறது. எத்தனையோ அனாதை இல்லங்கள் இந்த வருமானத்தைக் கொண்டுதான் நடைபெறுகின்றன. எனவே நான் கொள்கை அளவிலே இந்தப் பரந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டாலும், சட்டங்கள் பொது வாக இருக்கும் போது, அதிலே விதிவிலக்குகளும் இருக்க வேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டம் யதார்த்த நிலையில் நடைமுறைச்சாத்தியம் என்ற அளவிற்கு ஒரு ஏற்றத்தைப் பெறுகிறது. எனவே தயவுசெய்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இப்போது இந்தச் சட்டத்தின் வாயிலாக இந்தச் சட்ட முன்வடிவு இன்றைக்கு கொண்டுவரப் பட்டு அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. எனவே இப்போது அதிலே ஒரு திருத்தம் கொண்டுவரவேண்டும் என்பது சாத்தியமாக இல்லாவிட்டாலும் வருங்காலத்திலேயாவது அறக்கட்டளைகளுக்கு அதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் அநாதைகளுடைய சொத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். விதவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப் படவேண்டும் என்று சொல்லி சில விதிவிலக்குகளை அளித்தால் இந்தச் சட்டம் சமுதாயத்திலே சமூக நீதியை ஏற்படுத்துவதற்கும் அதே நேரத்தில் யதார்த்த நிலையில் நடைமுறைச் சாத்தியமான தாகவும் இருக்கும் என்ற அளவில் இந்தச் சட்டத்தில் என்னுடைய கருத்தை இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிற இந்த நேரத்தில் சொல்லி, இந்த விதி விலக்குகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டத்தை நான் ஆதரித்து அமர்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரசாங்கத்தினால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டு இருக்கக்கூடிய பயிரிடு குத்தகை விவசாயிகளுடைய நிலுவையில் இருக்கக்கூடிய பாக்கிகளுக்கு ஒரு நிவாரணம் அளித்து முன்மொழியப்பட்டு இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை நான் வரவேற்பதோடு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய குத்தகை விவசா யிகளின் சார்பில் இந்த அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. கோ. வீரையன்] [1990 மே 10

அவர்களுக்கும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் குத்தகை விவசாயிகளின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில் சுமார் 5 லட்சம் முதல் 6 லட்சம் குத்தகை விவசாயிகள், பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்பட்ட வெள்ளம், புயல், வறட்சி, பயிர்கள் நோயால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது, இப்படிப்பட்ட பாதிப்புகளாலே குத்தகை விவசாயிகளால் முழுமையான குத்தகையை அவர்களால் கொடுக்க முடியாமல் அது நிலுவையாக தங்கி நின்றது.

அதோடு மட்டுமல்லாமல் கோயில் அறக்கட்டளைகள் என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனங்கள் எல்லாம் இன்று தமிழகத்திலே 1980–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 75:25 வாரச் சட்டப்படி இல்லாமல் அதற்கு முன்னாலே இருந்த 60:40 என்ற அடிப்படையிலேயும் 40 சதவீதம் குத்தகையை விவசாயிகள் கொடுக்கவேண்டும் என்ற முறையிலே கணக்குகள் வைத்து அவர்கள் பாக்கி என்று நிலுவையில் வைத்து இருப்பதையும் அந்த பாக்கிகளை எல்லாம் விவசாயிகளுடைய தலையின் மீது கடனாக ஆக்கப்பட்டு அவர்கள் அதிலிருந்து மீளமுடியாத அளவிற்கு நீதிமன்றங்களில் வழக்குகள் போடப்பட்டு அதற்காக அவர்கள் பெரும் சிரமத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதையும், நன்றாக அறிவோம். அந்த வழக்குகள் இருந்தபோதுதான் விவசாயிகளுடைய கோரிக்கைகளை இந்த அரசு வந்ததற்குப் பிறகு, ஏற்று, சென்ற ஆண்டு உடனடியாக நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவது தடுக்கப்பட்டு 31-3-90 வரை கோர்ட் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இப்போது அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணக்கூடிய முறையில் இந்தச் சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்து இருக்கிறது. இது 15 வருடமாக தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினை. சேதத்தால் விளையாமல் போன அந்தக் காலத்திற்கும் குத்தகை விவசாயிகள் என்ற காரணத்திற்காக அதற்கு தண்டனையாக விளையாவிட்டாலும் குத்தகையைக் கொடுத்துத் தீரவேண்டும் என்று இருந்த நிலையை தவிர்க்கக்கூடிய முறையில் 15 ஆண்டுக் காலமாக தீர்க்கப்படாமல் இருந்த இந்தப் பிரச்சினைக்கு இப்போது தீர்வு காண்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போல விவசாயிகளின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

12–45 மணி

**1399-ஆம் பசலி ஆண்டுப்படி, 1988-89 ஆம் ஆண்டு வரையுள்ள குத்தகை பாக்கியும் 1989–90 ஆம் ஆண்டு வரையுள்ள குத்தகையையும் சேர்த்து, பழைய பாக்கியில் நான்கில் ஒரு பங்கையும் இப்போது நடப்பாண்டினுடைய குத்தகையையும் 31–3–1991**



1990 மே 10] [திரு. கோ. வீரையன்]

வரையில் கட்டலாம் என்று இந்தச் சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல் 1988–89 வரையுள்ள பாக்கிகளில் மூன்றில் ஒரு பங்கை இந்த விவசாயிகள் கொடுப்பதாக இருந்தால் 5 ஆண்டுகள் சம தவணையிலே 1995 மார்ச் 31 வரையில் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம் விவசாயிகளுக்கு ஓரளவு அந்த சுமையிலிருந்து விடுபட்டு வெளியே வருவதற்கு உதவி செய்யும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்வதோடு இன்னும் சிலவற்றைச் சேர்த்து பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசிடம் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். சிலவற்றை நான் கூறும்போது குறிப்பாக அந்த பாக்கி என்று சொல்லும்போது எப்படி கணக்கிடுவது என்பதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. வருவாய்த்துறை மானியக்கோரிக்கையில் நான் பேசும் போது கூட வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு விவரத்தைக் கொடுத்திருக்கிறேன்.

தருமபுரம் மடத்திற்குச் சொந்தமான ஒரு கிராமத்தில் இருக்கக் கூடிய அந்த விவசாயிகள் 26,200 கலம் கொடுக்க வேண்டுமென்று தருமபுரம் நிர்வாகம் கணக்கு வைத்திருக்கிறது. ஆனால் விவசாயிகளுடைய கணக்கு 5,365 கலம் பாக்கி கொடுக்க வேண்டுமென்று விவசாயிகளிடம் கணக்கு இருக்கிறது. எனவே இந்த தருமபுரம் கணக்கின் அடிப்படையில் 26,200 கலத்திலே நான்கில் ஒரு பங்கு கொடுப்பதா, அல்லது விவசாயிகளுடைய கணக்குப்படி 5,365 கலத்திலே நான்கில் ஒன்று கொடுப்பதா என்பது பிரச்சினையில் இருக்கிறது. அப்படி சில தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளும் இருக்கின்றன.

அதேபோல்தான் 1980 முதல் கோயில் நிலங்கள் 25 என்ற அளவிற்குப் பதிலாக 40 சதவீதம் என்று கணக்கிட்டு அவர்களுடைய கணக்கை வைத்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் அந்த ஒரு கிராமத்திலே மட்டும் ஏறத்தாழ 10,000 கலத்திற்கு மேலே குத்தகை சட்டப்படியே வருகிறது. அதுபோனால் கூட, பாக்கி 16,000 கலம் தான் வருகிறது. அதிலே 1980–லிருந்து 75: 25 என்ற அடிப்படையில் 'கணக்கிட்டு அதைக் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

1989 ஜூன் 30 வரை உள்ள அளவில் பெற்ற தொகை அதாவது இந்தக் காலம் முழுவதும் அவர்கள் இடம் யாரும் குத்தகை கொடுக்காமல் இல்லை. கொடுத்திருக்கிறார்கள். 1989 ஜூன் வரையில் அவர்களுடைய கணக்கிலே நான்கில் ஒரு பங்கு அளவிற்கு அவர்கள் கொடுத்துள்ளது போக மீதி இருப்பது தள்ளு

12–50 மணி

படி செய்யப்படக் கூடியவைகளாகக் கருதி, தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தில் அதற்குரிய மாற்றங்கள் செய்ய முடியாவிட்டாலும் விதிகளிலே

அதற்குரிய முறையில் அந்த விதிகளை மாற்றி நாம்
கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்
கிறேன். ஏனென்று கேட்டால் அத்தோடு மட்டுமல்லாமல், இப்
போதாவது கோயில் நிலங்களிலே 60: 40 என்ற அளவில் குத்தகை
ஏற்பாட்டை மாற்றி 75: 25 என்ற அடிப்படையில் குத்தகையை
மாற்றியமைக்க இந்த அரசு அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்த முறையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்
தர தீர்வு காண முயற்ச்சிக்கவேண்டுமென்று நான் சொல்லும்
போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்
கள் கூட குறிப்பிட்டார்கள். அதைக் கொள்கை ரீதியாக அவர்கள்
ஏற்றுக் கொன்டு நடைமுறையில் இந்தச் சட்டத்தைக் கைவிட
வேண்டுமென்ற முறையிலே அவர் கூறினார். நான் கூறிக்கொள்ள
விரும்புவது போலவே இந்தப்பிரச்சனையில் ஒரு நிரந்தர தீர்வு
காணவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அந்த முறை
யிலேதான் இந்தக் குடிமக்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கை
எடுக்கப்படுவது என்பது தர்மத்திற்கு எதிரானது அல்ல. குடி
மக்கள் பாதுகாக்கப்படுவது என்பதை ஆண்டவன் கூட மகிழ்ச்சி
யோடு ஏற்றுக்கொள்வான். எனவே, அந்த குடிமக்களை பாது
காப்பதிலே, அந்த ஏழைகளை கஷ்டத்திலேயிருந்து விடுவிக்கப்படு
வதிலே இறைவன்கூட மகிழ்ச்சி அடைவான் என்ற முறையிலே
இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த பிரச்னைக்கு ஒரு
நிரந்தரமான தீர்வு முன்னாலேயே கண்டிருக்க முடியும். இந்த
மாமன்றத்திலே 1973-வது ஆண்டு, தி.மு.க. ஆட்சியிருந்த
பொழுது, குத்தகை விவசாயிகளுக்கு: அவர்கள் நிலத்தைச்
சொந்தமாக்கித் தரவேண்டுமென்று ஒரு சட்டம் நிறைவேற்றப்
பட்டது, 11/73 என்ற ஒரு சட்டத்தை இந்த அவை நிறைவேற்றி
மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. அந்தச் சட்டத்தை அன்
றைக்கு மத்தியிலே இருந்த காங்கிரஸ் அரசு தட்டிக் கழிக்காமல்
ஏற்றுக் கொண்டிருக்குமானால் இன்றைக்கு அந்தக் குத்தகை
விவசாயிகளுக்குப் பாக்கி வந்துவிட்டதை எப்படிக் குறைக்க
வேண்டுமென்று விவாதிக்க வேண்டிய அவசியம் தமிழகத்தில்
இல்லாமல் இருந்திருக்கும்: அந்தச் சட்டத்தை அன்றைக்கு மத்
திய அரசு அங்கீகரிக்காமல், ஏற்றுக்கொள்ள மறுத்து, திருப்பி
அனுப்பியதன் விளைவாக. குத்தகை விவசாயிகளுடைய பிரச்னை
எனபது நீடித்துக் கொண்டிருக்கிறது. எனவேதான், என்னதான்
நாம் செய்தாலும்கூட, நிலத்தை வைத்திருப்பவர்களுக்கும்
திருப்தி இல்லை, குத்தகை விவசாயிகளாக இருப்பவர்களுக்கும்
திருப்தி இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட இரு தரப்புக்கும்
திருப்தியற்ற ஒரு நிலை நீடிக்கிறது என்ற காரணத்தாலே
இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணக் கூடிய முறையில்
மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப்
போல், இந்துச் சமயம் மட்டுமல்ல, எந்தக் கோயில்களும் பாதிக்கப்
படாமல் நிரந்தரமாகத் தீர்வு காணக்கூடிய முறையில், அந்தக்
குத்தகை நிலத்தை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்து
விட்டு, அதிலிருந்து வரக்கூடிய நஷ்டஈட்டுத் தொகையை வைத்து





அந்த நிறுவனங்களை நடத்தலாம். அந்த முறையிலே 1973-ஆம்
ஆண்டு இந்த அரசு நிறைவேற்றிய சட்டத்தை, அன்றைக்கு
இருந்த மத்திய ஆட்சியால் அங்கீகாரம் அளிக்கப்பட
வில்லை. இப்போழுது, மத்தியில் ஆட்சி மாறியிருக்ககூடிய சூழ்
நிலையைப் பயன்படுத்தி, தமிழகத்தில் இரு தரப்புக்கும் நிரந்தர
மான ஒரு மகிழ்ச்சிகரமான தீர்வு காணக்கூடிய வகையில், அந்த
குத்தகை விவசாயிகளும் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்
களாக ஆக்கப்படுகிற வகையில்-,குத்தகை பிரச்னை வருகிறது.
பாக்கி பிரச்னை வருகிறது.—அதற்குத் தொடர்ந்து நாம் விதி
விலக்கு அல்லது நிவாரணம் அளிக்க வேண்டியிருக்கிறது என்ற
நிலைமையிலே ஒரு முடிவு கட்டி, 1973-ஆம் ஆண்டு சட்டத்தை
மீண்டும் இந்த அவையிலே இந்த அரசு கொண்டு வந்து இந்த
குத்தகை விவசாயிகளுடைய பிரச்சனைக்கு ஒரு நிரந்தரமான
தீர்வு காணக்கூடிய முயற்சி எடுக்கவேண்டும். இப்பொழுது பாக்கி
யில் இருந்து அவர்களை விடுவிக்க எடுத்திருக்கக்கூடிய முயற்சி
மிகப் பெரிய உதவி செய்யக்கூடியதாக இருக்கிறது. அனால் நிரந்
தரமான தீர்வுக்கு, முன்னாலே எடுத்தமுடிவை மீண்டும் நிறை
வேற்றித் தருவதற்கு இந்த அரசு முன் வரவேண்டுமென்று
இந்த நேரத்திலே நான், கேட்டு இந்த மசோதாவை வர
வேற்று அமைகிறேன், வணக்கம், நன்றி.

திரு. ஜி, பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, பயிரிடும் குத்தகை விவசாயிகளுடைய சட்டமுன்வடிவை
ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.
எனக்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்
கள் விவரமாக கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து பார்த்தால்,
குத்தகை விவசாயிகளுடைய பாக்கிகள் தொடர்ந்து வந்து
கொண்டு, ரெவினியூ கோர்ட்டுகள் மூலமாக விவசாயிகள்
அலைந்துகொண்டிருந்த நிலையிருந்தது, தி.மு.க. ஆட்சி பொறுப்
புக்கு வந்த பின்னர், இன்றைக்கு அந்தக் குத்தகை விவசாயிகள்
ரெவின்யூ கோர்ட்டுக்குப் போகாமல், இடைக்காலத் தடைகள்
நீட்டிக்கப்பட்டிருப்பதன் மூலமாக, விவசாயிகள் நன்மை அடைந்
திருக்கிறார்கள். நிம்மதியாக தங்களுடைய விவசாயத்தைக் கவனிக்
கக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. விவசாயிகள் எப்போதுமே தங்க
ளுடைய குத்தகை பாக்கியை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற
எண்ணம் உடையவர்கள் அல்ல. இருந்தாலும், இயற்கைச் சீற்றத்
தால், வெள்ளத்தால், அதற்கு மேலாகச் சொல்ல வேண்டுமென்
றால், காவிரி நதி நீர் பிரச்னையால். விவசாயிகள் மிகவும்
வேதனைக்குள்ளாகி, தங்களுடைய முழுமையான குத்தகையை
அளிக்க முடியாத ஒரு சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்ட
தோடு அல்லாமல் தங்களுடைய உடைமைகள், நகைகள் அனைத்
தையும் கூட இழந்து நிற்கதியாக நிற்கக்கூடிய நிலைமையிலேதான்
விவசாயிகளுடைய குடும்பங்களை நாம் பார்க்க முடிகிறது.
அந்த வகையில், தொடர்ந்து தம்முடைய குத்தகை பாக்கிகளை
இந்த நேரத்தில் கட்ட முடியாமலிருக்கும்போது, இந்த சட்ட
முன்வடிவில் அனேகமாக, நடப்பாண்டில் ஒரு பகுதி பாக்கியைக்

[திரு. ஜி. பழனிச்சாமி] [1990 மே 10

கட்டினால், அதே போன்று பாக்கி இருக்கக்கூடிய 4 தவணை களில் ஒரு தவணை கட்டினால், பாக்கியைத் தள்ளுபடி செய்ய முடியும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக, இதே போன்ற இயற்கைச் சீற்றங்கள் எதிர்காலத்தில் வந்தால் பாக்கிகளை நிச்சயமாக அவர்கள் கட்டமுடியாத ஒரு சூழ்நிலை மேலும்ஏற்படும், தொடர்ந்து நீடிக்கும். ஆகவே, நடப்பாண்டுக்கு இருக்கக்கூடிய குத்தகை பாக்கிகளை கட்டச்சொல்லி. மீதம் இருக்கக்கூடிய குத்தகை பாக்கிகளை தள்ளுபடி செய்து, அந்தக் கடன்களிலிருந்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்கவேண்டும்.

*12–55 மணி*

அதற்கு மேலாக ஒன்றைச் சொல்ல வேண்டும். இன்றைக்கு கேரளத்தில் இருக்கிற தர்மஸ்தாபனங்கள், கோயில் நிலங்களை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கி, ஈடாகப்பெற்றப் பணத்தைக் கொண்டு அந்த தர்மஸ்தாபனங்கள், கோயில்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. அதைப்போன்று 'பாங்க்' மூலமாக விவசாயிகள் தவணை முறையில் பணத்தைச் செலுத்தி நிலத்தை சொந்தமாக்சிக்கொள்ள அரசாங்கம் நிர்ணயிக்கிற விலையைக் கொடுக்கச் சொல்லலாம். அப்படிச் செய்துவிட்டால் விவசாயி களுக்கும் நிலச் சொந்தகாரர்களுக்கும் பிரச்சனை இராது. அந்த வகையில் சட்டத் திருத்தத்தைத் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, 60—40 சதவீதத்தில் ஏற்படுகிற பாக்கி அதிகமாக இருக்கிறது. பல்வேறு இடங்களில் அதை அமல்படுத்தவில்லை, ஆகையால் 75–25 சதவீதத்தை அமல்படுத்தி னால் வசதியாக இருக்கும். அந்தவகையில் ஏற்பாடு செய்து, குத்தகைப் பாக்கியிலிருந்து விவசாயிகளை விடுவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, அமர்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிரிடும் குத்தகைதாரரை நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

நமது தமிழக முதல்வர் அவர்கள் 1973–ஆம் ஆண்டு இதே போன்ற ஒரு சட்டத்தை இம்மாமன்றத்திலே கொன்டு வந்ததால் தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அன்றைய தினம் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற அபாயகரமான நிலைமையிலிருந்து காபாற்றப்பட்டார்கள். இன்றைய நிலையிலே கூட நமது மாநில, மைய அரசுகள் வேளாண்மைக்கு வழங்கப் பட்டக் கடனை ரத்து செய்வதாக அறிவித்திருக் கின்றன. அதற்கு என்ன காரணம்? பல்வேறு பிரச்சனைகள்



1990 மே 10] [திரு. செ. இராமலிங்கம்]

இருக்கின்றன, காவேரி தண்ணீர் பிரச்சனை, கடுமையான வறட்சி ஆகியவற்றினால் நாம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறோம். இப்போது குத்தகைப் பாக்கியை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு மேற்கண்ட காரணங்கள் பொருந்தும் என்பதை தயவு செய்து நினைவுகூர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிலையில், நான்கில் ஒரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு குத்தகையை விவசாயிகளால் எதிர்காலத்தில் செலுத்த இயலாத நிலைமை இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே, திராவிட முன்னேற்றக் கழக முந்தைய ஆட்சிக்காலத்தில் கருணை மிகுந்த நமது முதல்வர் அவர்கள் 1399–ஆம் பசலிக்கு குத்தகை மட்டும் செலுத்தினால் பழைய குத்தகைப் பாக்கி அனைத்தும் ரத்து என்ற சட்ட முன் வடிவைக் கொண்டுவந்தார்கள். அதைப்போன்று நடப்பாண்டு குத்தகையை மட்டும் செலுத்தினால் பழைய பாக்கிகள் அனைத் தும் ரத்து செய்யப்படும் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவில் குறிப்பிட்டிருப்பதைப் போல 1991 மார்ச் 31–ந் தேதிக்குள் நடப்பாண்டு குத்தகையையும் பழைய பாக்கியில் நான்கில் ஒரு பங்கையும் செலுத்த வேண்டும். அல்லது நடப்பாண்டு குத்தகையையும் பழைய பாக்கியில் மூன்றில் ஒரு பங்கை ஐந்தாண்டுகளில் ஆண்டு தோறும் சம விகிதத்திலும் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் பல வழக்குகள் வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படலாம். தற்போதுள்ள யதார்த்த நிலையில் எந்த நில உடைமை யாளரும் குத்தகைதாரர் கொடுக்கின்ற குத்தகைக்கு ரசீது கொடுப் பதில்லை. நாணயமாக குத்தகை செலுத்துகிற விவசாயியும் ரசீது இல்லாத காரணத்தால் மீண்டும் வழக்கு மன்றம் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாயிக்குப் பிரச்சனை தீராது. இப்படிப் பட்ட குழப்பமான நிலைமை ஏற்படாமல் இருக்க 1989 ஆம் ஆண்டு மார்ச் 31-ந் தேதிக்கு முந்தைய பாக்கிகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கிற ஒரு பழக்கத்தை இங்கே நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். அதன்படி செய்தால் இந்தக் குத்தகைக்கு நாம் ஒரு நிரந்தரமான தீர்வு காண முடியும். பயிரிடும் குத்தகைதாரருக்கு அவர் பயிரி டும் குத்தகை நிலம் சொந்தமாகும். நிலத்தின் மொத்த மதிப்புத் தொகையில் 50 சதவீதம் குத்தகைதாரருக்குத் தள்ளுபடி செய்து கொடுத்து, மீதமுள்ள 50 சதவீதத்தை அவர்கள் பெற்றுக் கொண்டு நில உடைமையாளர்கள் குத்தகைதாரருக்கு அந்த நிலத்தை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறார்கள். இன்றைக்கும் தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் இது நடைமுறையில்

இருக்கிறது. அதையே நாம் சட்டமாக்கினால் இந்தப் பிரச் சனைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணமுடியும். மேலும் வேளாண்மை காரியங்களுக்கு நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி இன்றைய தினம் கடன் உதவி செய்கிறது. இப்படிப்பட்ட அமைப்புகள் மூல மாக தவணை முறையில் செலுத்த குத்தகைதாரர்களுக்கு கடன் வசதி செய்து கொடுத்து, அந்த நிலத்தைச் சொந்தமாக்க முடியும். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

13–05 மணி

திரு. செ. இராமலிங்கம்: எனவே, நான் இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே, சில நிலவுடைமை யாளர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னார் கள். தற்போது எங்கள் மாவட்டத்தில் 70 சதவீதம் நிலங்களுக்கு மேல் கோவில்கள், மடாலயங்கள், 'டிரஸ்டுகளுக்குதான்' சொந்தமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட 'டிரஸ்டுகள்' யாருமே நேரிடையாக விவசாயம் செய்வது கிடையாது. அங்கே ஏழை விவசாயிகள் தான் சாகுபடி செய்கிறார்கள். எனவே எந்த வகையிலும் அவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதன் மூலமாக அவர்கள் பாதிக்கப்படுவது கிடையாது. எனவே கோவில்கள், மடாலயங்கள் இப்படிப்பட்ட 'டிரஸ்டுகளுக்கு' அல்லது நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிப்பது ஒரு முற் போக்குக் கொள்கையாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பல 'டிரஸ்டுகள்' இந்த உச்ச வரம்பு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பல 'டிரஸ்டுகளை' ஏற்படுத்தியிருக்கிறார்கள், எனவே அப்படிப்பட்டவர்களுக்கு அங்கே விதிவிலக்கு அளிக்க வேண்டாம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் தங்களுடைய பாக்கியைச் செலுத்துகிறதிலிருந்து நிவாரணம் அளிக்கக்கூடிய இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஒட்டுமொத்தமாக தற்போது பார்க்கிறபோது உழுகின்ற விவசாயிகள் கணக்கிலே பார்க்கிறபோது நீண்டகாலமாகவே அவர்கள் பயனடையக் கூடிய வகையில் ஏதும் மிஞ்சாத வகையில்தான் இப்போழுது விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. ஒருபுறம் வறட்சி, இன்னொரு புறம் வெள்ளம். இப்படி தொடர்ந்து விவசாயி களைப் பாதித்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே நீண்ட காலமாக இருக்கின்ற பாக்கியை தவணை முறையில் செலுத்துங் கள் என்று சொன்னாலும் கூட எதிர்காலத்திலே கூட அவர்கள்





கட்ட முடியுமா என்ற ஐயம் எழுகிறது. எனவே ஒட்டுமொத்த மாக இருக்கிற பாக்கி அனைத்தையும் தள்ளுபடி செய்து விட்டு இனி வருங்காலத்திலே வேண்டுமானால் குத்தகை பாக்கியை செலுத்துங்கள் என்று சொல்லி நீங்கள் வழி வகுக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் தற்போழுது விவசாயம் பாதிக்கிறபோது பயிர் 'இன்சூரன்ஸ்' திட்டமும் இல்லாத காரணததினால் அவர்கள் பாதிக்கிறபோது தாங்கள் செய்த, உழவுத் தொழிலுக்கு 'இன்வஸ்மென்ட்' செய்திருக்கிற அந்த மூலதனத்தைக் கூட எடுக்க முடியாத நிலை தொடர்ந்திருக்கின்றது. ஆனால் அவர்கள் வேறு தொழிலை செய்ய முடியாத காரணத்தினால் அந்த தொழிலிலே போட்டு உழற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சொல்லப்போனால் அந்த நிலம் தங்களுக்கு சொந்தமில்லை என்ற நிலைமை இருக்கிற காரணத்தினால் எந்த நிலத்தையும் மேலும் முன்னேற்றம் செய்து சீர்படுத்தி அதிக விளைச்சலைப் பெருக்குவதற்கு வழி வகைகள் அவர்களுக்கு இல்லை. எனவே, நிலத்தை அவர் களுக்கே சொந்தம் என்ற நிலையை உருவாக்கினாலேயொழிய அவர்கள் அந்த விவசாய நிலத்திலிருந்து மிச்சப்படுத்த முடியாது. நிலத்தின் சொந்தக்காரர்களைப் பார்க்கிற போது பல இடங் களிலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிலத்தையும் குத்தகைகாரர்கள் இடத்தில் விட்டுவிட்டு குத்தகை யும் இல்லாமல் பல நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காண வேண்டும். எப்படி தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், ஒட்டுமொத்தமாக இப்பொழுது யாரும், எந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்களும் நிலத்தை யாருக்கும் குத்தகைக்கு விடுவதே இல்லை. ஏற்கெனவே நிலத்தை விட்டவர்கள் போக இப்போழுது மீதி நிலம் இருந்தாலும் கூட பலன் தரக்கூடிய நீண்டகால மரங்களை அல்லது 'யூக்யேளிபட்டஸ்', மாமரம் இப்படி மரங்கள் வைக்கிறார்களோயொழிய குத்தகைக்கு விடுவதில்லை. குத்தகைக்குவிட்டால் 'டெனன்ட்ஸ் ஆக்ட்'-லே பாதிக்கப்படுகிறது என்று சொல்லி, புதியதாக யாருக்கும் குத்தகைக்கு விடுவதில்லை. எனவே, ஏற்கெனவே விட்டிருக்கின்ற அந்த குத்தகை நிலத்தை அந்த குத்தகைக்கு ஓட்டுகின்றவர்களுக்கே சொந்தம் என்கிற நிலையை உருவாக்கி அதன் மூலமாக அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்களுக்கும் ஏதோ ஓரளவு தொகை கிடைக்கிறது என்ற நிலைமையை உருவாக்கி அவர்களை காப்பாற்றி, இவர் களையும் காப்பாற்ற கூடிய வகையில் ஒரு நிலையை உருவாக்கு வதை விட்டு, அடிக்கடி இப்படி இங்கே சட்டத்தை உருவாக்கு வதன் மூலமாக எந்த பலனும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் பாக்கியை வசூலிப்பதற்காக....

மாண்புமிகு திரு. கோ.சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த சட்ட முன் வடிவு தேவையில்லை என்கிறாரா?

திரு. கே. அர்ஜுனன்: அடிக்கடி இப்படி சட்டத்தை உருவாக்கி நிலத்துச் சொந்தக்காரர்களுக்கும், குத்தகைகாரர்களுக்கும் சிக்கல்களை ஏற்படுத்துவதைவிட, நிலத்தை உழுபவர்களுக்கே சொந்தம் என்ற நிலையை உருவாக்கிவிடுங்கள்.

13-05 மணி

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போதுள்ள இந்த நிலைக்கு இந்தச் சட்டம் உறுதுணையா? தேவையா? இல்லையா?

திரு. கே. அர்ஜுனன்: தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே இந்த சட்டத்தை வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டுத் தான் பேச ஆரம்பித்திருக்கிறேன். தஞ்சை பகுதியிலே ஆண்டவன் சந்நிதிக்குச் சொந்தமான சில நிலங்கள் இருக்கின்றன. நான் கேட்க விரும்புகிறேன்—ஏழைகளுடைய உழைப்பிலே தான் ஆண்டவன் தன்னை அலங்கரித்துக் கொண்டு பவனி வரவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆண்டவனுக்கு சக்தி இருந்தால் ஆண்டவன் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளட்டும். தன்னுடைய கோவிலுக்கு உண்டான வருவாயைத் தேடிக்கொள்ளட்டும். ஆனால் அந்த ஏழைகளுடைய உழைப்பிலேதான் இந்த ஆண்டவன் தன்னை அலங்கரித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நான் வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் தாக்கல் செய்த மசோதாவில் பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் ஆதரிக்கிறோம் என்ற கருத்தை தெரிவித்ததற்காக முதற்கண் எனது நன்றியை நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதிய பார்வையையும், புதிய தொலை நோக்கினையும், எண்ணங்களையும் பெற்று பரிணாம வளர்ச்சியோடு வளர்ந்து வருகின்ற இந்த உலகத்தில், சோஷலிஸ சமுதாயத்தைக் காண விரும்புகிறோம் என்ற மூல முழக்கம் உலகம் முழுமையும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் உழைக்கின்ற ஏழை பிழைக்கின்ற வழியைக் கண்டு தீர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கலைஞர் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசு இந்த இரண்டு மசோதாக்களையும்--இன்னொன்றையும் நான் தாக்கல் செய்ய இருக்கிறேன்--உங்கள் முன்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

அருமை நண்பர் லத்தீப் அவர்கள் பேசும் போது—பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்க இது கொண்டுவரப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்—கோவில் சொத்துக்களைப்பற்றியும் வஃக்போர்டு சொத்துகளைப் பற்றியும் அறக்கட்டளைகளைப் பற்றியும், இன்னும் பல கட்டளைகளைப் பற்றியும் எல்லாம் எடுத்துச் சொல்லி அங்கெல்லாம் கை வைத்துவிடக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள்.





நான் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது பயிரிடு குத்தகைதாரர்களை எப்படி காப்பாற்றுவது என்பது தான் இந்த மசோதாவின் நோக்கமே தவிர ஆலயத்திலே கை வைப்பதோ, மசூதியிலே கை வைப்பதோ, மாதா கோவிலிலே கை வைப்பதோ அல்ல என்பதை முதற்கண் நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் பிரச்சினைகளை நான் குழப்பிவிடக்கூடாது என்பதற்காக..

THIRU M. ABDUL LATHEEF : That is not the intention of the Government. I never said that it is the intention of the Government. But what is the consequence? That is my worry. The consequential aspect must also be taken into consideration. That is my plea.

Hon. Thiru Nanjil K. Manoharan : The consequence will be perfectly alright if the Hon. Member co-operates. அதற்குப் பிறகு லத்தீப் அவர்கள் இன்னும் சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது சம்பந்தம் அற்ற கருத்து என்ற காரணத்திற்காக நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. வீரையன் அவர்கள் என்னிடம் பேசும்போது அவர் ஒரு விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர் என்றும் ஆக விவசாயத்தைப் பற்றி மிக நுணுக்கமாகத் தெரிந்த நமது உறுப்பினர்களில் அவர் மிக முக்கியமான முன்னணி இடத்தைப் பெறுகிறார் என்ற காரணத்திற்காக அவரது கருத்துகளுக்கு நான் உரிய மரியாதை தந்து பாராட்டுகிறேன். நிலத்திலே உழுகின்ற ஏழை விவசாயிகளை, பயிரிடு குத்தகைதாரர்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும். ஆண்டவனே கூட உங்களைக் காப்பாற்றுவான், பாதுகாப்பான், ஆண்டவனின் அருள் கூட உங்களுக்குக் கிடைக்கும் என்று கடைசி நேரத்தில் ஆண்டவனை நாடி பக்தன் செல்வதைப் போல, வீரையன் அவர்கள் ஆண்டவனை நாடிச் சென்றமைக்காகப் பாராட்டுவதா....

13.10 மணி

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போகிற போக்கிலே நான் ஆண்டவனை நாடியதாக குறிப்பிட்டார்கள். நான் முழுமையான ஒரு நாத்திகன் என்ற முறையில் என்றைக்கும் நான் ஆண்டவனை நாடியதில்லை. ஆள்பவர்களிடம் கோரிய துண்டு. அந்த முறையில்தான் ஆள்பவர்களிடம் கோருகிறேனே தவிர, என்றைக்குமே ஆண்டவனை நான் நாடியதில்லை. அப்படிப்பட்ட, முழுக்க, முழுக்க, உணர்வுப்பூர்வமாக—யாரும்

சொல்லி அல்ல—அப்படி எல்லாம் ஆண்டவன் உண்டாக்கப் பட்டதே தவிர, ஆண்டவன் நம்மை உண்டாக்கவில்லை என்பதிலே உறுதியாகவும், தெளிவாகவும் நான் இருப்பவன் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: முழுமையான ஆஸ்திகத்தின் இறுதி விளைவுதான் நாஸ்திகம் என்பதைப் பல தத்துவ மேதைகள் சொல்லியிருக்கிறார்கள். என்பதை நான் வீரையன் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும், அவர் தனது கருத்துக் களைச் சொல்லி, இன்னும் சில முற்போக்கான கருத்துக்களை இத்தோடு இணைத்து, பாதுகாக்கின்ற வகையில் நீங்கள் வர வேண்டுமென்று அரசையும் வற்புறுத்தி, இந்த மசோதாவை முன் மொழிந்த என்னையும் வற்புறுத்தி இருக்கின்றார்கள். அதற்காக நான் அவருக்கு எனது இதயப்பூர்வமான நன்றியறிதலை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதற்குப் பிறகு இங்கே பேசிய நண்பர்களிலே சிலர் குறிப்பாக வீரையன் அவர்கள் சொன்னதைச் சொல்லிவிட்டேன், பழனிச் சாமி அவர்கள் பேசும்போது நடப்பாண்டு குத்தகையை மட்டும் வாங்கிக்கொண்டு, கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள எல்லா பாக்கி, அரியர்ஸ்களையும் தள்ளுபடி செய்துவிடலாம் என்று குறிப்பிட்டார். நிலத்தின் வருவாயை நம்பி வாழ்கின்ற சில உரிமையாளர்களின் நிலையையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பதை பழனிச்சாமி அவர்கள் எண்ணிப்பார்க்க நான் கேட்டுக்கொள்கின்றேன். பாக்கித்தொகை, அது 25 சதவிகிதம், அல்லது ஒன்றின் கீழ் மூன்று என்பது அதிகம் என்று சொல்லமுடியும் என்று நான் நம்பவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எனதருமை மாண்புமிகு உறுப்பினர் தம்பி அர்ஜுனன் பேசும் போது, ஆதரிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, எதிர்க்கிறேன் என்று குறுக்குச் சவால் விட்டு, அதற்குப் பிறகு கேள்வி கேட்டதற்குப் பிறகு நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லி அமர்ந்ததற்காக அவருக்கும், எனது நன்றியை இந்தச் சந்தர்ப் பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன், இதனுடைய. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அர்ஜுனன் திடீரென்று ஏதோ ஒரு பக்கமாகப் போகிறார். (சிரிப்பு)



திரு. கே. அர்ஜுனன்: நான் எதிர்க்கிறேன் என்று எப்போதும் சொல்லவில்லை. ஏனென்றால். அடிக்கடி இப்படிப்பட்ட லெஜிஸ்லேஷன், கோர்ட், அவசியம் இல்லை. ஒரு முடிவிற்கு— 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற நிலையை உருவாக்குங்கள். அடிக்கடி இப்படி சட்டம் தேவையில்லை என்று தான் குறிப் பிட்டேனேயொழிய, எதிர்க்கிறேன் என்று எப்போதும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் அர்ஜுனன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். லெஜிஸ்லேஷன் என்பது காலத்தின் ஓட்டத்தை ஒட்டி, மாறிக் கொண்டிருப்பது என்பதையும் அவர் மறந்து விடக்கூடாது. நிரந்தரமாக ஒன்று இருந்தே தீரவேண்டும் என்றால் கார் உள்ளளவும், சந்திர, சூரியர் உள்ளளவும், சமுதாயம் தேங்கிய குட்டையாக மாறிவிடுமே தவிர, பலனுள்ள ஒரு சமுதாயமாக இந்தச் சமுதாயத்தை ஆக்க முடியாது. தேவையான திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு நிச்சயம் முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுதான் சட்டம், இன்றைக்குக் கொண்டு வந்த மசோதா தான் சட்டம், இந்தச் சட்டத்தை யாராலும் மாற்ற முடியாது. நாங்கள் மாற்றவே மாட்டோம் என்று சொல்வதன் மூலம், எங்களை நிஜ நிலைமைகளைத் தெரியாதவர்களாகப் படம் பிடித்துக் காட்டுகிற முயற்சியில் அருமைத் தம்பி அர்ஜுனன் அவர்கள் ஈடுபடவேண்டாம் என்று இந்த நேரத்தில் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்கு கொண்டு வந்து இருக்கின்ற இந்தப் பயிரிடு குத்தகைதாரர்கள் மசோதாவின் மையத்தை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

13-15 மணி

1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனிவகை முறைகள்) சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 60/1986). அந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறைத்துரைக்கப் பட்ட பரப்பிடங்களில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் 19ம் நாளன்று செலுத்தப்படாமல் நிலுவையிலிருந்த குத்தகை நிலுவைகளை வட்டியின்றி ஐந்து தவணைகளில் செலுத்துவதற்கு நிவாரணம் அளிக்கப்பட்டது. அவற்றில் கடைசி தவணையானது 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது.

1988 ஆம் ஆண்டில் வட கிழக்கு பருவமழை பொய்த்ததால் பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவைகளைச் செலுத்த முடியாத நிலையில் இருந்தனர்; அதன் விளைவாக அவர்கள்

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1990 மே 10

பெருமளவில் வெளியேற்றப்படுவதற்கு ஆளாக்கப்பட்டார்கள்.
1986 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளன்று செலுத்தப்
படாமல் சேர்ந்திருந்த குத்தகை நிலுவைகளையும் 1990 ஆம்
ஆண்டு பிப்ரவரி 20 ஆம் நாள் வரையிலுமான கால அளவுக்குச்
செலுத்தப்படாமல் சேர்ந்திருந்த குத்தகையையும் நில உடமை
யாளர்களுக்குச் செலுத்தாமைக்காக வெளியேற்றப்படுவதிலிருந்து
1989ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளி
யேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு
சட்டம் 41/1989), தமிழ்நாட்டில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்
களுக்கு, 1990ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை
பாதுகாப்பு அளிக்கப்பட்டது இந்த அவைக்குத் தெரியும்.

நீண்ட கால அளவுக்கு குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு
அளிக்கப்பட்டதன் காரணமாக, குத்தகை நிலுவைகள் பெரு
மளவில் சேர்ந்துள்ளதால், பயிரிடு குத்தகைதாரர்களால்
அந்நிலுவைகளை ஒட்டுமொத்தமாகச் செலுத்துவது இயலாது
என்பதோடு, அவர்கள் பெருமளவில் வெளியேற்றப்படும்
அபாயத்திற்கும் உள்ளாகியுள்ளனர். நடப்பு வருவாய் ஆண்டிற்கு
அதாவது 1989 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல்
1990 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் வரையிலான
ஆண்டிற்கு சேரவேண்டிய குத்தகையை முழுமையாகவும் 1989
ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடைகின்ற
கால அளவுக்கு நிலவுடமையாளருக்கோ அல்லது பப்ளிக் டிரஸ்டு
அமைப்புக்கோ சேரவேண்டிய மொத்த குத்தகை நிலுவைத்
தொகையில் நாலிலொரு பங்கினை (வட்டியின்றி) 1991 ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்றோ அதற்கு முன்போ
பயிரிடு குத்தகைதாரர்கள் செலுத்தினால் அல்லது நடப்புக் கால
குத்தகையை 1991 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம்
நாளன்றோ அதற்கு முன்னரோ முழுமையாகவும், 1989 ஆம்
ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடைகின்ற கால
அளவுக்கு நிலவுடமையாளருக்கோ அல்லது பப்ளிக் டிரஸ்டு
அமைப்புக்கோ சேரவேண்டிய மொத்த குத்தகை நிலுவைத்
தொகையின் மூன்றிலொரு பங்கினை (வட்டியின்றி) ஐந்து சம
ஆண்டுத் தவணைகளிலும் அவர்கள் செலுத்தினால், 1989 ஆம்
ஆண்டு ஜுன் திங்கள் 30 நாளுடன் முடிவடைகின்ற வருவாய்
ஆண்டிற்கும் அதற்கு முந்திய எந்த வருவாய் ஆண்டிற்குமாக நில
உடமையாளருக்கு அல்லது பொதுப் பொறுப்பாட்சி அமைப்புக்கு
செலுத்தப்பட வேண்டியவையும் கருதியுள்ள இச்சட்டம் வெளி
யிடப்படும் தேதியன்று செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ளவையு
மான குத்தகை நிலுவைகள் அனைத்தையும் செலுத்துவதிலிருந்து
அப்பயிரிடு குத்தகைதாரர்களை விடுவித்து, அவர்களுக்கு நிவாரண
மளிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது; மேற்குறிப்பிட்ட
ஐந்து தவணைகளில் முதல் தவணையானது 1991 ஆம் ஆண்டு
மார்ச் 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்
படுதல் வேண்டும். குத்தகை நிலுவை செலுத்தாமைக்காக



1990 மே 10] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

1991 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று அல்லது
அதற்குப் பின்னர், ஆனால் கருதியுள்ள இச் சட்டம் தமிழ்நாடு
அரசிதழில் வெளியிடப்படும் தேதிக்கு முன்னர் வெளியேற்றப்
பட்டிருந்த பயிரிடு குத்தகைதாரர்களுக்கு உடைமையை மீட்டளிக்க
வும் ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

13-20 மணி

தமிழகத்தில் வறட்சி, புயல் மற்றும் வெள்ளம் பாதிக்கும்
சந்தர்ப்பங்களில் குத்தகைத் தொகை நிலுவைகளைச் செலுத்த
இயலாத குத்தகைதாரர்களுக்கு சலுகை அளிக்கும் வகையில்
கடந்த 1968-லிருந்து பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
இச்சட்டங்களின்கீழ் சில வருடங்களில் குத்தகை பாக்கியைத்
தள்ளுபடி செய்வதும், சில வருடங்களில் அவற்றை தவணை
முறையில் செலுத்தவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.
கடைசியாக நிறைவேற்றப்பட்ட 1989-ஆம் ஆண்டு சட்டப்படி
குத்தகை பாக்கி உள்ளவர்களுக்கு 31-3-1990 வரை அவகாசம்
அளித்து அதற்குள் அவர்களை வெளியேற்றக்கூடாது என்று
அறிவிக்கப்பட்டது. பல ஆண்டுகள் குத்தகை பாக்கி இருக்கும்
போது எல்லாவற்றையும் சேர்த்து ஒரு பகுதியை செலுத்தினால்,
மறு பகுதியை தள்ளுபடி செய்யக்கூடிய சட்டம் ஒன்று கொண்டு
வர அரசு விரும்பியதன் விளைவே இந்த புதிய சட்டமாகும்.
இச் சட்டத்தின்கீழ் குத்தகைதாரர்கள் அவர்களுடைய பாக்கியை
செலுத்துவதற்கு இரண்டில் ஒரு வழியை மேற்கொள்ளலாம்.

அதாவது, ஒன்று குத்தகைதாரர்கள் நடப்பு பசலி ஆண்டு
குத்தகைத் தொகை முழுவதையும் பழைய பாக்கியில் நான்கில்
ஒரு பங்கினையும் 31-3-1991-க்குள் செலுத்தவேண்டும். அப்படி
செலுத்தினால் அவர் செலுத்த வேண்டிய மற்ற தொகை
முழுமையும் தள்ளுபடி செய்யப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்
பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அல்லது மேற்கண்ட
வாறு ஒரே தவணையில் செலுத்த இயலாதவர்கள், தவணைகளில்
செலுத்தவதாக ஒத்துக்கொண்டால் பழைய பாக்கியில் மூன்றில்
ஒரு பங்கினை 5 தவணைகளில் செலுத்த வேண்டும். இதில்
முதல் தவணையோடு, நடப்பு பசலிக்கான குத்தகைத்
தொகையை 31-3-1991-க்குள் செலுத்த வேண்டும். தொடர்ந்து
தவணைகளைச் சரியாக செலுத்தினால் மீதி குத்தகைத் தொகை
தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும். இந்தச் சட்டத்
தினால் பயிரிடு குத்தகைதாரர்களுக்கு பெருமளவு சலுகை
ஏற்படுகிறது. அதேநேரத்தில் நிலவுடமையாளருக்கும்
உடனடியாக ஒரு தொகை கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.
இச் சட்டத்தின்கீழ் தொகையை செலுத்த முன்வருபவர்களை
நிலத்திலிருந்து வெளியேற்ற தடை விதிக்கப்படுகின்றது. இச்
சட்டத்தை வருவாய்த்துறை அதிகாரிகள் நிச்சயம் அமல்
செய்வார்கள். இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.
சிவில் நீதிமன்றங்களுக்கு இதில் குறுக்கிடும் உரிமை மறுக்கப்
படுகிறது. இந்தச் சட்டத்தை அரசு பதிவுபெற்ற இதழ்

பிரசுரம் செய்யும் நாள்வரை உள்ள குத்தகை பாக்கிகள் இச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும் என்பதை தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் வீரையன் அவர்கள் இங்கே ஒன்றைக் கேட்டார்கள். பாக்கி குத்தகைத் தொகையை எப்படி கணக்கு எடுப்பது என்பதில் சிக்கல் இருக்கலாம் என்று அவர்கள் கேட்டார்கள். இதனை ஆராய்ந்து அரசு தகுந்த நடவடிக்கையை எடுக்கும் என்ற உறுதியையும் நான் அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து, இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு அவை உறுப்பினர்களை, மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்த கருமத்திலே எவ்வளவு கண்ணுங் கருத்துமாக, இந்த அவையிலே வேறு என்ன நடக்கிறது என்பதைப்பற்றியே கவலைப்படாமல் எவ்வளவு ஊன்றி நின்று இருக்கிறார் என்பது தெரிகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது மிகவும் உஷாராக இருக்கிறேன் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை நிவாரணச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. சட்டமுன்வடிவுநிறைவேற்றப்பெற்றது.





## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990(ஆ.இ.)

13–25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

### (ஊ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த திருத்த சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1990*) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுபவர்கள் ஐவர்; ஆளுக்கு ஐந்து மணித்துளிகள்.

* திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள, 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) முன்வடிவில், விவசாயத் தொழிலாளிகள், விவசாயக் கூலிகள் மற்றும் ஊரக கைவினைஞர்கள் ஆகியோருக்கு தனியார் நிலங்களில் ஆண்டாண்டுக் காலமாகக் குடியிருந்து வருபவர்களுக்கு, குடியிருப்புச் சட்டத்தின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வந்துள்ளது. அதேநேரத்தில்,—தனியார் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அதேநேரத்தில். அரசு புறம்போக்கு நிலங்களில், அதாவது, வாய்க்கால் புறம்போக்கு, வாரி புறம்போக்கு, ஊரணி புறம்போக்கு, மேய்ச்சல் தரைப் புறம்போக்கு போன்ற பகுதிகளில் குடியிருக்கக்கூடிய, கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் இதுபோன்ற சட்டத்தை—நீண்ட நெடுங்காலமாகக் குடியிருந்து வருபவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், அப்படி

* 9–5–1990–ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

முன்வருகின்ற அதேநேரத்தில், அவர்கள் குடியிருக்கக் கூடிய
இடங்கள், 7 சென்ட் அல்லது 10 சென்ட் அதற்குமேல் வைத்
திருப்பவர்கள், வீட்டிற்கு முன்னே வைக்கோற்போர், மரங்கள்
வைத்திருப்பவர்கள், நீண்ட நெடுங்காலமாக அனுபவித்துக்
கொண்டிருக்கக்கூடிய அவர்களுக்கு, 3 சென்ட், 5 சென்ட் என்று
நிர்ணயம் செய்யாமல், அவர்கள் வைத்திருக்கிற இடத்தை—
கிராமத்தில் உள்ளவர்கள் அந்த இடம் எனக்கு, இந்த இடம்
உனக்கு என்ற பிரச்சினை இல்லாத அளவுக்கு—அவர்கள் அனு
பவித்துக் கொண்டிருக்கக்கூடிய இடங்களை பட்டா செய்து
கொடுக்க அரசு முன் வரவேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல், கிராமத்தில் இருப்பவர்களுக்கு இந்தக் குடி
யிருப்புச் சட்டத்தின் அடிப்படையில் பட்டா வழங்குகிற
நேரத்தில், நகரங்களில் குடியிருக்கக்கூடிய தொழிலாளர்கள்,
மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் ஆகிய இவர்
களுக்கும் குடியிருப்புச் சட்டத்தின் அடைப்படையில், பட்டா
கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுச்
கொள்கிறேன. இதுவரை இந்தச் சட்டத்தின் அடிப்படையில்
அரசு எவ்வளவு பேர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கியிருக்கிறது
இனி வருகின்ற காலத்தில் எத்தனை பேர்களுக்கு வழங்க அரசு
இலக்கு நிர்ணயம் செய்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தி
லே அறிந்து கொள்ள விரும்புவதோடு, என்னுடைய கோரிக்கை
யையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்
கொள்கிறேன். இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கும், இந்தச்
சட்டத்தை ஆதரிக்கின்ற வகையிலும் நன்றி கூறி, அமர்கிறேன்.
வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குடியிருப்பு மனைச் சட்டம் கொண்டு வரக்கூடிய
இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல
முன்வருகிறேன். 1971-ஆம் ஆண்டு, குடியிருப்பு மனைச் சட்டங்
கள் கொண்டு வரப்பட்டு, 1972-ஆம் ஆண்டு குடியிருப்பு மனை
களை தமிழகம் முழுவதும், திராவிட முன்னேற்றக் கழகத்தினு
டைய முதலமைச்சராக இருந்த, மாண்புமிகு டாக்டர் கலைஞர்
அவர்கள் வழங்கினார்கள். ஆனால், அந்தச் சட்டத்தின் மூலமாக
ஏழை எளிய, அரிஜன மக்கள் கிராமப்புறங்களில் பட்டா
வழங்கப்பட்டாலும்கூட, பட்டா வழங்கப்பட்ட அந்த இடங்
களில் இருக்கக்கூடிய மரங்கள்—அவர்கள் ஆண்டாண்டுக் காலமாக
வளர்த்து ஆளாக்கின மரங்களை இடத்தினுடைய உரிமையாளர்
கள் அனுபவிக்கக் கூடாது; அதிலே வரக்கூடிய பலன் தருகின்ற
எந்தப் பொருளையும் குடியிருப்பவர்கள் எடுத்துக் கொள்ளக்
கூடாது என்று வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன;
அதேபோல், அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தை ஏற்று,
பல்வேறு அரிஜன மக்கள், ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்ட





அந்தச் சட்டங்களை—வழக்குகள் கோர்ட்டுகளில் நடைபெறுகின்
றன என்று அவர்களுக்கொல்லாம் இதுவரையிலும் பட்டாக்கள்
வழங்கவில்லை. எனவே, கோர்ட்டின் முடிவுக்கு பாதிக்காத
வகையிலே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும்
மென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

13-30 மணி

நகராட்சி, பேரூராட்சிகளில் இதுபோன்று தனியார்
இடங்களில் குடியிருக்கின்ற ஏழை எளியவர்களுக்கும்
கூட பட்டா வழங்குகின்ற சட்டம் அனுமதிக்கவில்லை
என்று சொல்லி மறுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட பேரூராட்சி,
நகராட்சி மற்றும் கிராமப்புறங்களில் வாழ்கிற அந்த மக்களுக்கும்
மனைப் பட்டா வழங்குகிற சட்டத்தைக் கொண்டுவரவேண்டும்,
அதற்கான சட்டத் திருத்தத்தை இந்தச் சட்ட முன்வடிவிலேயே
கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பெரும்பகுதி
தர்ம ஸ்தாபனங்கள், கோயில்கள் போன்றவற்றின் இடங்களில்
தான் ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருந்துகொண்டு இருக்கிறார்
கள். இன்றைக்கு அரசால் வழங்கப்படக்கூடிய இலவச குடியிருப்பு
மனைப் பட்டா அவர்களுக்குக் கிடைக்காத வகையில் அவர்கள்
தவிக்கின்ற நிலைமை இருக்கிறது எனவே அவர்களுக்கு அந்த
தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் கோயில்களுக்குச் சொந்தமான
இடங்களைப் பொறுத்தவரையில் பட்டா வழங்க வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இன்னும் இந்த
சட்டம் வந்ததற்குப் பின்னால் பல்வேறு நிலங்களின் உரிமையா
ளர்கள் தங்களுடைய குடியிருப்புகளில் இருந்து அவர்களை வெளி
யேற்றுகிறார்கள். பட்டா வழங்கி அவர்கள் குடியிருந்தால்
அவர்களுக்கு வேண்டிய பாதைகள், கிணறுகள், பொது ஸ்தாபனங்
களாகிய குளங்கள் கூட தஞ்சை மாவட்டத்தில் தருவதற்கு மறுக்
கப்படுகிறது. அப்படி எல்லாம் பட்டா வழங்குகிறபோது தென்னந்
தோப்பு போன்றவற்றில் குடியிருப்பவர்களுக்கும் பாதை அமைத்
துக்கொடுக்கிற வகையில் சட்டங்களைத் திருத்தி கொண்டுவர
வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்
வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் நம்முடைய அரசால் கொண்டுவரப்
பட்டிருக்கக்கூடிய இந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்
கள் குடியிருப்பு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும்
என்று—இந்தக் கோரிக்கை எங்களுடைய, குறிப்பாக மார்க்ஸிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நீண்ட நாள் கோரிக்கை. அந்தக்
கோரிக்கையை நம்முடைய அரசு கொண்டு வந்திருப்பதை
நான் மனதார வரவேற்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு வீடற்றவர்கள் தமிழகத்தில் ஏறத் தாழ 30 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே அவர்களுக்கெல்லாம் இந்தச் சட்டம் ஒரு பாதுகாப்பாக அமைகிறது. நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் இந்த ஆண்டு 3½ இலட்சம் பேர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்று கூறி இருக்கிறார்கள். அதை விரிவாக்கி அந்த 3½ இலட்சத்தைத் தாண்டி இன்னும் பலருக்கு பட்டா வழங்க வேண்டும் என்றும், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது ஒரு சென்ட், இரண்டு சென்ட் என்ற அளவுக்குத்தான் பட்டா கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி 5 சென்ட் வரையில் அவர்களுக்கு வினியோகிக்கலாம். அதேபோல் இன்றைக்கு அந்த நிலங்கள் தனியார் நிலங்களாக இருந்தாலும் சரி, அல்லது புறம் போக்கு நிலங்களாக இருந்தாலும் சரி, இன்றைக்கு நத்தம் புறம் போக்கு, குளம் புறம்போக்கு, களம் புறம்போக்கு, பாதைப் புறம்போக்கு என்று பல்வேறு தலைப்புகளில் அவர்கள் குடியிருக் கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஒரே தலைமையில் அதாவது ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து விட்டால் அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் பல்வேறிடங்களில் தாலுகா அலுவலகங்களில் அந்த பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை எல்லாம்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பட்டா வழங்குகிற பிரச்சினை அல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கிற நிலங்கள் சொந்தமாக்கப்படுவதற்காக, இப்போது அல்ல, 1971 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம். அதை விரிவுபடுத்தித்தான் அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்து இருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல் : நன்றி. அதாவது அவ்வாறு சொந் தமாக்குகிறபோது.............

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சொந்தமாக்கவேண்டும் என்ற சட்டத்தில் அவரவர்கள் வைத்திருக்கக்கூடிய இடங்கள் எல்லாம் அவர்களுக்குச் சொந்த மாக்கப்படும் என்று சட்டத்தில் இருக்கிறது. அதைத் தீர்மானிக் கக்கூடிய உரிமை சர்வேயர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் 5 சென்ட், 7 சென்ட் என்று வைத்திருந்தாலும் கூட அதை அப்படியே சொந்தமாக்கிக் கொடுக்காமல் 2 சென்ட்தான் அவர்கள் வைத்திருந்தார்கள் என்று சொல்லி கொடுக்கிறார்கள். அது விவசாயிகளைப் பாதிக்கிறது. எனவே அவர்கள் குடி இருக் கக்கூடிய இடங்களை அப்படியே கொடுக்கக்கூடிய அளவுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி றேன்.



திரு. என். பழனிவேல் : அதுபோல் இன்றைக்கு இந்த குடியிருப்பு நிலங்கள் என்பது பல இடங்களில் கோவில் நிலங்கள் கூட இருக்கின்றன. அவற்றில் கூட குடியிருக்கிறார்கள். அவை களை எல்லாம் கூட இதிலே கொண்டுவந்தால் அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நான் ஒரு விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களையும் மற்ற அறக்கட்டளைகளின் நிலங்களை யும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்று சொல் கிறார்கள். நோக்கம் எதுவாக இருந்தாலும் அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால் இவைகளை எல்லாம் முழுமை யாக எடுத்துக்கொண்டால் கோயில்கள், மசூதிகள் போன்ற மத நிறுவனங்கள் எப்படி நடைபெறும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதற்கு, வேறு யாராவது அந்த நிறுவனங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா? அதையும் அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறதா அல்லது வேறு நிறுவனங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்பதையும் அவர்கள் தெளிவாக்க வேண்டும். இதிலே மிகப்பெரிய பாரதூரமான சட்டப்பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. நடைமுறையில், யதார்த்தத்தில் இது பல சிக்கல்களை உருவாக்கும். எனவேதான் விதிவிலக்கு தரவேண்டும் என்று நான் ஏற்கெனவே சொன்னேன்......

13–35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு. பழனிவேல் பேசுகிறாரா? அல்லது திரு. அப்துல் லத்தீப் பேசுகிறாரா?

திரு. என். பழனிவேல்: ஏற்கெனவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இன்னொரு சட்டமுன்வடிவில் பேசும்போது, குத்தகை விவசாயிகளைப் பாதுகாப்பதுதான் எங்களுடைய நோக்கம் என்று சொன்னார்கள். அதேபோல, குடியிருப்புப் பகுதிகளைப் பாதுகாப்பதுதான் இதன் பிரதான நோக்கமே தவிர, மற்றவைகளுக்குள் நான் போகவில்லை. அந்த வகையில் தான் இந்த சட்டத் திருத்தம் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 1968 ஆம் ஆண்டு டிசம்பரில், கீழ வெண்மணியில் 48 பேரை குடிசைகளுக்குள் வைத்து தீயிட்டுக் கொளுத்திய வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப் பட்டதே, அது இதுவரைக்கும் முடிவடையாமலேயே இருக் கிறதே, அதை விரைவாக முடிக்கவேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புத் திருத்த மசோதாவை நான் ஆதரித்து ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. மா. மணிமாறன்] [1990 மே 10

இந்தத் திருத்தம் 1961–வது ஆண்டு கொண்டு வந்த சட்டத்தின் மாற்றாக 1990–ல் வந்திருக்கிறது, 1961-ல் ஒரு திருத்தம் இதற்கு வந்தது. அந்தத் திருத்தம் வந்ததற்குக் காரணம், அன்றைக்கு உச்சவரம்பு சட்டம் கொண்டு வந்து விட்டதால், இருக்கின்ற மிராசுதாரர்கள் எல்லாம் குடியிருப்புகளை காலி செய்யவேண்டுமென்று பலவந்தம் செய்ததன் காரணமாக சட்டம் கொண்டுவராமல், குடியிருப்பு பாதுகாப்பு என்ற முறையில் விட்டுவிட்டார்களே தவிர, சட்டம் கொண்டு வந்து உரிமையைக் கொடுக்கவில்லை, அதற்கு இரண்டாவது சட்டம், 1971லேதான் வந்தது. குடியிருக்கின்ற குடியுரிமைதாரர்களுக்குச் சட்டம், கொண்டு வந்த பெருமை டாக்டர் கலைஞரைத்தான் சாரும், அவரது ஆட்சியைத்தான் சாரும், அந்தச் சட்டம் வருகிற நேரத்தில், பல மிராசுதார்கள் எண்ணினார்கள், அந்தச் சட்டத்தை செயல் டுத்த விடக்கூடாது, முடக்கிவிடவேண்டும் என்று முனைப்பான காரியங்களை ஆற்றினார்கள். அப்படி முனைப்பாக ஆற்றிய காரணத்தை, டாக்டர் கலைஞர் அவர்கள் அவர்களுக்கே உரிய சாதுர்யம் காரணமாக வழக்கு மன்றம் கூட சொல்லாத அளவுக்கு அதனுடைய விலையை நிர்ணயம் செய்து, யாரும் குடியிருப்பைக் காலி செய்யாமல், அதற்குத் தடை வாங்காமல், அந்த இடத்தைக் காலி செய்யமுடியாத அளவுக்கு நிறைவேற்றிய பெருமையும் டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் சாரும்.

அதற்கு அடுத்தாற்போல, கடந்த கால ஆட்சியாளர்கள், ஏதோ ஏழை மக்களிடம் ஓட்டுகளை வாங்கி, விபரம் தெரியாதவர்களிடம் ஓட்டுகளை வாங்கி, சிந்திக்க முடியாதவர்களிடம் வாக்குகளை வாங்கி, ஆட்சிக்கு வந்ததன் காரணமாக, நானும் கூட இதே மன்றத்தில் பலமுறை அன்றைக்கு இருந்த வருவாய்த்துறை அமைச்சரிடம்கோரிக்கை விட்டும் கூட, எந்தவிதமான திருத்தத்தையும் மேற்கொள்ள முடிய வில்லை.

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின்னர்தான், இன்றைக்கு அவர்களிடம் முறையிட்டதன் காரணமாக, வருவாய்த்துறை அமைச்சருடன் ஆலோசனை கலந்து, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர முனைந்தார்கள். அதற்கு முன்னாலே கூட, திலே சட்டங்கள் கொண்டு வராவிட்டாலும் பரவாயில்லை, அதிலே மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் சொன்னதைப் போல, ஒரு கோர்ட்டே நடத்தினார்கள். ஆர். டி. ஓ. அளவில் ஒரு அதிகாரியைப் போட்டு, அவரிடத்தில் 1971-வது வருட சட்டத்தில் இருக்கிறபடி தகுதி உடையவர்களுக்கு, கோர்ட்டில் மனு போட்டு, வழக்கு நடத்தி, வக்கீலுக்குப் பணம் கொடுத்து, அதற்குப் பிறகுதான் 1971-வது ஆண்டு சட்டத்தில் அவர்கள் அனுமதிக்கிற வாய்ப்பு, கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்தது. ஏதோ ஏழைக்கு உதவுகிறவர்கள், ஏதோ ஏழைகளுக்காகவே வாழப் பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, கடந்த கால அரசு 13 ஆண்டுக்காலம்



[1990 மே 10] [திரு. மா. மணிமாறன்]

ஏழைகளை வழக்கு மன்றத்தில் அலைக்கழித்தார்கள். அப்படி
அலைக்கழிக்கின்ற நேரத்தில் யாரும் கோர்ட்டுக்கு போக
விரும்பவில்லை. பட்டாவும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்,
வக்கீலுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை, கோர்ட் செலவும்
செய்ய முடியவில்லை என்று அலுத்துப்போய் ஒதுங்கிக் கொண்டார்
கள். 13 ஆண்டுக்காலம் பட்டா இல்லாமலேயே அவர்களை
அடித்த பெருமை கடந்த கால ஆட்சியைத்தான் சாரும்.
இன்றைக்கு அதை மறைக்கின்ற முகத்தான், இந்தச் சட்டத்தைக்
கொண்டு வந்து இருக்கின்றார்கள். அதிலும் கூட அன்றைக்கு
கலைஞர் அரசு இருந்த நேரத்தில், மிகத் திறமையாகச் செய்
தார்கள், புறம்போக்கு நிலமாக இருந்தால் 7 செண்ட் கொடுக்க
வேண்டுமென்று வகை செய்திருந்தார்கள். தனியார் நிலமாக
இருந்தால் 5 செண்ட் கொடுக்கவேண்டுமென்று வகை செய்தார்
கள். ஆனால் கடந்த கால ஆட்சியில் அதை மாற்றி, ஏன்
இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று, ரொம்ப சந்தோஷமாய்,
7 செண்ட்டை 5 ஆகக் குறைத்தார்கள். ஐந்தை மூன்றாகக்
குறைத்தார்கள். அப்படி குறைத்த பெருமையும் கடந்த கால
ஆட்சிக்கு உண்டு.

ஏதோ இன்றைக்கு வருவாய்த்துறையும், சட்டத்துறையும்
கலந்து முன்பிருந்ததைப் போல, தனியார் இடமாக
இருந்தால் 5 செண்ட் ஆகவும் புறம்போக்கு நிலமாக இருந்தால்
7 செண்ட ஆகவும், கொடுக்கிற வகையில் இந்தச் சட்டத்தையும்
வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச்
செய்கின்ற நேரத்தில் அவர்கள் அங்கேபோகின்ற வழி,
இருக்கிறது. வீட்டுமனைப் பட்டா செய்கின்ற தகுதியோடு
வீட்டு மனைக்குப் போகின்ற வழியையும் எடுத்துவிட்டு இந்தச்
சட்டத்தை அதற்கும் தக்கதாக செய்யவேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்று சொன்னால், என்ன
செய்வார்கள் என்றால், மனை கொடுத்த உடனேயே வேலி
வைத்து விடுவார்கள். பிறகு போலீசுக்கு போகவேண்டும்,
பணம் கொடுக்கவேண்டும், முன்சீப் கோர்ட்டுக்குப் போக
வேண்டும். பணம் கிடைக்காது. ஆகவே எடுக்கின்ற நேரத்தில்
அந்த வழியையும் வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். நிலம் எடுத்து அளந்த உடனேயே, வருவாய்த்துறை
அதிகாரிகள் வந்து அளந்தவுடனேயே, 4 எல்லக்கல்லை கட்டாய
மாக அங்கே ஊன்றுவதற்கு நடவடிக்க எடுக்கவேண்டும்.
அதற்காக அந்த நிலத்தை பயன்படுத்தும் பயனீட்டாளர்களிடம்
பணம் வசூல் செய்து கொண்டு, அந்த நான்கு எல்லைக்கல்லை
யும் அங்கே பதித்துவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்
கிறேன். அப்படியில்லை என்றால், தனியாரிடத்திலும் மற்றவர்
களிடத்திலும் மிக சிக்கல் உருவாகியிருக்கும். கடந்த காலச்
சட்டத்தின்கீழ், மனையை எடுக்கும்போது, மனையில் 2
தென்னை மரங்கள், ஒரு புளிய மரம் இருந்தால், புளிய
மரத்திற்கு மட்டும் பணம் வசூலாகிவிடுகிறது, ஆனால் தென்னை
மரத்திற்குப் பணம் கொடுக்கவில்லை. [illegible]

[திரு. மா. மணிமாறன்] [1990 மே 10

13-40 மணி

பணம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால், அதிலேயிருந்து தேங்காயை எடுக்கக்கூடாது என்று தடுக்கிறார்கள். அதிலே விழிப்பாக இருந்து, அந்த எல்லைக்குட்பட்டு தென்னை மரம் இருந்தாலும், வேறு மரங்கள் இருந்தாலும், அவற்றுக்கும் பணத்தைக் கொடுத்து, மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லை என்றால் நிச்சமாக கோர்ட்டுக்கும் காவல் நிலையத்திற்கும் செல்ல வேண்டியிருக்கும் என்பதை மனதிலே வைத்துக்கொண்டு, அதைச் செய்ய வேண்டும். கடந்த கால அரசு இதைக் கைவிட்டாலும், இன்றையதினம் கொண்டு வந்திருக்கும் ஏழை எளியவர்களின் அரசாக இருக்கும் கலைஞர் அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மதிப்பிற்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு குடியிருப்பு உடைமையாக்குகின்ற மனைகளை உடைமையாக்குகின்ற அடிப்படையை முன்னணியாகக் கொண்டு, கொண்டுவரப்பட்டுள்ள இந்த மசோதாவை அனைவரும் அப்படிப் பட்ட உணர்வுகள் படைத்த காரணத்தால் மனம் திறந்து விரிவாக இல்லாவிட்டாலும், சுருக்கமாக ஆதரித்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் முதற்கண் எனது நன்றியை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்பு நான் கடந்த காலத்தை நினைவுகூர்ந்து ஒரு முக்கியமான நிகழ்ச்சியை உங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன். 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 40/1971 மூன்றாம் பிரிவின்படி இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அப்போது முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற தொடர்ந்து முதலமைச்சராக இருக்கப் போகிற டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த நேரத்தில், நன்றாக நினைவிருக்கிறது, காலஞ்சென்ற, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தைகளில் ஒருவர் என்று பெயரும் பெற்ற மணலி கந்தசாமி அவர்கள் மனந்திறந்து பாராட்டிய பாராட்டுரை களை உங்களது கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். மணலி கந்தசாமி அவர்கள், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த கலைஞர் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது, ரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடினாலும், தெரு ஓரத்தில், சாலை ஓரத்தில், உரிமைகளுக்காகப் போராடி, பிணங்கள் குவிந்தாலும் அதன்மூலம் ஏற்பட முடியாத ஒரு காரியத்தை உங்களது பேனா முனையில் இருந்து தெறித்த ஒரு துளி மை நிறை வேற்றிக் காட்டியிருக்கிறது என்று தெரிவித்த கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 மே 10] [திரு. நாஞ்சில், கி. மனோகரன்]

அதோடு அந்தப் பெரியவர் நிற்காமல், அன்றைக்கு ஏழை விவசாயிகளைப் பார்த்துப் பேசும்போது, நீங்கள் இன்றைக்கு வீட்டுக்குச் செல்லும்போது உங்களது சொந்த வீட்டுக்குச் செல்லுகிறீர்கள் என்ற உணர்வோடு செல்லப் போகிறீர்கள்; தூங்கப் போகிறீர்கள் என்ற கருத்தையும் சொன்னார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கிறேன் என்றால், கலைஞருக்கு மகுடம் சூட்ட வேண்டுமென்பதற்காக அல்ல, அந்த அளவுக்கு தொலை தூரப் பார்வையோடு அந்தக் காலத்திலேயே, அந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்பதற்கும் பெரியவர் மணலி அவர்கள் பாராட்டுகிற அளவுக்கு அவர் தனது கடமையை ஆற்றினார்கள் என்பதற்கும் ஒரு உதாரணம் சொல்வதற்காகத்தான் நான் இதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

13-45 மணி

அதற்கு அடுத்தாற்போல இந்த கருத்தைப் பற்றி, இந்த மசோதாவைப் பற்றிப் பேசிய நண்பர்களிலே சிலர் ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டார்கள். அருமை நண்பர் பழனிசாமி என்று கருதுகிறேன். குடியிருப்பவர்களுக்கு பாதை சில இடங்களில் தேவைப்படுவதாக அவர் சொன்னார். அது நியாயமான கோரிக்கை. இதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே சட்டத்தில் இருக்கிறது. இதை நிறைவேற்றுவதில் இருக்கும் பிரச்சினை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டால் நான் பழனிசாமி அவர்களுக்கு உறுதியளிக்கின்றேன், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அரசின் சார்பாக நான் தெரிவிக் கின்றேன்

வீரையன் அவர்கள் இடைமறித்துப் பேசும்போது குத்தகை தாரர்கள் அல்லது விவசாயிகள் அனுமதி பெற்று பட்டாதாரர் நிலத்தில் போடப்பட்ட வீடு அல்லது குடிசை அமைந்துள்ள இடம் மட்டும் இச்சட்டத்தின் கீழ் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக்கப்படுமா என்ற கேள்வியைக் கிளப்பினார்கள்: நிச்சயம் சொந்தமாக்கப்படும் என்ற உறுதியை நான் வீரையன் அவர்களுக்கு இந்த நேரத்தில் வழங்கிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் வீரையன் அவர்கள் கேட்டதாக எனக்கு நினைவு. அல்லது பழனிசாமி அவர்கள் கேட்டதாக எனக்கு நினைவு. இலவச மனைப் பட்டா 3 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்படும் என்று இங்கே உறுதி அளிக்கப்பட்டது. அது நிறைவேற்றப்படுமா என்று கேட்டார்கள். சென்ற ஆண்டு இலக்கு 3 இலட்சம்; அதைத் தாண்டிற்று. இந்த ஆண்டு 3 இலட்சத்து 25 ஆயிரம்; அது 3 இலட்சத்து 50 ஆயிரத்துக்குப் போனால் கூட நான் ஆச்சரியப்படமாட்டேன் என்பதையும் இந்த நல்ல நேரத்தில் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திலங்களை, ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர்கள் கையடக்கம் செய்துகொண்டு, ஏழைபாழைகளின் வயிற்றில் அடிக்கின்ற கொடுமையிலிருந்து அவர்களை மீட்கின்ற ஒரு அரசை நீங்கள் இன்றைக்குப் பெற்று இருக்கிறீர்கள். அந்த அரசுக்கு, கம்யூனிஸ்ட் கட்சியின் இரு தரப்பினரும், குறிப்பாக இப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டங்களுக்கு மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் நம்பி எஸ்.ஆர். இராதாவை உள்ளடக்கிய அந்தக் கட்சியை சேர்ந்தவர்களும்—மற்ற விஷயத்தில் நாம் மாறுபடக்கூடும்; இருந்தாலும் மாறுபட்டாலும்—இராதா என்னைப் பார்க்கும்போது மாறுபட மாட்டார் என்பது எனக்குத் தெரியும்; ஏனென்றால் 30 ஆண்டுகள், 35 ஆண்டுகள் பழகி இருக்கிறோம்; பழக்க தோசம் யாரையும் விடாது; ஆகையினால் அந்தக் கட்சி இந்தத் திட்டத்தை, இந்த மசோதாவை ஆதரித்ததில் நான் ஒன்றும் அச்சரியப்படவில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொண்டு, இது பற்றி எனது கருத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் உடமை, உரிமை வழங்குதல் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல 40/1971, 3 ஆம் பிரிவின்படி குத்தகைதாரராகவோ அல்லது உரிமைதாரராகவோ 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாளன்று குடியிருப்பு எதையும் அனுபோகத்தில் வைத்து வந்திருந்த வேளாண்மையர் அல்லது வேளாண்மைத் தொழிலாளர் எவரும் மேற்சொன்ன சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து அந்தக் குடியிருப்பின் உரிமையாளராக ஆவார்கள் என்பதையும், அந்தக் குடியிருப்பும் எந்த வில்லங்கமும் இன்றி முழுமையாக அவரிடம் ஒப்படைக்கப் படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆக வீரையன் அவர்களுக்கு இதிலே சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரகக் கைவினைஞர்கள் குடியிருப்பு உடமை, உரிமை வழங்குதல் குடியரசுத் தலைவர் சட்டம் 38/1976, 5–வது பிரிவின்படி குத்தகைதாரராகவோ அல்லது உரிமைதாரராகவோ, 1975 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாளன்று குடியிருப்பு ஏதேனும் தன் அனு போகத்தில் வைத்து வந்திருந்த ஊரக கைவினைஞர்கள் எவரும் மேற்சொன்ன சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து அத்தகைய குடியிருப்பின் உடமையாளராக ஆவார். மேலும் அந்தக் குடியிருப்பும் எந்த வில்லங்கமும் இன்றி முழுமையாக அவரிடம் ஒப்படைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





13–50 மணி

மேற்சொன்ன சட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட நலன்களை நீட்டிப்பதற்காக ஏராளமான வேளாண்மையினரும், வேளாண்மைத் தொழிலாளர்களும், ஊரகக் கைவினைஞர்களும் விண்ணப்பித்திருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்ட முறையை அந்தத் தேதிகளில் குடியிருப்பு எதையேனும் தம் அனுபோகத்தில் வைத்து வந்திருந்த வேளாண்மையர்கள், வேளாண் தொழிலாளர்கள், ஊரகக் கைவினைஞர்கள் ஆகியவர்களோடு கூட, 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று குடியிருப்பு எதையேனும் தம் அனுபோகத்தில் வைத்திருந்த வேளாண்மையர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், ஊரகக் கைவினைஞர்கள் ஆகியோரும், மேற்சொன்ன சட்டங்களில் படியான நலனைப் பெறத் தகுதியுடையவர்கள் என்று ஆக்கும்பொருட்டு, மேற்சொன்ன சட்டங்களுக்குச் சட்டத்திருத்த முன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு உடைமை உரிமை வழங்கல் சட்டத்தின்படி விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளர்கள் தனியார் நிலத்தில் அவர்கள் குடியிருந்த குடியிருப்புகளை அவர்களுக்கே உடைமையாக்கி வழங்கச் சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின்படி 19–6–1971 அன்று ஒரு நிலத்தில் குத்தகைதாரரர்கவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருந்த விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளி பட்டா பெறத் தகுதியுடையவர் ஆகிறார். இச்சட்டம் வருவாய்த் துறை அதிகாரிகளால் செயல் ஆக்கப்படுகிறது.

31–3–1990 வரை இச்சட்டத்தின்கீழ் 1 இலட்சத்து 80 ஆயிரத்து 270 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமக் கைவினைஞர்கள் குடியிருப்பு வழங்கல் சட்டத்தின்படி கிராமக் கைவினைஞர்களும் மேற்கண்ட சலுகைக்கு உரியவர்கள் ஆகிறார்கள். இதன்படி 1–7–1975 அன்று ஒரு நிலத்தில் குடியிருந்த குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருந்த கைவினைஞர்கள் இச்சட்டத்தின்கீழ் பட்டா பெறத் தகுதியுடையவர் ஆகிறார். இச்சட்டமும் வருவாய்த் துறை அதிகாரிகளால் செயலாக்கப்படுகிறது. இச் சட்டத்தின் கீழ் 31–3–1990 வரை 407 பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

மேற்சொன்ன தேதிகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட குடியிருப்புகளை இச்சட்டங்களின்கீழ் கொண்டு வருவதற்கான இத்திருத்தங்கள் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

இத்திருத்தங்களின்படி 1–4–1990 அன்று வரை ஏற்பட்ட குடியிருப்புகளும் இச்சட்டத்தின்கீழ் பயனடையும். இப்பொழுது கொடுத்துள்ள தகவலின்படி விவசாயிகள் அல்லது விவசாயத்

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1990 மே 10

தொழிலாளர்கள் சுமார் 5,500 பேரும், கைவினைஞர்கள் சுமார் 270 பேரும் இத்திருத்தங்களினால் பயனடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடியிருப்புகளைப் பற்றி அருமை மாண்புமிகு உறுப்பினர் தம்பி மணிமாறன் பேசும்பொழுது, குடியிருப்புகளைப்பற்றி ஆணைகள் வெளியிடுவதை, வருவாய்த் துறை அதிகாரிகள் தாமதப் படுத்துவதாகச் சொன்னார்கள். இதைத் தவிர்க்க வேண்டிய ஆணைகள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். நான் ஒன்றை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். 'The wheels of bureaucracy are notoriously slow' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அந்த bureaucracy-யின் 'wheels'—சக்கரங்கள்—கொஞ்சம் கொஞ்சமாக மந்தமாகத்தான் சுழலும் என்பது அதனுடைய பொருள்.

ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பெருமை யோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பணியாற்று கின்ற அத்தனை அதிகாரிகளும் தாமதமின்றி காரியத்தை முடித்துக் காட்டுவதில் தனக்கென்று ஒரு தனி முத்திரை பொறித்து இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மெத்த மகிழ்ச்சி யோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

13-55 மணி

கலைஞர் அவர்களின் கோலாக்காக்களைப் பொறுத்தவரையில் அது வேகமாகச் செயலாற்றும் என்று எனக்குத் தெரியும், உங்களுக்கும் தெரியும். அதைப்போல நமது கல்வியமைச்சரின் கோலாக்காவும் விரைந்து பணியாற்றும் என்று உங்களுக்குத் தெரியும். நமது மதிப்பிற்குரிய பொருளாளர் சாதிக் அவர்களின் கோலாக்காவும் விரைந்து பணியாற்றும் என்றும் உங்களுக்குத் தெரியும். ஆனால், என்னைப் பொறுத்தவரை ஏராளமான நிலங்களுக்கு நான் சொந்தக்காரன். எப்பொழுது பார்த்தாலும் பட்டாக்கள் பட்டாக்கள் என்று என்னை வந்து பார்ப்பவர்கள்தான் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். இந்த நேரத்தில் எனது துறை வேகமாகப் பணியாற்றுமானால் தனி வரிசை—இந்த மன்றம் எனக்குத் தனியாக வழங்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கலைஞர் அவர்களின் அனுமதியோடு இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) பாராட்டு போதும் வேறு என்ன பரிசு தரப்போகிறீர்கள்? நிச்சயமாக அவர் பாராட்டுவார் என்று எனக்குத் தெரியும். என்னைப் பற்றி கலைஞர் அவர்கள் வைத்திருந்த ஒரு கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி விடைபெற விரும்புகிறேன். நீ இயற்கையில் ஒரு சோம்பேறி—எப்படி இதையெல்லாம் செய்யப் போகிறாய் என்று அவர் சந்தேகப்பட்டது உண்டு. ஆனால்,



1990 மே 10] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அவரே பாராட்டுகிற அளவிற்கு நான் நடந்து கொள்கிறேன் என்றால், அதை விட எனக்கு பெருமை வேறு இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லி நான் உங்களுக்காக.....

திரு. ஏ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பாராட்டை எதிர்பார்த்தார்கள். பாராட்டுவதற்கு கூட எங்களுக்கு வாய்ப்பு வைக்காமல். அவரே அந்தப் பாராட்டை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பாராட்டை வழிமொழிந்து, இந்த அவையின் சார்பாக, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகிற அளவிற்கு ஏழை மக்களுக்கு அதிகமான பட்டாக்கள் வழங்கியது வருவாய்த் துறை அமைச்சர் என்கிற பெயர் பெறுகிற அளவிற்கு அவர் செயல்பட வேண்டு மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் என்னை பாராட்டிக் கொண்டால் என்ன, அருமை நண்பர் வரதராசன் அவர்கள் என்னை பாராட்டினால் என்ன? இரண்டும் ஒன்றுதான் என்ற முறையில்தான் உங்களுக்கு இந்த வாய்ப்பை நான் தரவில்லையே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பாராட்டு என்ற பட்டாவையாவது அவர் பெயரில் போட்டுக் கொடுத்திருக்கலாம். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, தெரிவித்ததற்கு பிறகு அந்த பாராட்டுப் பட்டாவை நான் இங்கே வரதராசன் அவர்களுக்கு வழங்க விரும்புகிறேன். (சிரிப்பு). ஆகவே, நான் முன்மொழிந்த இந்த மசோதாவை அருள்கூர்ந்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். பழனிவேல் அவர்கள் என்று கருதுகிறேன். அவர்கள் கீழவெண்மணியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த கடுமையான, கொடுமையான, நினைத்துப் பார்க்கவே முடியாத அந்தச் சம்பவங்களை எண்ணி எண்ணி நாமெல்லாம் துடித்துக் கொண்டிருக்கிறோம். தகுந்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டது. சிலபேர் மேல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. எந்த அளவிற்கு விரைவில் பைசல் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு இந்த அரசு பைசல் செய்யும். (குறுக்கீடு) சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீலில் இருக்கிறது. அதை பைசல் செய்வதற்கான முயற்சியில் இந்த அரசு நிச்சய மாக முற்படும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்து, மேலும் இடையிடையே குறுக்கு கேள்வி கேட்காமல், நேரத்தின்

அருமை கருதி, என்னையும் விட்டு, கலைஞரையும் விட்டு, நாம் அனைவரும் பிரிந்து செல்வோம் என்பதைச் சொல்லி, ஒத்துழைப்புத் தந்த உங்கள் அனைவருக்கும் எனது இதயப்பூர்வமான வணக்கத்தை உங்கள் துணையுடன் சமர்ப்பித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கேயாவது வெளியூருக்குப் புறப்பட்டு விட்டீர்களா? (சிரிப்பு)

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, கடைசியாக நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியாது. நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து செல்வதாகச் சொல்லக் கூடிய அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியாது...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நாள் வெளியூர் போகிறார் அவ்வளவு தான். எல்லோரும் இந்த பிரிவைக் கூட அவரால் தாங்கிக் கொள்ள முடியாது.... (சிரிப்பு)

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, கடைசியாக அவர் குறிப்பிட்டது....

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, என்னையைப் பொறுத்தவரையில்—மாண்புமிகு வீரையன் அவர்களைப் பொறுத்தவரையில்—தவறாக வரக் கூடாது—(சிரிப்பு) நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 990 என்று சொன்னவுடன், இல்லை இல்லை, 1990 என்று இப்படிப்பட்ட அமெண்ட்மெண்டை கொண்டு வருவதில் அவர் சாமர்த்தியசாலி. (சிரிப்பு).

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைசியாக சொல்லும் போது கீழ்வெண்மணியைப் பற்றிச் சொன்னார்கள். நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவிற்கு நடந்தது. குடியிருக்கக் கூடிய குடிசைகளுக்கு கீழே இருக்கக்கூடிய இடம் கூட சொந்தமாக இல்லாமல் இருந்த ஏழைகள் 44 பேர்கள் உயிரோடு வைத்து எரிக்கப்பட்டார்கள். அது சம்பந்தமாக எரிக்கப்பட்டவர்கள் மீதும் வழக்கு வந்தது. எரித்தவர்கள் மீதும் வழக்கு வந்தது. அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று எரித்தவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்கள். எரிக்கப்பட்டவர்கள். தண்டிக்கப்பட்டு, அவர்கள் முழுவதும் தண்டனையை அனுபவித்துவிட்டு. இப்போது கடைசியாக அதிலே ஆயுள் தண்டனை பெற்றிருந்த கீழ்வெண்மணி கோபால் அவர்கள் 12 ஆண்டுகள் இருந்துவிட்டார்கள் என்ற அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, கடந்த ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுக்கப்பட்டார்கள்.





ஆனால் எரித்தவர்கள்மீது இருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்தது. ஏறத்தாழ அது 13 ஆண்டுகளுக்கு மேலானது. கடந்த காலத்திலே இருந்த அரசு அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது. இப்போதாவது அப்படிப்பட்ட ஒரு நிலைமையை யாரும் மீண்டும் செய்வதற்கு துணியாத அளவிற்கு, அந்த எரித்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, உச்சநீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கை முடிவுக்குக்கொண்டு வந்து ஏழை எளிய மக்களுக்கு ஒரு நம்பிக்கையை, அவர்களுக்கு ஒரு துணிவை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு அந்த வழக்கை முடிவுக்குச் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

14-00 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வெண்மணியிலே எரித்தவர்கள் என்று குறிப்பிட்டார்களே அவர்கள்மீது 1970-ஆம் ஆண்டிலே சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கு முடிவுற்று, அவர்கள் விடுதலை செய்யப்பட்ட காரணத்தால் உடனடியாக அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு, அப்பீல் செய்தது. ஆனால் அப்போது செய்யப்பட்ட அந்த அப்பீல், வழக்கு இன்னமும் முடிவு அடையவில்லை. இன்னும் சொல்லப்போனால், மறுபடியும் ஒருமுறை, 1985-ஆம் ஆண்டு தான் உச்சநீதிமன்றத்திலே அந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எடுத்துக்கொள்ளப்பட்டதே தவிர, மறுபடியும் தொடர்ந்து விசாரணை நடைபெறவில்லை. கிட்டத்தட்ட 18, 19 ஆண்டுகள் ஆவதாக எனக்கு நினைவு. மீண்டும் அந்த அப்பீலை விரைவுபடுத்தி அந்த வழக்கை நடத்துவதற்கு இந்த அரசு எல்லா வகையான தீவிர முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU M. ABDUL LATHEEF : Mr. Speaker Sir, before, we take up the third reading of the Bill, we are also prepared to pay rich encomiums to the Hon. Minister for Revenue. I have already submitted for his consideration that we have to go into the constitutional, and legislative compentency of this Bill and we will have to find out whether it suffers from any constitutional infirmity. After all, if the legislation is conditioned by the rule of law—legislation should not be for the sake of legislation; the social aspirations, the social justice should be met fully. Therefore, in so far as it is going to affect a particular section, it will create not only the social absurd resentment but abhorrance against this Bill. I think that without there being any exemption and passing this Bill with something like bull dozer majority without there being any consideration to any

section of the society it is definitely going to create social and other consequences. Therefore, let us have some exemption. In any law, the legislation worth the name, is conditioned by the rule of law. we should find out whether it is ultra vired of the Constitution. In the interests of all of us, I still submit that temples, mosques and such other charitable institutions should stand exempted.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வழக்கறிஞராக இருக்கிற காரணத்தால், அவரோ அல்லது வேறு யாரோ வழக்கறிஞரோ, ஆலோசனை கலந்து இதைச் சொல்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. 1971-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அதே சட்டத்தினுடைய தொடர்ச்சிதான் இப்போது இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிற சட்டம். அதனால் அந்தச் சட்டத்திற்கு எந்தப் பாதகமும் இல்லாதபோது, இந்தச் சட்டத்திற்கும் எந்தவிதமான பாதகமும் இருப்பதற்கு நியாயமே கிடையாது. அவர்கள் அடிக்கடி ஆண்டவன், கோயில், இவைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். நம்மைவிட அதிகமாக ஆண்டவன் அந்த ஏழை மக்களைப்பற்றிக் கவலைப்படுகிறவர் என்பதை நாம் ஞாபகத்திலே வைத்துக் கொள்ளவேண்டும். வீணாக ஆண்டவனைக் குற்றம் சாட்டுகின்ற அத்தகைய ஒரு தவறை திரு. அப்துல் லத்தீப் போன்றவர்கள் செய்யக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

14-05 மணி

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை 11-5-1990 காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள். எதுவுமில்லை.

143984
600 008.
D
V311,31N9
M90.22.3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.